# ம.ப.பெரியசாமித் தூரன்

சிற்பி பாலசுப்பிரமணியம்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

ம.ப. பெரியசாமித் தூரன்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம்இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. படஉதவி : நேஷனல் மியூசியம். புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# ம.ப.பெரியசாமித் தூரன்

சிற்பி பாலசுப்பிரமணியம்

சாகித்திய அக்காதெமி

**Ma.Pa. Periasami Thooran** - *Monograph in Tamil by Sirpi Balasubramaniam, Sahitya Akademi,* 2000 Rs.25

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு 2000
ISBN 81-260 - 0825-3

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்
ரவீந்திர பவன், 35 பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110 001

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டிடம்
டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001

'குணா பில்டிங்' 304 – 305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை – 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் 400 014.

விலை ரூ.25

*Laser Typesetting : Imphala Graphic 2336440*
*Printing : Mani Offset, Chennai - 600 005.*

# உள்ளுறை


1. வாழ்வும் பணியும் — 7

2. அன்பில் திளைத்த கவிதை — 17

3. சிறுகதைப் படைப்புக்கள் — 36

4. நாடகங்களும் கீர்த்தனைகளும் — 45

5. கட்டுரைச் செல்வம் — 59

6. சிறுவர் இலக்கியம் — 68

7. அறிவியல் நூல்களும் பிறவும் — 78

8. கலைக்களஞ்சியப் பணி — 89

9. பாரதி தமிழ் — 96

10. தூரன் என்றொரு மனிதர் — 104

பின்னிணைப்புக்கள் — 116

# 1. வாழ்வும் பணியும்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தை எல்லா வகையிலும் ஆக்கப்பூர்வமாக வழிநடத்திய பேராற்றல் மகாகவி பாரதியார். இலக்கியம் மட்டுமின்றி, வாழ்வியல் கண்ணோட்டங்களையும், மனப்பக்குவங்களையும், நம்பிக் கைகளையும், செயல் முறைகளையும் உருவாக்குவதிலும் அந்த மகாகவியின் பங்கு குறிப்பிடத் தக்கது.

விடுதலைப் போராட்ட உணர்வையும் உரத்தையும் வழங்கியவர் அவர். சமுதாய நீதியின் சாளரங்களை அகலத் திறந்து விட்ட பணியும் அவருடையதுதான். இலக்கியத்தை, கலையை அவற்றின் தூய கோலத்தில் கண்டு துய்க்கும் நெறிகளும் அவராலேயே துலக்கப்பட்டன. இதன் காரணமாகப் பாரதியாரை வழிகாட்டியாகவும், குருநாதராகவும் கொண்ட ஒரு சிந்தனையாளர் பரம்பரை ஒவ்வொரு துறையிலும் உருவாயிற்று.

பாரதியாரின் தடம் பற்றி நடந்து, பின்னர் தங்கள் தனித் தன்மைகளால் சிறந்த பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி, ச.து.சு. யோகியார், கம்பதாசன் எனக் கவிதைப் பரம்பரை வளர்ந்தது. அவ்வாறே சிறுகதை இலக்கியத் துறையில் சாதனை வரலாற்றைத் தொடங்கிய மணிக்கொடிப் படைப்பாளிகளும் பாரதியாரையே தங்கள் ஆதர்சமாகக் கொண்டு பயணம் செய்தனர். இதழியலும் கூடப் பாரதியாரின் நடைகளையும் உத்திகளையும் கற்றுக் கொண்டு புதுப் பொலிவு பெற்றது.

1921 – ல் பாரதியார் மறைவுக்குப் பின் தேசியத்தில் பேரெழுச்சி அலை வீசிய காலத்தில் இளந்தலைமுறையினர் அதன் வீச்சில் ஈர்க்கப்பட்டனர். அவ்வாறு ஈர்க்கப்பட்ட இளம் படைப்பாளிகளில் ஒருவர்தான் 1926 – ல் கல்லூரி மாணவராக இருந்த ம.ப.பெரியசாமித் தூரன்.

பன்முகங்களிலும் சுடர்விடுகின்ற மணிவிளக்குப் போல் இலக்கியத்தின் ஒவ்வொரு வகையிலும் தன் மேதைமை வெளிச்சத்தைப் படரவிட்டவர் பெரியசாமித் தூரன். கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், சிறுவர் இலக்கியம் என வித விதமான துறைகளில் விந்தைகளைச் செய்தது அவருடைய எழுதுகோல். உணர்ச்சியில் கோலங்கள் போடும் இலக்கியப் படைப்பாளிகள் அறிவியல் வல்லுநர்களாக இருப்பது மிகமிக

அரிது. தூரன் உளவியல் நூல்களையும் அறிவியல் நூல்களையும் மனங்கொள்ளும்படி எழுதுவது எப்படி என்பதைத் தம் நூல்களால் எடுத்துக்காட்டியவர்.

இவற்றுக்கு அப்பால் தேர்ச்சியான ஒரு தொகுப்பாசிரிய ராகவும், நுட்பமான பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தவர் தூரன்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனிப்பெரும் சாதனை என்று மதிப்பிடப்படுகின்ற கலைக்களஞ்சியம், குழந்தைகள் கலைக்களஞ்சியம் இரண்டினுக்கும் முதன்மை ஆசிரியராக இருந்தவர் பெரியசாமித் தூரன்.

> **தூரனின் எழுத்தோவியங்களில் முதன்மை இடம் பெறுவது கவிதை. "இலக்கியத்திலே கவிதை முதலிடம் பெறுகின்றது. சொற்செறிவிலா, அரவ வனப்பிலா, சந்த இனிமையிலா, யாப்பு வடிவத்திலா, அணி அலங்காரத் திலா, கற்பனைத் திறத்திலா, கவிஞனுடைய உள்ள ஒளியிலா – இவையெல்லாம் சேர்ந்த பாகுக் கலப்பிலா என்று அறுதியிட்டுக் கூற இயலாத ஒரு மாயவிஞ்சை கவிதைக்குண்டு"**

என்பது தூரனின் ஆழ்ந்த நம்பிக்கை.

கவிதை எழுதுகின்ற தன் அனுபவத்தை அவரே பின்வருமாறு கூறுகின்றார்:

> ***"வில்லெனும் சிறைக் கட்டினை – நீங்கி***
> ***வேகம் கொண்டு பாய் அம்பு போல்***
> ***சொல்லையும் கடந்தேகுமோர் – உள்ளத்***
> ***துடிப்பிலே கவி சொல்லுவேன்"***

(இளந்தமிழா / கவிக்கனல்)

சொல்லையும் கடந்து நிற்கும் உணர்வின் பரிமாணங்களைக் கவிதைகளாக வடித்துத் தந்தவர் தூரன்.

தூரனின் பேருழைப்பைப் பெற்ற மற்றொரு இலக்கிய வகை சிறுகதை. பெரிதும் கொங்கு வட்டாரக் கிராமத்து மக்களையும் அவர்களின் வாழ்வுச் சிக்கல்களையும் மையமாகக் கொண்டவை அவருடைய சிறுகதைகள். கதைமாந்தரின் உளவியலை வெகு நுட்பமாக இழை இழையாய்ப் பின்னியமைத்துள்ள கலைத்திறம் அவருடைய சிறுகதைகளின் தனித்திறம்.

**''உள்ளத்தில் எத்தனையோ கிளர்ச்சிகள் குமுறு கின்றன. அவற்றில் ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு அதிலே குறிப்பிட்ட மின்னல் போன்ற பகுதியை விளக்கினால் அதுவும் சிறுகதைதான்''**

என்பார் தூரன். கவிதை அவருக்குள் ஒரு மின்னல் என்றால் சிறுகதையையும் அவ்வாறே தரிசிக்கின்றார்.

சின்னச் சின்ன – ஆனால் சிந்தனை அழகும், களி துளும்பும் கலை நேர்த்தியும் கொண்ட அருமையான கட்டுரை இலக்கியத்தையும் படைத்தவர் தூரன். எடுத்துக் கொண்ட எந்தப் பொருளையும் உயிரோவியமாகப் படைக்கத் தெரிந்த கலையுள்ளம் இவருடையது. ஆங்கில இலக்கியக் கட்டுரை களின் பாணியிலே புதிய முறையிலே கட்டுரைகள் எழுதி இருப்பதாக ஆசிரியரே குறிப்பிட்டிருக்கின்றார். எண்ணச் சித்திரங்களாகவும், மனப் பதிவுகளாகவும் அமைந்தவை தூரனின் கட்டுரைகள்.

ஓரங்க நாடகங்களாகவும், முழு நாடகங்களாகவும் ஏழு சிறப்பு மிக்க நாடகங்களைப் படைத்து நாடக ஆசிரியராகவும் தூரன் திகழ்கின்றார். வரலாற்று நாடகம், இலக்கிய நாடகம், சமூக நாடகம் எனப் பல்வகை நாடகங்களையும் அவர் தந்திருக்கின்றார். மறைந்து நிற்கும் அகமனதின் இயக்கங்களை நாடகமாகச் சித்திரிக்கும் நுட்பமான கலைத்திறனுக்கும் இவர் தம் நாடகங்கள் சான்றாக விளங்குகின்றன. புதிய தமிழ் இலக்கியத்தில் வலிமைக் குறைவோடு இருக்கும் நாடகத் துறைக்கு அவர் ஆற்றிய பணி போற்றுதலுக்குரியது.

முதிர்ந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள் அனைவரும் குழந்தைகளுக்காக இலக்கியம் படைப்பதில் ஆர்வம் காட்டியவர்கள் அல்லர். தங்கள் செயல்துறை அதுவல்ல என்று அவர்கள் கருதியிருந்தமையே அதற்குக் காரணம். ஆனால் வளரும் தலைமுறைக்கு வளம் சேர்ப்பதும் தங்கள் கடமை என்பதைப் பாரதியார், தாகூர், சத்யஜித்ரே முதலிய படைப்பாளிகள் உணர்ந்து செயலாற்றியுள்ளனர். 'மானுடத்தின் தந்தை மழலைச் சிறுமகவே' (The Child is the Father of the Man) என்ற கருத்தில் ஆழ்ந்த ஈடுபாடுடைய தூரன் விரிவாகப் படைத்த சிறுவர் இலக்கியம் இளைய தமிழுக்கு வளமான விளைவாகும். சிறுகதை, நாவல், கவிதை எனப் பல்வகைப் படைப்புகளையும் நல்கியுள்ளார் தூரன்.

பாரதி ஆய்விலக்கியத்துக்குக் கணிசமான நன்கொடை நல்கியவர் தூரன். பாரதியாரின் கட்டுரைச் செல்வங்களைக் கண்டுபிடித்துக் கொடுக்கிற பணியானாலும், பாரதியாரின் படைப்புக்குள் நுழைந்து திறனாய்வுகளை நிகழ்த்துகின்ற தெளிவானாலும் தூரனின் மதிநுட்பத்துக்கும் கலை நுட்பத்துக்கும் அவை சான்றுகளாய் நின்று நிலவுகின்றன. 'பாரதி தமிழ்' என்ற தூரனின் ஆய்வு நூல் வெளிவராமல் போயிருக்குமானால் மகாகவி பாரதியாரின் படைப்புச் செல்வத்தில் ஒரு பெரிய பகுதியை என்றென்றைக்குமாக இழந்து போயிருப்போம்.

ஒரு முழுமையான கலைஞராகத் தூரன் விளங்கியிருக்கிறார் என்பதற்கு இசைக்கலையில் அவர் கொண்டிருந்த ஈடுபாடும், மனதை உருக்குகின்ற கீர்த்தனைகளின் வெளிப்பாடும் அடையாளங்களாகும். இந்த உருக்கத்துக்கு எதிர்த் துருவம் போல் தோன்றும் அறிவியல் உலகிலும் இம்மாமனிதரின் பயணம் திகழ்ந்துள்ளது.

மொழிபெயர்ப்புத் துறையிலும் முனைப்புக் காட்டியவர் தூரன். அவ்வாறே நாட்டுப்புறப் பாடல்களிலும் நாட்டம் நிரம்பியவர். பண்டைப் பெருநூல்கள் சிலவற்றைத் தரமான பதிப்புகளாகக் கொண்டு வருவதிலும் ஆர்வம் காட்டியவர் தூரன். அறிஞர்களின் வியப்புக்கும் பாராட்டுக்கும் காரணமான கலைக்களஞ்சியத் தொகுதிகளால் அழியாப் புகழுக்கு உரியவராகவும் ஆனவர் ம.ப. பெரியசாமித் தூரன்.

வளம் செறிந்த இப்படைப்பாளியின் வாழ்க்கை ஓயாத உழைப்பையே படலங்களாகக் கொண்ட காவியம்.

காவிரி தமிழ் பண்பாட்டின் காவல் தெய்வம். தமிழ்நாட்டின் வரலாறு, கலை, இலக்கியம் அனைத்தும் காவிரிக் கரையில் செழுமை பெற்றிருக்கின்றன. ஆதார சுருதியாய் ஓடும் இந்தக் காவிரியின் கரையில்தான் பெரியசாமித் தூரன் பிறந்தார்.

*''இளமைக் கனவுத் தேன்*
*என்னுளத்தே பாய்ச்சிவிட்ட*
*வளமை சுரந்து வரும்*
*வளர்வனப்புக் காவிரியே!*
*எண்ணமெல்லாம் கொண்டு வந்தாய்;*
*என்னிளமை கொண்டு வந்தாய்''*

என்று அவர் மொழிவதிலிருந்தே காவிரியின் இயற்கைச் சூழலில் அவர் பெற்ற இலக்கியத் தூண்டுதலைக் குறித்து அறிந்து கொள்ள முடிகிறது.

பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சி சார்ந்த மஞ்சக்காட்டுவலசு என்ற காவிரிக் கரைச் சிற்றூரில் 1908 – ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 – ம் நாளில் பிறந்தவர் ம.ப.பெரியசாமித் தூரன். பழனிவேலப்ப கவுண்டர் பாவாத்தாள் ஆகியோர் அவருடைய அன்புப் பெற்றோர்கள் ஆவர். குடும்பத் தொழில் வேளாண்மையாக இருந்தது. சின்னஞ்சிறு வயதிலேயே அவர் தம் தாயாரை இழக்க நேர்ந்தது.

பெரியசாமி என்பது பெற்றோர்கள் வைத்த பெயர். கல்லூரி மாணவராக இருந்தபோது வெள்ளை அரசாங்கத்துக்குத் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காகத் தூரன் என்ற புனைபெயரை வைத்துக் கொண்டார். தூரன் என்பது அவருடைய குலக்குறிப் பெயராகும். தொலை நோக்குப் பார்வை உடையவர் என்ற பொருளிலும் இப்பெயர் அவருக்குப் பொருத்தமாக அமைந்தது எனலாம்.

பெரியசாமியும் அவரது தங்கையும் குழந்தைப் பருவத்தில் தாயாரை இழந்தமையால் தாய்வழிப் பாட்டியிடம் செம் மாண்டம் பாளையம் என்ற கிராமத்தில் சில காலம் வளர்ந்தனர். பாட்டி இதிகாசக் கதைகளையும், தஞ்சாவூர்க் கள்ளன், மதுரைக் கள்ளன் முதலிய வேடிக்கைக் கதைகளையும் சொல்லுவார். பெரியசாமியின் படைப்புத் திறனை வளர்ப்பதற்கும், பிற்காலத்தில் குழந்தைகளுக்கான கதைகள் எழுதுவதற்கும் பாட்டியின் கதைகள் தூண்டுதலாய் அமைந்தன.

தன் கிராமத்துக்கு அருகில் இருக்கும் மொடக்குறிச்சியில் தொடக்கக் கல்வி பயின்றார் பெரியசாமி. சிறுவயதிலேயே ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, அறப்பளீசுரர் சதகம் ஆகிய நூல்களை மனப்பாடம் செய்தார். தன் சிறிய தந்தையார் அளித்த வில்லிபாரதம், நந்தனார் சரித்திரக் கீர்த்தனை ஆகிய நூல்களிலும் ஈடுபட்டார்.

தொடர்ந்து ஆறாம் வகுப்பு முதல் பள்ளியிறுதி வகுப்பு வரை ஈரோடு மகாசன சபா உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். அப்போது ஒரு கன்னட நாயக்கர் இல்லத்தில் தங்கிப் படித்த காரணத்தால் கன்னட மொழியில் பயிற்சி ஏற்பட்டது. வகுப்பில்

எப்போதும் முதல் மாணாக்கராக இருந்த பெரியசாமி கணிதப் பாடத்தில் தனிச்சிறப்புப் பெற்றவராக விளங்கினார்.

1926–27 – ம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் இடைநிலை (இன்டர்மீடியட்) வகுப்பில் கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களை முதன்மையாக எடுத்துப் பயின்றார். 1929 – ம் ஆண்டில் பி.ஏ. (கணிதம்) பட்ட வகுப்பில் சேர்ந்தார். 1926 முதல் 1931 வரை மாநிலக் கல்லூரியில் பயின்ற காலம், தூரனை ஒரு தேசபக்தராகவும், பத்திரிகை ஆசிரியராகவும், இலக்கியப் படைப்பாளியாகவும் உருவாக்கிய மாற்றத்தின் காலம் என்று கூறலாம்.

பிற்காலத்தில் பாரத ரத்தினமாக உயர்ந்த சி.சுப்பிரமணியம், கல்வியாளர் நெ.து.சுந்தரவடிவேலு, நீதிபதிகளான அழகிரிசாமி, கைலாசம், அரசியல்வாதியான ஓ.வி. அளகேசன், உயிர்த் தோழர்களாக விளங்கிய ல.கி. முத்துசாமி, கே.எஸ். பெரியசாமி ஆகியோர் சென்னை விக்டோரியா மாணவர் இல்லத்தில் ஒரு கூட்டுப் பறவைகளாய்த் திகழ்ந்திருந்தனர். 'Sir, We were a nest of singing birds' என்று சாமுவேல் ஜான்சன் குறிப்பிட்டது போல நட்புகளின் கூடாயிருந்த மாணவப் பருவம் அது.

மகாத்மா காந்தியடிகளின் ஆற்றல் மிக்க தலைமையில் சுதந்தரப் போராட்டம் வேள்வி நெருப்பாய் ஓங்கி நின்றது. பெரியசாமியும் நண்பர்களும் நாட்டுப் பற்றில் தீவிரம் கொண்டிருந்தனர். 1931– ம் ஆண்டு மார்ச் மாதத் தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருந்த போது பகத்சிங், சுகதேவ் ஆகிய வீர இளைஞர்கள் தூக்கிலிடப்பட்டனர். இந்த நிகழ்ச்சியால் மனம் வெதும்பிய பெரியசாமி தம் பி.ஏ. இறுதியாண்டுத் தேர்வை எழுதாமல் புறக்கணித்தார்.

1929 – ல் பெரியசாமியும் நண்பர்களும் தங்கள் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும், ஆழமாகக் கலந்துரையாடவும் கருதியமையால் **வனமலர்ச் சங்கம்** என்ற அமைப்பை உருவாக்கினர். எழுத்தாற்றலும், படைப்புத் திறனும் உடையவர்களின் தாகத்தைத் தணிக்கும் வண்ணம் சங்கத்தின் சார்பில் **பித்தன்** என்னும் இதழையும் தொடங்கினர். முதலில் உருளச்சுச் செய்யப்பட்ட இவ்விதழ், தேவை காரணமாக அச்சிலும் வெளிவந்தது. தமிழ் முனிவர் திரு.வி.க அவர்களின் சாது அச்சுக்கூடத்தில் 'பித்தன்' அச்சிடப்பெற்றது. இவ்விதழின் ஆசிரியராகத் திகழ்ந்தார் தூரன். அவருடைய எழுத்துக் கலைக்குப்

பயிற்சிக் கூடமாக அமைந்தது 'பித்தன்' இதழ். அவருடைய கதைகள், கட்டுரைகள், கவிதைகள் ஒவ்வொரு இதழிலும் இடம் பெற்றன.

'பித்தன்' வெளிவந்து கொண்டிருந்த காலத்தில் பெரியசாமித் தூரன் திரு.வி.கவை அடிக்கடி சந்திக்க நேர்ந்தது. அப்போது மகாகவி பாரதியாரின் எழுத்தோவியங்கள் பல சுதேசமித்திரன் இதழில் சிதறிக் கிடப்பதையும், அவற்றைத் திரட்டி எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் திரு.வி.க. இவரிடம் வலியுறுத்திச் சொன்னார். ஏற்கெனவே பாரதியார் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த தூரன் சுதேசமித்திரன் அலுவலகம் சென்று பல நாட்கள் அரிதின் முயன்று பாரதி எழுத்துக்களைச் சேமித்துத் தொகுத்தார். தூரனின் மாணவப் பருவத்தில் நிகழ்ந்த ஒப்பற்ற பணி என இதனைக் குறிப்பிடலாம்.

1931– ல் பட்ட வகுப்புத் தேர்வு எழுதாமல் விட்டுவிட்ட நிலையிலும், கோபி செட்டி பாளையம் வைரவிழாப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது. 1933 – ல் தி.சு. அவினாசிலிங்கம் அய்யா தொடங்கிய இராம கிருஷ்ண வித்யாலயத்தில் பணியாற்ற வேண்டும் என சி.சுப்பிரமணியமும் நண்பர்களும் விடுத்த வேண்டுகோளை ஏற்றுப் போத்தனூர் சென்றார். போத்தனூரில் வித்யாலயம் இருந்தபோது மகாத்மாவை வரவேற்று உபசரிக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. பின்னர் பள்ளி, பெரியநாயக்கன் பாளையத்துக்கு இடம் மாறியபோது அங்கு ஆசிரியராகச் சென்ற தூரன் 1933 முதல் 1947 வரை வித்யாலயத்தில் பணிபுரிந்தார். விரைவில் தலைமை ஆசிரியராகவும் விளங்கினார். தன்னலமற்ற சேவைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார் தூரன்.

இராமகிருஷ்ண வித்யாலயத்தில் பணியாற்றிய காலத்தில் பிற இலக்கியப் படைப்புகளோடு தெள்ளத் தெளிந்த தமிழில் கீர்த்தனைகள் புனையவும் தொடங்கினார். தான் பெற்று வந்த எளிய ஊதியம் கூடத் தன் செலவுகளுக்கு அதிகம் என்று குறைந்த ஊதியம் பெற்றுக் கொண்டார். வித்யாலயத்தில் அவர் ஆற்றிய அரும்பணிகளைக் குறித்து நிறுவனர் தி.சு. அவினாசி லிங்கம் 'மகத்தான சேவை, பக்தி மிகுந்த சேவை, ஆர்வமிகுந்த சேவை, அர்ப்பணிப்பு என்று சொல்வார்களே அப்படிப்பட்ட சேவை' என்று பாராட்டி மகிழ்ந்துள்ளார்.

1939 – ஆம் ஆண்டு (மே – 1) தன்னுடன் பணிபுரிந்த நண்பர் வழுக்குப்பாறை வெங்கடாசலத்தின் சகோதரி காளியம்மாளை

மணம் புரிந்து கொண்டார். இவர்களுக்கு சாரதாமணி (சின்னுசாமி), வசந்தா (ராமசாமி), விஜயவல்லி (மாரிமுத்து) என மூன்று பெண்மக்களும், சுதந்திரகுமார் என்று மகனும் உள்ளனர்.

1946 – ம் ஆண்டு தமிழ்நாட்டில் காங்கிரஸ் அமைச்சரவை அமைத்த போது தி.சு. அவினாசிலிங்கம் கல்வி அமைச்சரானார். தமிழ் மொழியின் வளர்ச்சியை மனதில் கொண்டு தன்னாட்சி உரிமை உடைய தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற சங்கத்தை அவர் உருவாக்கினார். அதன் சார்பில் தமிழில் கலைக் களஞ்சியம் பல தொகுதிகளாக வெளியிடத் திட்டம் வகுக்கப்பட்டது. இந்த மாபெரும் பணிக்குப் பொறுப்பான முதன்மை ஆசிரியராகப் பெரியசாமித் தூரன் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1947 அக்டோபரில் கலைக் களஞ்சியப் பணி தொடங்கப் பெற்றது. பத்தொன்பது ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி, அருமையான தொகுதிகளை வெளியிட்டார். பின்னர் குழந்தைகள் கலைக் களஞ்சியத்தை உருவாக்கும் கடமையை மேற்கொண்டார். பொதுக் கலைக் களஞ்சியம் 1968 – லும், குழந்தைகள் கலைக் களஞ்சியம் 1976 – லும் முழுமை பெற்றன. தூரனின் சாதனைப் பணி இது.

1947 – ம் ஆண்டு முதல் 1980 வரை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயலாளராகத் தூரன் பணிபுரிந்தார். எழுத்தாளர் கல்கியும் தொடக்க நாட்களில் செயலாளராக உடன் இருந்ததுண்டு. இவர்களுடைய நன்முயற்சியின் பயனாக மதுரை, திருவாரூர், கோவை, சென்னை, தில்லி ஆகிய நகரங்களில் தமிழ் இலக்கிய விழாக்கள் சிறப்புற நடைபெற்றன. ஒரு முறை இலங்கையிலும், தமிழ் மாநாடு நடத்தப்பெற்றது. உலகத் தமிழ் மாநாடுகளுக்கு முன் ஒத்திகையாக இம்மாநாடுகள் அமைந்தன என்று ம.பொ.சிவஞானம் குறிப்பிடுகின்றார்.

இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், சாகித்திய அக்காதெமி, திரைப்படத் தணிக்கைக் குழு, அனைத்திந்திய எழுத்தாளர் மன்றம் எனப் பல அமைப்புகளிலும் உறுப்பினராக இருந்து ஆலோசனைகள் வழங்கி வந்தார். தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்குத் தலைவராகவும், கர்நாடக இசைக் கல்லூரி ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், தமிழ் இசை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் சிறப்புறப் பணியாற்றினார் தூரன்.

உடல் நலிவைப் பொருட்படுத்தாமல் ஓய்வின்றிக் கலைக் களஞ்சியப் பணிகளை மேற்கொண்டிருந்த தூரன் 1980 – ல் கடுமையாக நோய் வாய்ப் பட்டார். உடலின் இடது பக்கம்

செயலிழந்து படுக்கையிலேயே இருக்க நேரிட்டது. ஆசிரியத் தொழிலுக்கும் கலைக் களஞ்சியப் பதிப்புப் பணிக்கும் நடுவே எண்ணற்ற இலக்கியப் படைப்புகள் தந்தவர் தூரன். கவிதைகள் முதல் குழந்தைகள் இலக்கியம் வரையிலும், மொழி பெயர்ப்புகள் முதல் பண்டை நூற்பதிப்பு வரையிலும் அறுபதுக்கு மேற்பட்ட நூல்களை ஆக்கித் தந்தவர் தூரன். உடல் நலம் குன்றிய போது மகாகவி பாரதியாரைக் குறித்து முழுமையான திறனாய்வு எழுதாமல் விட்டுவிட்டோமே, குயில் பாட்டுக்கும் கண்ணன் பாட்டுக்கும் புதிய முறை விளக்கங்கள் கூறாமல் காலம் கழிந்துவிட்டதே என்று மனம் வருந்தினார். அன்பர்கள், குடும்பத்தார் துணையோடு பாரதியாரைக் குறித்துப் பத்துச் சிறு நூல்களை நோய்வாய்ப்பட்ட நிலையிலும் சொல்லிச் சொல்லி உருவாக்கி தந்தார்.

தூரனின் இலக்கியத் தொண்டுக்காக அரசும், நிறுவனங்களும் வழங்கிய விருதுகளும், பரிசுகளும் ஏராளமானவை.

1968 – ம் ஆண்டில் கலைக் களஞ்சியப் பணி நிறைவுற்ற வேளையில் இந்திய அரசு 'பத்மபூஷன்' விருது வழங்கியது. தமிழக அரசு 'கலைமாமணி' விருதும், தமிழிசைச் சங்கம் 'இசைப் பேரறிஞர்' விருதும், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் தங்கப் பதக்கமும் தந்து தூரனைக் கௌரவித்து மகிழ்ந்தன. தமிழக முதல்வராக விளங்கிய காமராசர் பொற்கிழி வழங்கியும், எம்.ஏ. சி. அறக்கட்டளையினர் பரிசு அளித்தும் பெருமைப்படுத்தினர். 'செந்தமிழ்க் கலைச் செல்வர்' (தருமபுரி ஆதினம்), 'பெருந்தமிழ்ச் செல்வர்' (நக்கீரர் கழகம்), 'செந்தமிழ்ச் செல்வர்' (தமிழ்நாடு அரசு) எனப் பாராட்டும் பட்டங்களும் குவிந்தன.

தமிழ் இலக்கியத்திற்கும், இசைக்கும், நாடகத்துக்கும், அறிவியலுக்கும் வளமான பங்களிப்பைத் தந்த தூரன் 1987 – ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 – ம் நாளன்று காலமானார்.

பெரியசாமித் தூரன் மாணவப் பருவத்தில் நாட்குறிப்பு எழுத முனைந்தது உண்டு. முறையாகத் தொடரவில்லை; ஆனால் தம் இறுதி நாட்களில், படுக்கையில் கிடந்தவாறு தம் நினைவுகளை அசை போட்டுத் தம் மக்களைக் கொண்டு சில குறிப்புகளைப் பதிவு செய்திருக்கின்றார். அச்சில் இன்னும் வெளிவராத அக்குறிப்பேட்டின் முகப்பில் கூறுகின்றார்.

*''வாழ்க்கையிலே எத்தனை நினைவுகள்*
*இன்பமான நினைவுகள்*
*துன்பமான நினைவுகள்*
*தலைநிமிர்ந்து பெருமைப்படத்தக்க நினைவுகள்*
*தலைகவிழ்ந்து சிறுமைப்படத்தக்க நினைவுகள்...*
*இப்படி எத்தனை எத்தனை நினைவுகள்*
*ஆயிரம் கோடி நினைந்து எண்ணுவன*
*என்கிறார் ஔவைப் பாட்டி*
*எண்ணங்கள், எண்ணங்கள் –*
*இவற்றாலேயே மனிதன்*
*உருவாக்கப்பட்டிருக்கிறானோ*
*மறைக்கப்பட வேண்டிய நினைவுகள்*
*பறையடிக்க வேண்டிய நினைவுகள்*
*மனிதனை எத்தனை வண்ணக் கலவையாக*
*இவை தீட்டுகின்றன.*
*நானே நினைவுகளோ?''*

ஆம். தம் மாசுமறுவற்ற வாழ்க்கையாலும், பசுமையான படைப்புகளாலும் நிலைத்த நினைவுகள் ஆகிவிட்டார் பெரியசாமித் தூரன்.

# 2. அன்பில் திளைத்த கவிதை

**''கவிதையின் அன்பணைப்பிலே உயிர் தழைகின்றது; இளமையடைகிறது அரவ வளப்பாலும், சந்தத்தாலும், கற்பனையாலும், உணர்ச்சி வேகத்தாலும், தொனிப் பொருளாலும் உயர்ந்த கவிதை வெளித் தோற்றத்தை ஊடுருவிச் சென்று யாவற்றிற்கும் பொதுவாக நிற்கும் உள்ளுணர்வோடு கலக்கிறது. இந்த ஆன்ம ஒருமைப் பாட்டால் விளையும் அனுபவமே கவிதையின் ஒப்பற்ற சிறப்பாகும்.''**

(தூரன் கவிதைகள் : முன்னுரை)

உயர்ந்த கவிதையை இவ்வாறு ஆன்ம ஒருமைப்பாட்டு அனுபவமாகக் காண்கிறார் ம.ப.பெரியசாமித் தூரன். பல்வேறு இலக்கிய முகங்கள் அவருக்கு இருந்தபோதிலும் கவிதையே அவற்றுள் முதன்மை சான்றது.

சின்னஞ்சிறு வயதிலேயே கவிதையில் ஈடுபாடும், மாணவப் பருவத்திலேயே கவிதைப் படைப்பில் கிளர்ச்சியும் கொண்டவராகத் தூரன் விளங்கினார். அந்த உயிர்த் தொடர்பைக் குறித்துப் பின்னாளில் உணர்ச்சி பொங்க அவர் குறிப்பிட்டுள்ளார்.

**''அன்று மலர்ந்த உள்ளம் இன்றும் கவிதையிலேயே பெருமகிழ்ச்சியடைகிறது; என்றும் அது அப்படியே தான் இருக்கும். மாறினாலோ வாழ்வே முடிந்த தாகவே நான் கருதுவேன். கவிதையில்லாத ஒரு வாழ்வும் வாழ்வாகுமா?''**

கவிதையின்றி வாழ்வு பிறிதொன்றில்லை என்று கருதும் அளவுக்குத் தீவிரமான நெருக்கத்தைக் கவிதை இலக்கியத் தோடு உருவாக்கிக் கொண்டவர் தூரன்.

***''இன்பமே, பாட்டே, இயற்கையே, ஒளியே***
***உன்னுடன் ஒன்றாகச் செய்***
***அன்பு ததும்பும் உள்ளம் வேண்டும்!***
***என்னைப் பாட்டாகவே செய்துவிடு''***

என்று கல்லூரி மாணவராக இருந்தபோது எழுதிய நாட்குறிப்பில் (கையெழுத்துப் பிரதி 18.12.1927) தூரன் வேண்டுகிறார். புனைவியல் கவிஞர்களான வேர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, கீட்ஸ், இரவீந்திர நாத தாகூர் ஆகிய கவிஞர்களின் கவிதைகளில் அந்த வயதில் அவருக்கு இருந்த ஈர்ப்பையும் நினைவுக் குறிப்புகளில் சுட்டிக் காட்டியுள்ளார். இளமையிலேயே அரும்பிய கவிதைக் கலை அனுபவம் முதிர முதிர, செறிவும், செழுமையும் மிக்க படைப்புகளாக உருக்கொண்டது.

முதல்கவிதைத் தொகுப்பான **இளந்தமிழா** 1949 - ஆம் ஆண்டில் வெளிவந்தது. தொடர்ந்து **மின்னல் பூ** (1957) **நிலாப்பிஞ்சு** (1959), **பட்டிப் பறவைகள்** (2ம் பதிப்பு 1961) ஆகிய கவிதை நூல்கள் வெளியாயின. அனைத்துக் கவிதைகளையும், முன் தொகுப்பில் இடம்பெறாத புதுக்கவிதைகளையும் ஒன்றாகத் தொகுத்து 1962 - ம் ஆண்டில் **தூரன் கவிதைகள்** என்ற தொகுதி வெளியிடப்பெற்றது. பட்டிப் பறவைகள் நூலைத் தவிர்த்து, நூற்றி எழுபத்தொரு கவிதைகள் இத்தொகுதியில் இடம் பெற்றிருந்தன.

தூரன் கவிதைகளில் இயற்கை, குழந்தைப்பருவம், தேசியம், காதல், தத்துவம், சமுதாய உணர்வு எனப் பல்வகைப் பாடுபொருள்கள் இடம்பெற்றுள்ளன. அனைத்தின் உள்ளும் அங்கிங்கெனாதபடி ஒளிக்கிரணங்களைப் பாய்ச்சிக் கொண்டிருப்பது அன்பின் சுடர் என்பதை அடையாளம் காணமுடியும்.

> "அன்பரசு வீற்றிருக்கும்
> அருளாட்சி மேல்நிலையில்
> அவ்வாட்சி ஓங்கிவிட்டால்
> அனைத்துலகும் இன்ப மன்றோ?
> அன்பு செய்தால் தேவநிலை
> அதையழித்தால் விலங்காவோம்"
> (இளந்தமிழா, ப.100)

என்ற கோட்பாட்டின் அடிச்சரடு அவருடைய எல்லாக் கவிதைகளிலும் இழையோடுகின்றது. ஒரு மென்மை ஒவ்வொரு கவிதையிலும் மெருகிழைக்கிறது.

தூரன் கவிதைகளுக்கு வலிவும் வனப்பும் தரும் பாடு பொருள்களில் இயற்கையே தலையாயது எனலாம். கிராமியச் சூழலில் வளர்ந்த காரணத்தாலும், காவிரியாற்றங்கரையில்

இளமைப் பருவத்தைக் கழித்த காரணத்தாலும் அவருடைய உள்ளத்தில் இயற்கை அழகும் பொலிவும் தனியிடம் பெற்றன. நகர வாழ்க்கையின் சந்தடியும் ஆரவாரமும் மறந்து கிராமத்துக்குப் போகிற போதெல்லாம் காவிரியிடம் அடைக்கலம் புகுவது அவருக்கு வழக்கமாய் இருந்தது.

**''...... இருவரும் காவிரிக்குச் சென்றோம் நாங்கள் விரும்பும் காவிரி**

**பள்ளத்தை மேடாக்கியும் மேட்டைப் பள்ளமாக்கியும் காவிரி அழகாக விளங்கியது. அது தனது சிருஷ்டிகளை மாற்றி மாற்றிப் புது அழகைச் சமைக்கின்றது'' *(17.4.1931)***

**''தினமும் ச.து.சு.வோடு காவிரிக்கு. இன்று போகவில்லை. பார்க்குக்குப் போனோம். காவிரிக்குப் போகாதது வருத்தமாக இருக்கிறது'' *(சித் – 7)***

என்றெல்லாம் கல்லூரி மாணவப் பருவத்தில் எழுதிய தூரனின் நாட்குறிப்புப் பேசுகின்றது. திரும்பத் திரும்பக் காவிரி ஊட்டிய கவிதை உணர்வை அவர் நினைவு கூர்கின்றார்.

**''இளமைப் பருவத்திலே காவிரித்தாய் எனக்குக் கவிதைப் பாலூட்டி வளர்த்தாள். எத்தனை எத்தனை நாட்கள் காவிரியின் கவிதை வனப்பிலே உள்ளம் திறை கொடுத்து அந்த நந்தா எழில் அரசியின் மருங்கிலே வெள்ளை மணல் மேடுகளிலும், ஓங்கி வளர்ந்த மரச் சோலைகளிலும், ஆடிப் பெருக்கிலே முழுகித் தேய்ந்து வழுவழுப்பெய்திய சிறுசிறு பாறைகளிலும் அமர்ந்தும், நின்றும் நினைவிழந்து கழித்திருக்கிறேன்! தெளிந்து ஓடும் தண்ணீரின் அருகிலே விளையாடி ஈரமணலிலே கட்டிய கோட்டைகள் எத்தனை! கவிதை பொங்கக்கட்டிய மனக்கோட்டைகள் தாம் எத்தனை!''**

*(தூரன் கவிதைகள் – முன்னுரை)*

வாழ்நாள் முழுவதும் தன் இயற்கை நேசத்துக்கு வளம் தந்த காவிரியை வனப்பூறும் சொற்களால் கவிதையில் வடித்தெடுத்து மகிழ்ந்திருக்கின்றார் தூரன்.

*" வெள்ளை மணற் பரப்பினிலும்*
*விரியும் மலர் மருங்கினிலும்*
*துள்ளு புனற் பாட்டினிலும்*
*தோழருடன் நான் கழித்த*
*கனவெழுப்பும் சீரிளமைக்*
*காலத்தை எண்ணி எண்ணி*
*மனம் குழைந்து நிற்கின்றேன்*
*மறதியென்றும் கொண்டதில்லை....."*

(இளந்தமிழா – ப.34)

மணற்கோட்டையும், மனக்கோட்டையும் கட்டுதற்கும் அணிற்பிள்ளைகளைப் போல் ஆடல் நடத்துதற்கும், நாணமுடன் உடல் வளைத்துச் சிந்தா முறுவலுடன் செல்லுகின்ற நந்தா எழில் அரசி காவிரி காரணமாகத் திகழ்கிறது.

நதியைப் போலவே வெள்ளைக் குதிரைகள் போலவும், புள்ளிக் கருநாகம் போலவும் நுரை கக்கி எழும் அலைகடலும் அவர் கவிதைக்கு அழகு கூட்டுகின்றது. கார்த்திகை மாதத்தில் மழை இருட்டில் வெண்பிறைக் கீற்று அவர் கவிதை உள்ளத்தைச் சிலிர்த்தெழச் செய்கின்றது.

*"கந்தருவச் சிறுமியர்கள் கருநீல வான்கடலில்*
*உந்தி விளையாடும் ஓடத்தில் ஒளியுருவோ?"*

(இளந்தமிழா – ப.80)

என்று காணக்கிடைக்காத கார்த்திகை மூன்றாம் பிறையைக் கண்டு உவகையில் ஆழ்கின்றார்.

மழையும், மழையால் கவின்பெறும் மண்ணின் எழிலும் தூரனின் நெஞ்சைக் கொள்ளையிடுகின்றன. 'அழகு நடனம்' என்ற கவிதையில் இந்த இன்பம் உவகையின் பொங்கலாக உருவெடுக்கின்றது.

*"மழை முழுகிய தழைகள் அசையும்*
*பளபளப்பைப் பார்*
*மாலை வானில் பரிதி வட்டத்*
*தக தகப்பைப் பார்"*

(மின்னல் பூ – ப.17)

என்று குதூகலிக்கின்றார். மழைத் துளியைப் பற்றி இன்னொரு கவிதையில். (கார்த்திகைப் பிறை)

*"ஓலை நுனியில் ஒளிர்முத்துப் பூத்தது போல்*
*ஆலும் துளி விழுந்து அமைதி பெருக்கிற்று"*

என்று கூறுகின்றார்.

இந்த அழகின் லயிப்பு இளம் பிராயத்திலிருந்தே அவரிடம் கால் கொண்டிருக்கின்றது என்பதற்கான ஆதாரத்தை அவருடைய நாட்குறிப்புத் தெளிவுப்படுத்துகின்றது.

**"மழை நின்றுவிட்டது. மரத்தின் ஒவ்வொரு இலை நுனியிலும் ஒரு முத்துத் துளி தங்கியிருக்கிறது. இளங்காற்று அசையும் போதும், பறவைகள் கிளைகளில் அமரும்போதும் அம்முத்துக்கள் உதிர்கின்றன"**

*(நாட்குறிப்பு – 9.8.1929)*

ஒவ்வொரு பருவ காலமும் தனக்கே உரிய மெருகையும் மாற்றத்தையும் மரங்களுக்கும் செடி கொடிகளுக்கும் உண்டு பண்ணுகின்றது. இளவேனிற் காலத்து மாமரம் பழங் கந்தை உடைநீத்துப் பசுமை போர்த்துக் கொள்ளும் போது கவிஞருக்குள் வினாக்கள் விம்முகின்றன. தென்றல் வந்ததாலா அல்லது குயிற் பாணன் தீம்பாடல் கேட்டதாலா, எதனால் இப்புதுக்கோலம் என வினவுகின்றார்.

*'தீட்டரிய பசுமஞ்சள் செம்பசுமை தாம் குழைத்த*
*புதுப்பட்டு மெல்லாடை'*

போர்த்துக் கொள்ளும் மாமரத்தினிடம், 'ஆண்டுதொறும் எழிலிளமை' அடைகின்ற தந்திரத்தை வினவுகின்றார். இதயம் நிறைந்த அன்புதான் இளமை ரகசியமோ என்று கேட்பதன் மூலமாக, அன்பு – இயற்கையின் உயர்ந்த தத்துவமாக இலங்குவதைச் சுட்டிக் காட்டுகின்றார்.

இயற்கை அழகில் இறை திருக்கோலம் காணும் உள்ளப்பாங்கு தூரனுக்கு இருந்தது. தொலைவில் தெரிகிற மலையின் அழகுகளையெல்லாம் எடுத்துக் கூறிய பின்னர் அதன் நீல நிறம் அன்னை காவிரியின் நிறமாக ஒளிர்வதை மிக அருமையாகப் பரவச நிலையில் உரைக்கின்றார்.

*"நீலத்துக் குள்வளர் நீலம் – என்றன்*
*நெஞ்சை யிழுத்திடும் நீலம்*

*ஆலம் பழுத்த நல் நீலம் – எங்கள்*
*அன்னை பயங்கரி கோலம்''*
*(மின்னல் பூ – ப.39)*

என உணர்ச்சியுடன் மொழிகின்றார்

அந்திப் பொழுதைக் குன்றின் உச்சியிலிருந்து கண்டு அண்டத்து மர்மங்களின் மையத்தை உணர்ந்து கொண்டு,

*''வண்டுக்குச் சிக்காமல் வளர்கின்ற தூய்மை நிறை*
*மனப் பூவால் எம்மிறையை*
*வழுத்திடவே ஏற்ற கணம்''*

என்ற நிறைவை எய்துகின்றார். ஷெல்லியையும், கீட்சையும் போல் பாடும் பறவையிடம் மனம் பறி கொடுக்கின்றார்.

"Thou art unseen, but yet
I hear thy shrill delight" (To a skylark)

என்று ஷெல்லி கூறுவது போன்றே,

*''என்றன் விழிக்கெட்டாப் பொழிற்குயிலே''*

என்று தூரனும் அழைக்கின்றார்.

"Away, away for I will fly to thee
Not Charioted by Bacchus and his bards
But on the viewless wings of poesy"
(Ode to a Nightingale)

என்று கீட்ஸ் குரலெடுத்துக் கூறவது போன்றே,

*''நானு முன்றன்*
*போக விசைப் பேருலகில்*
*புக விழைவேன் இணை சுரமாய்''*
(மின்னல் பூ – ப.101)

என்று மயங்கி உரைக்கின்றார். உணர்ச்சி மயமான இந்தக் கவிதையிலும் குயிலின்,

*''தீங்குழற் பண் தெய்விகத்தால்*
*சிறுமையெலாம் மாயும்''*

என்று சொல்கிறபோது கடவுட் காட்சியாக இயற்கையைத் தரிசிக்கின்றார். அதே சமயம் இயற்கை ஓர் ஆசிரியன் என்ற

வோர்ட்ஸ்வொர்த்தின் கண்ணோட்டமும் 'குயில்' பாட்டில் இணைந்து இயங்குகின்றது.

*''வித்தையினால் வானூர்ந்தும்*
*மிகச் சிறுத்த உளமுடையேம்*
*மென் தளிர்ப்பூ மரத்தமர்ந்தும்*
*விண் எட்டும் உளமுடையாய்''*
*(மின்னல் பூ, ப.101)*

என்ற குயில் உணர்த்தும் பாடத்தையும் உரைக்கின்றார்.

நிலாப் பிஞ்சு, தூரனின் அழகுணர்ச்சி ததும்பும் மற்றொரு கவிதை. அன்னை முகம் நோக்கும் அருங்குழவி போன்று, காதலனாக மறைந்திருந்து நோக்கும் கன்னியைப் போலவும் தெரிகிறது நிலாக் கீற்று. வளர்ந்து முழுமதியாகும் அதன் கோலம் கவிஞருக்கு ஒரு பாடம் சொல்லுகிறது - நம்பிக்கை என்ற பாடம்,

*''வளர்ச்சியிலும் பூரணமாம் மலர்ச்சியிலும் புதியதொரு*
*தளர்ச்சியிலா நம்பிக்கை தழைத்தோங்கும் என்னுள்ளே''*
(நிலாப் பிஞ்சு - ப.14)

என்று பிஞ்சுப் பிறையில் பெருநம்பிக்கையின் மலர்ச்சியைக் காணுகின்றார். இவ்வாறு ஆங்கிலப் புனைவியல் கவிஞர்களைப் போன்று இயற்கையின் தோழமையை விழையும் தூரனைக் கவிதைகள் காட்டுகின்றன.

விழுமிய காதலின் இன்பமும் நறுஞ்சுவையும் தூரன் கவிதைகளில் தனியழகோடு மிளிர்கின்றன.

ஏழைப் பூக்காரி பூ விற்றுக் கொண்டு வருகிறாள். சாயம் விட்ட பழஞ்சேலை உடுத்தவளென்றாலும் அஜந்தா ஓவியம் உயிர் கொண்டாற் போன்ற சாயலாம். 'நெற்றியிலே செம்பொட்டும் நீள் விழியில் கவியமுதும்' மின்னுகின்றன. அவள் சென்ற பின்,

***''செப்புத் தகட்டிற்குத்***
***தேன் மலரைத் தருவது போல்***
***ஒப்பித் தன் உளம் என்றன்***
***உளத்திற்காய் ஈவாளோ''***
**(இளந்தமிழா - ப.33)**

என்று மனம் பதைக்கிறார்.

இவ்வாறு ஒருதலைக் காதலாய் எழுந்த கவிதைகளே பெரும்பாலான காதல் கவிதைகள். கருக்கரிவாள் கையில் தாங்கிக் கழனி செல்லும் பெண் அஞ்சனக் கண் வாளால் தன் உள்ளத்தை அறுத்துவிட்டதாக மனம் நோகும் கவிதையின் முடிப்பில் நாட்டுப்புறப் பாடலின் நயம் அலை மோதுகின்றது.

*"......... ............. பைங்கிளியே......*
*எட்டிக் களை பறிக்கும்*
*இடமெல்லாம் நிற்கேனோ?*
*கட்டி மண்ணை நீ உடைக்க*
*கைத்தடியாய் ஆகேனோ?"*
*(இளந்தமிழா – ப.33)*

'காதல் நெருப்பு', 'நாழியொன்று', 'இசைவாய்', 'அறிவிப்பு' முதலிய கவிதைகளில் எல்லாம் காதலனின் ஏக்கமும், பெருமூச்சும், துயரும் தழல் வீசுகின்றன. இந்த ஒருதலைக் காதல் உணர்வின் உச்சியாக விளங்குகிறது, 'அவள் பார்த்தாளோ?' என்று அழகிய கவிதை. அவளைப் பல இடங்களிலும் பார்த்த வாய்ப்புக்களை எல்லாம் ஒவ்வொன்றாய்ச் சொல்லி விட்டு,

*"அவளென்னைப் பார்த்தாளோ?*
*அன்பெல்லாம் அறிந்தாளோ?*
*அறியாமல் வாடுகிறேன்*
*அறிய வழி காணேனே..."*
*(மின்னல் பூ – ப.45)*

என்று நெஞ்சம் துடிக்கும் பதைபதைப்பை வெளியிடுகின்றது அக்கவிதை.

இந்த ஒருதலைக் காதலின் துயரம் பொறாது மாய்ந்து போகிற ஒருவனின் மரணச் சிதையில், கட்டுடைத்து வந்த காதலி அழுது தழுவ, அவன் உயிர் பெற்றெழுகிற அதிசயத்தை ஒரு (ஜெர்மானியத்) தழுவல் கவிதையில் கூறுகின்றார் தூரன். இப்படி ஒன்று நேராதா என்ற ஆதங்கமே கவிஞரை இக்கவிதையை மொழிபெயர்க்கத் தூண்டியிருக்க வேண்டும்.

காதல் வெறும் ஆடம்பரங்களிலும் வேடங்களிலும் மயங்கி நிற்பதல்ல என்பதைச் சந்திப்பு என்ற கவிதையில் புலப்படுத்துகிறார் தூரன். காதலனைச் சந்திப்பதற்காக மையெழுதி, நகையணிந்து ஒப்பனை செய்து செல்கிறாள் காதலி.

ஆனால் அவன் வரவில்லை. பெருந்துயரம் சூழ்ந்ததனால் அவள் செய்த செயலைக் கூறுகின்றார்.

*''அணிகள் எல்லாம் கலைத்தெறிந்தேன்*
*அஞ்சனத்தை துடைத்தொழித்தேன்*
*மலர்க்காட்டைக் குலைத்தேன்*
*மணிப் பட்டைக் கிழித்தேன்...*
*அழகெல்லாம் போயிற்று*
*நாதா நாதா என்று தேம்பினேன்....*
*அவர் வந்தார்''*

*(நிலாப் பிஞ்சு – ப.64)*

அன்பு மட்டுமே நாட்டமாகும் போது காதல் வெல்லும் என்ற கருத்தின் ஆழத்தைத் தூரன் நிறுவுகின்றார்.

கனிவின் குரலாகக் கவிதையைப் படைக்கும் பாங்கைத் தூரனின் மற்றொரு பரிமாணமாகக் காணலாம். அதன் ஒரு சாயலை அவரது குழந்தைகள் பற்றிய கவிதைகள் புலப்படுத்துகின்றன. (இளந்தமிழா – ப.23 – 26)

*''பச்சைக் குழந்தை என்றால் – எனக்கொரு*
*பாசம் பிறக்குதம்மா''*

என்று தொடங்கி,

*''தெய்வச் சிறு விருந்தை – என்றுமே*
*சீறி விழிக்காதீர்''*

என்று அன்பு வேண்டுகோளால் அரவணைக்கின்றார். அழுது தேம்புகிற ஒரு குழந்தையைக் கண்ணுற்றபோது,

*''ஆருடைய குழந்தை இது*
*அழுதேங்கி நிற்பது மேன்?*
*சீருடைய முகம் சிவக்கச்*
*சிறுகையால் கண்பிசைத்து*
*விம்மி விம்மித் தேம்பி*
*விழி நீர் மிகப் பெருக்கி*
*அம்மம்மா என்று சொல்லி*
*அங்குமிங்கும் பார்க்கிறதே''*

*(இளந்தமிழா – ப.33)*

என்று கலங்கிப் போகிறது அந்தக் கவிஞரின் நெஞ்சம்.

குழந்தையின் அழுகுரல் மட்டுமன்று – ஒரு நீளிரவில் ஒரு வீட்டிலிருந்து கேட்ட ஒரு பெண்ணின் சோகப் பாடல் கூட அவருடைய நெஞ்சைப் பிழிகின்றது. கணவனின் பிரிவா? மரணமா? சோகப் பாடலின் காரணம் என்ன?

*''யாரோ இப்பெண் கொடியாள்?*
*ஏனோ இப்பெருந் துயரம்?*
*நள்ளிருளில் உருமறைத்த*
*நரகத்தின் துயர் இசையே*
*உள்ளத்தைச் சொல்லி விட்டால்*
*உற்றார் கடிவாரோ?*

*(மின்னல் பூ – ப.24)*

என்றெல்லாம் கவிஞரின் தூயமனம் ஒரு துயர்ப் பாடலின் முள் பட்டுக் கலங்குகின்றது.

இந்த கனிவு மிக்க உள்ளம் ஒரு பறவையின் கூடு கலைக்கப்பட்டபோது, 'ஆரடா கூடிதனை அழித்த பெரும் பாவி?' என்ற ஆதங்கமும் ஆத்திரமுமாகக் குலைந்து போகிறது.

*பொன் முட்டை களவாச்சோ?*
*பொன் குஞ்சு பறிபோச்சோ*
*சின்னஞ் சிறு சிட்டே*
*தேம்பியெனைச் சீறாதே*

*(மின்னல் பூ – ப.29)*

என்று நொந்து போகிறார் தூரன். இந்தக் கனிவு உள்ளத்தின் சோகம் சிகரத்தைத் தொடுகிறது. 'குயிற் குஞ்சு' என்ற கவிதையில். காக்கையின் கூட்டில் பொரிக்கப்பட்ட குயில் முட்டை குஞ்சாகிற போது காக்கை கொத்தி குயிற்குஞ்சு இறந்து போகிறது. 'விரும்பிக் கவி மகிழும் விண்பாட்டின் மெல்லரும்பு' கொல்லப்பட்டதற்குக் காரணமான காகத்தை,

*கருவண்ணக் கருமூக்கி*
*கருமனத்துக் கருங்குரலி*

என்று இகழ்கிறார். குயிற் குஞ்சின் மரணம் ஒரு கலையழகுக் கீதத்தின் முடிவாகிவிட்டதே என்று வேதனை கொள்கிறார்.

*''இனியிங்குத் தோன்றிடு நல்*
*இளவேனில் அழகடைய*

*ஓங்கு முன்றன் பாட்டெல்லாம்*
*உலகறியா தடங்கினவே....''*

என்ற மாபெருந் துயரம் அவர் மனதையும் கௌவுகிறது.

உயிரினங்களின் சோகங்களில் உருகுகின்ற கவியுள்ளம் உதிர்ந்து விழுந்த ஓர் இலைச் சருகுக்காகவும் கசிந்து கண்ணீரில் கரைகிறது. வாழ்ந்த காலத்தில் மரக் கிளையை அணி செய்தது; காற்று செவி வழியே அன்று கனிந்து பாடியது; வேற்றுப் பறவையெல்லாம் விதவிதமாய்ப் பேசி வந்தது. ஆனால் இன்று பசை வறண்டதும் காற்றே குப்புறத் தள்ளிவிட்டது.

*''கண்ணெடுத்தும் பாராமல்*
*காலில் மிதித்தார்கள்*
*மண்ணிலே வீழ்ந்தவுடன்*
*மதிப்பெல்லாம் போனதுவோ?''*

என்று உதிர்ந்த சருகுக்கும் இரங்கற்பா இசைக்கின்றார் தூரன். மலையாளத்து மகாகவி குமாரன் ஆசானின் ' உதிர்ந்த மலர்' (வீண பூவு) என்ற உயர்ந்த கவிதையின் அதிர்வுகளை இக்கவிதையும் நமக்குள் உண்டு பண்ணுகிறது.

சமூக வாழ்வின் அவலங்களில் கவலைப்படுகிற இயல்பு தூரனுக்கு இருந்தது. கிழவனுக்கு மணம் முடிக்கப்பட்ட இளம் பெண்ணின் குரலாக 'இளமான்' என்ற கவிதை விளங்குகின்றது. 'சிறகிழந்து இளம் பறவைச் செந்தீயில் போட்டது போல் சிறுதாலித் தளையிட்டுச்' சிறை வைத்த கொடுமையை அந்தப் பெண்ணே பேசுகின்றாள். அதுபோன்றே இளம் விதவையின் துயரத்தை 'பூ விழுந்தபோது' என்ற கவிதை பேசுகின்றது.

*''முத்துதிரும் பேச்செங்கே?*
*மோகனக்கை வீச்செங்கே?*
*சித்தமதில் பித்தெழும்பும்*
*தீங் கவிதைப் பார்வையெங்கே?''*

*(நிலாப் பிஞ்சு – ப. 19)*

என்று வினாக்களை அடுக்கி, அப்பெண் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்துச் சுவருக்குள் மறைந்த ஓவியமாகி விட்டதாக வருந்துகின்றார். அவளுக்காக நியாயம் கேட்க முனைகின்றார்.

சாதிப் பாகுபாட்டால் குழந்தை விளையாட்டில் கூட அடிமைத்தனம் குடிபுகுந்துவிட்டதே என்று நெஞ்சம் நெகிழ

வடித்த கவிதை 'குழந்தை விளையாட்டு'. தூரனின் மிகச் சிறந்த கவிதைகளின் வரிசையில் முதலிடம் பெறத் தக்கது இக்கவிதை. 'உப்புப் பொரிந்து உதிரும் உவர் மண் இடிந்த சுவர்.' அதனருகில் ஒரு சேரிக் குழந்தை.

*''சிரங்கு சொரியும் கை*
*செம்பட்டை யான தலை*
*உறங்கி விழும் கண்கள்*
*உலர்ந்த சிறு கன்னங்கள்''*

கொண்ட அக்குழந்தை ஒரு சிறுமியுடன் கணவன் – மனைவி விளையாட்டு விளையாடுகிறது. விளையாட்டுப் பொருள்கள் தான் எப்படி?

*''பனங்கொட்டை ஒரு நான்கு*
*பாதையிலே கண்டெடுத்த*
*கனங் கெட்ட லாடமொன்று*
*கண்ணாடித் துண்டிரண்டு''*

சிறுமி சிறுவனிடம் பேசுகிற பேச்சைக் கவிஞர் கேட்கிறார்:

*''ஓடி வா, கஞ்சி குடி*
*மண்வெட்டப் போகணுமாம்*
*பண்ணையார் ஏசுகிறார்''*

இதனைக் கேட்ட மாத்திரத்தில் கருகிப் போகிறது கவிஞரின் உள்ளம். காலுக்குச் சோடும், காசி நகர்ப் பட்டுடையும், நளபாகத் தறுசுவையில் நல்ல நல்ல உண்டி வகையும் அவர்கள் கற்பனைக்கு வரவில்லையே

*''துன்பத்திலே தோன்றித்*
*தொழும்பே வடிவா னோர்க்கு*
*இன்ப விளையாட்டும்*
*இல்லையோ இவ்வுலகில்?''*

என்ற சோக வினாவுடன் கவிதை முடிகிறது. முதல் தொகுப்பில் (இளந்தமிழா) வெளிவந்த இக்கவிதை தூரனின் படைப்புகளில் மிகுந்த பாராட்டுப் பெற்றது.

பட்டண வீதியில் பதறிய வண்ணம் கைக் குழந்தையோடு பிச்சை எடுக்கும் பெண்ணைப் பார்த்த போது ' இருதயம் இல்லாப் பட்டணம் இதுவோ?' என்றும், 'பச்சையும் பரிவும் பறந்ததோ?' என்றும் கவிஞர் வறுமைக்கு எதிராகக் கேள்விகள் எழுப்புகின்றார்.

இவையெல்லாம் சமூக அவலங்களுக்கு எதிராக அவர் எழுப்பிய குரல்கள். துயரங்களைச் சித்திரமாக்குவதிலும், படிப்பவர் நெஞ்சில் வேதனைகளைப் பதிய வைப்பதிலும் தூரனின் கவனம் சென்றது. தீர்வுகள் சொல்ல அவர் முற்படவில்லை.

கவிதைகளில் ஆழ்ந்த தத்துவங்களைச் சொல்லும் கலையில் தூரன் கைதேர்ந்தவராகத் திகழ்ந்தார். பேராசை மனிதனைக் கொல்லும் என்பதைக் 'குறைகுடம்' கவிதையில் எடுத்துக் காட்டுகின்றார். பொருள் வேண்டித் தொழுதவனுக்கு ஏழரைக் குடம் பொன் தருகிறது தெய்வம். கிடைத்ததைக் கொண்டு மகிழாமல் அந்த அரைக்குடத்தை நிறைப்பதற்காக உற்றாரை மறக்கிறான்; மனைவியை மறக்கிறான்; மகவையும் மறக்கிறான். கடைசியில்

*'குறைகுடமும் நிறையாமுன் நிறைந்ததவன் காலம்'*

என்று கவிதை முடிகிறது (மின்னல் பூ – ப73)

ஒரே தத்துவத்தைப் பேசும் கவிதைகளான 'ஈசல்' 'விலங்கு நெறி' இரண்டும் ஒரே தொகுதியில் உள்ளன. ஐப்பசி மாத அடைமழைக் காலத்தில்

*''இரவுப் பொழுதெல்லாம் தூறல் விழுந்திட*
*ஈசல் பறந்தது காலையிலே*
*பூசல் சிறந்தது சோலையிலே''*

என்று தொடங்குகிறது 'ஈசல்' கவிதை. ஈசலைத் தின்னக் குருவி பறக்கிறது. குருவியைக் கொல்ல வல்லூறு பாய்கிறது. ஒன்றுக்கொன்று முரணாக ஈசன் படைப்பு அமைவதை இக்கவிதை சுட்டிக் காட்டுகிறது.

இது போன்ற இன்னொரு காட்சியை விளக்குகிறது 'விலங்கு நெறி'. மீன் கொத்தி மீனுக்காகப் பாய, அதன் மீது பாய்கிறது வல்லூறு. கவிஞர் கொந்தளிக்கிறார்:

*''என்னடா சட்டம் இது, இதுவோ இயற்கை நெறி?*
*சின்னப் புழு பூச்சி சிறுமீன் இரையாகும்*
*சிறுமீனைக் கொத்தச் செம்மூக்கு மணிப்பறவை*
*பறவை யதைக் கொல்லப் பாழ்வயிற்று வல்லூறு''*

மனிதன் புதுநெறி காண இது ஒரு பாடம் என்கிறார் தூரன்.

தூரன் சிறிய கதைக் கவிதைகளையும் எழுதியுள்ளார். ஒரு நாடோடிக் கதையான 'தியாகம்', தேசிய வரலாறான 'வீரன் குமரன்', வரலாற்று கதைகளான 'கிழவியும் ராணாவும்', 'பிருதிவி ராஜ் – சம்யுக்தை' ஆகியன இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. தேசியம் சார்ந்த பல கவிதைகளைத் தூரன் எழுதியுள்ளார். மொழிபெயர்ப்பாகவும் சில கவிதைகளைத் தந்துள்ளார். (தாகூர், விவேகானந்தர், துவிஜேந்திரலால்)

கவிதைகளைப் படைப்பதில் பல்வேறு புதுமைகளையும் உத்திகளையும் தூரன் கையாண்டிருக்கிறார். 'காதலிக்குக் கடிதம்' 'பதில்' 'கடிதம்' ஆகிய கவிதைகள் இதற்கு எடுத்துக்காட்டு. இவை கடித வடிவில் அமைந்தவை.

யாப்புப் புதுமைகளைச் செய்வதிலும் தூரன் ஆர்வம் காட்டியுள்ளார். எடுத்துக்காட்டு :

''ஏழை மகன் ஒருவன் – அவன்
எடுப்பு வாய்ந்த உருவன்
தன்னா னான னான
தன தானனா
காதல் செய்தானே – அவளே
கயமை செய்தாளே''

உரையாடல் வடிவில் அமைந்த 'ஓடக்காரன்', இசைப் பாடல் வடிவில் அமைந்த 'உள்ளம் தளராதே' நாட்டுப்புறப் பாடல் வடிவில் அமைந்த 'கைவளம்' ஆகியவை வடிவப் புதுமைகளுக்கு எடுத்துக்காட்டு.

ஐம்பதாண்டுகளுக்கு முன்பே வசன கவிதைப் பரிசோதனைகளிலும் தூரன் ஈடுபட்டுள்ளார். 'இருளும் ஒளியும்', 'அறிவாய் நீ', 'மேலே பற' 'மானிடா எழுக', 'யாரது?', 'வாழக்கைப் பயணம்', 'சந்திப்பு', 'நமது வழி' முதலிய கவிதைகள் புதுக்கவிதையின் பேச்சுச் சந்தமும், உரைநடை ஆதிக்கமும், மாறுபட்ட தொனியும் கொண்டவையாய் அமைந்தன. தாகூரின் கவிதைத் தேடலும், பாரதியாரின் நடைப்பாணியும் இந்தப் புதுக்கவிதைகளில் இடம் பெற்றுள்ளன. பரிசோதனை முயற்சிகளில் ஈடுபட்டதாக அறிவிப்பு எதையும் செய்து கொள்ளாமலே இந்த அருமையான முயற்சிகளில் தூரன் ஈடுபட்டிருந்தார். மகாகவி பாரதியாரைக் குறித்து அவர் எழுதிய **'நமது வழி' புதுக்கவிதையாய் எழுந்தது:**

*''திடீரென்று அவன் தோன்றினான்*
*அவன் வருகை யாருக்கும் தெரியாது*
*வான வில்லென அவன் வந்தான்*
*தோற்றத்தில் அவனிடம் புதுமை ஒன்றுமில்லை*
*ஆனால் எங்கும் காணாத புதுமை ஒளி*
*அவன் கண்களில் சுடர்விட்டுக் கொண்டிருந்தது*
*ஒரு கனல்*
*உணர்ச்சி மின்னலின் கொழுந்து*
*ஆத்ம சக்தியின் ஜோதி.''*

வசன கவிதைச் சாயலுடன் அமைந்த இந்தப் புதுக்கவிதை அவர் பரிசோதனைக்கு ஓர் எடுத்துக்காட்டு. புதுக்கவிதை வரலாறுகளில் தூரன் கவனத்தில் கொள்ளப்படாதது வருந்தத் தக்க குறையாகும்.

தாகூரின் Stray Birds நூலைத் தழுவித் தூரன் இயற்றிய நூல் 'பட்டிப் பறவைகள்.' 1956 ல் இந்நூலின் முதற்பதிப்பு வெளிவந்ததென்றாலும், அவரே நூலின் முன்னுரையில் குறித்துள்ளபடி 1930 – ல் தம் கல்லூரி நண்பருக்குப் பொங்கல் வாழ்த்தாக உருவாக்கிய நூல் அது என்று தெரிய வருகிறது. இரண்டு பகுதிகளாக அமைந்த இந்நூலில் முதற் பகுதி தாகூர் கவிதைகளில் மொழிபெயர்ப்பாகவும், இரண்டாம் பகுதி சுயமாகப் படைத்த கவிதைத் துணுக்குகளாகவும் அமைந்துள்ளன. தமிழுக்குப் புதிய அணி கலனாக அமைந்த கவிதைகள் இவை. மின்னலை ஒளிக்கற்களாய்த் துண்டு போட்டாற் போல் இக்கவிதைகள் மிளிர்கின்றன. சில எடுத்துக்காட்டுக்கள்

*''கவிதையே! உன்னை நான் தானே*
*எழுதினேன்? என்று கூறி*
*எழுத்தாணி பெருமை கொள்கிறது''*

*

*பகலாகவே இருக்கக் கூடாதா என்று*
*தேனீ ஆசைப்படுகிறது*
*இரவாகவே இருக்கக்கூடாதா என்று*
*குள்ளநரி ஆசைப் படுகிறது*

*

*கறையானை அழிப்பதற்கு இறைவன்*
*என்ன செய்கிறான்?*
*அதற்கு இறகு கொடுக்கிறான்.*

புதுமைகளைக் கைநீட்டி வரவேற்ற தூரன் எந்தக் கவிஞனுடைய செல்வாக்குக்கும் ஆட்பட்டு எழுதக் கூடாது என்ற கருத்துடையவர்.

> **''எனக்குப் பாரதியாரிடம் மிகுந்த மதிப்புண்டு என்றாலும் அவர் கவிதையைப் பின்பற்றி நான் கவிதை எழுதவில்லை. நான் வோர்ட்ஸ் வொர்த், கீட்ஸ், ஷெல்லி, ரவீந்திரநாத் தாகூர் என்ற கவிஞர்களைப் பின்பற்றியே கவிதை எழுதலானேன்''**
>
> *(நினைவுகள் – கையெழுத்துப் பிரதி)*

என்று தூரன் குறிப்பிட்டுள்ளார். ச.து.சு. யோகியார் கம்பராமாயணச் சாயலில் எழுதியதை விமர்சித்தே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தம்மையும் அறியாமல் பாரதியாரின் நிழல் தூரனின் கவிதைகளில் படிந்திருக்கிறது என்பதே உண்மை. பரலி.சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பாரதியார்,

> ***''தம்பி – உள்ளமே உலகம்***
> ***ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே, மேலே***
> ***........ ........... ..........***
> ***உனக்குச் சிறகுகள் தோன்றுக பறந்து போ***
> ***பற, பற, மேலே மேலே, மேலே''***

என்று குறிப்பிடுகின்றார். இந்தக் கடிதத்தின் தாக்கமே 'மேலே பற' என்ற தூரனின் கவிதையாக மலர்கிறது.

> ***''மனமே***
> ***கற்பனைச் சிறகுகளை விரித்து வானிலே பற***
> ***மேலே மேலே பற***
> ***இன்னும் மேலே பற''***

என்று வளர்கிறது தூரனின் கவிதை.

> ***''துன்பம் இலாத நிலையே சக்தி***
> ***தூக்கம் இலாக்கண் விழிப்பே சக்தி''***

என்ற பாரதியார் சக்திப் பாடலின் சாயலில்,

> ***''விரிமென் மலரின் நிறைவே சாந்தி***
> ***வினைசேர் கலையின் உயிரே சாந்தி''***

என்ற தூரனின் பாடல் அமைகிறது.

*"சக்தி சக்தி சக்தியென்று சொல்லு – கெட்ட*
*சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு"*

என்ற பாரதியார் பாடலின் பாணியை,

*"வேல், வேல் வேலென்று சொல்லு – பழ*
*வெவ்வினையை இக்கணமே கொல்லு"*

என்ற தூரனின் பாடலில் காணமுடிகிறது.

இது போன்றே 'இருளும் ஒளியும்' என்னும் தூரனின் கவிதையில் பாரதியாரின் 'ஞாயிறு' கவிதையின் பதிவைப் பார்க்கலாம். மேலும் பல சான்றுகளைக் கூறமுடியும்.

**"தூரனின் கவிதைகளில் பாரதியின் செல்வாக்கு இயல்பாக இருக்கின்றது. செயற்கைத் திணிவாக அமைந்திருக்கவில்லை. ஒரு மகாகவியின் பேரொளி தொடர்ந்து பல தலைமுறைகளைத் தீண்டிக் கொண்டே இருப்பதில் வியப்பேதும் இல்லை"***

என்னும் கருத்து மிகவும் சரியான மதிப்பீடாகும்.

தூரன் கவிதைக்கலை குறித்த மிகத் தெளிவான சிந்தனைகள் கொண்டவராக விளங்கினார். சிறந்த சொற்கள் கவிதையின் கட்டுமானத்துக்கு அடிப்படை என்பதை உணர்ந்திருந்தார்.

*"மண்ணிற்கு உரம் ஊட்டும்*
*விண்ணமுதச் சொல் பெற்றால்*
*மனச்சுடரை வடித்தெடுத்து*
*வைத்திடுவேன் கவிதையிலே"*
*(இளந்தமிழா – ப. 48)*

என்பது அவர் வாக்குமூலம். அதே சமயம் அகண்டமான உணர்ச்சிகளுக்குச் சொல்லே சிறை என்றும் கருதினார். "எண்ணங்களுக்கும் உள்ளக் கிளர்ச்சிகளுக்கும் சொல்லே சிறை. சொல்லையும் கடந்து உள்ளத்தோடு உள்ளம் பேசுகிற உணர்ச்சித் துடிப்பிலே கவி சொல்ல ஆசை" என்று குறிப்பிடுகின்றார். 'கவிக்கனல் என்ற கவிதையில்,

*"சொல்லெனும் சிறைக் கூட்டினை – நீங்கி*
*வேகம் கொண்டுபாய் அம்பு போல்*

★சிற்பியின் கட்டுரைகள், ப.153, மணிவாசகர் பதிப்பகம், 1996.

*சொல்லையும் கடந்தேகுமோர் — உள்ளத்*
*துடிப்பிலே கவி சொல்லுவேன்''*

என்று உணர்வும் பிரவாகத்தைத் தடுக்கும் சொல்லை உடைத்துப் போகவும் ஆசைப்படுகின்றார்.

யாப்பிலக்கணத்தை முற்றும் கற்றபின் அதை மூடி வைத்துவிட்டுப் புதிய யாப்புகளைப் புனைய முற்பட்டார்.

**''புதிது புதிதாக வாய்ப்புக்களை அமைக்க வேண்டும் என்பதில் எனக்கு நிறைந்த ஆர்வம் உண்டு... புதிய யாப்புக்களும் திட்டமான சில விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். வசன கவிதை ஒன்றுதான் இந்த விதிக்குச் சற்றுப் புறம்பாக இருக்கலாம்''**

என்றும் தம் தொகுதிகளில் புதிய யாப்பு முயற்சிகளைக் காணலாம் என்றும், 'மின்னல் பூ' நூலின் முன்னுரையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

மற்றொரு முக்கியமான கருத்தையும் கவிதைக்கலை குறித்துத் தெளிவுபடுத்தியுள்ளார். பிரசாரம் கலையாகுமா? என்ற வினாவுக்கு உரிய விடை அது.

**''வெறும் பிரசாரம் இலக்கியமன்று; கலையுமன்று ஆனால் பிரசாரத்தைத் தாங்கி நிற்பதெல்லாம் இலக்கியமல்ல என்பதும் தவறு. கலைப் படைப்பாக ஒன்ற உருவாகியுள்ளதா என்பதே கேள்வி''**

(நிலாப் பிஞ்சு – முன்னுரை)

இதுதான் அவர் தரும் பதில்

தூரன் கவிதை நூல்களில் ஒரு தனிச்சிறப்பு – தேவைப்படும் இடங்களில் கவிதைகளுக்கு அவர் தரும் சிறு விளக்கங்கள். கவிதையைச் சுவைக்கக் கற்றுக் கொடுக்கும் குறிப்புக்கள் அவை.

கவிதையைச் சுவைப்பதற்கு ஒரு முயற்சியும் பயிற்சியும் வேண்டும் எனத் தூரன் கருதினார்.

**''கதை படிப்பது போலக் கவிதையைப் படிக்கக் கூடாது. அப்படிப் படித்தால் கவிதையைப் பூரண மாகச் சுவைக்க முடியாது. அமைதியாக இருந்து கவனமாகக் கவிதையைப் படிக்க வேண்டும். அது மட்டும் போதாது.**

**கற்பனைத் திறனையும் கூடச் சேர்த்துக் கொண்டு படிக்க வேண்டும்... பல தடவை படிக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லும், சந்தமும், அசைவும், நெளிவும், குறிப்பும், மறைப்பும் என்னென்ன உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புகிறது என்று கண்டு அனுபவிக்க அதுதான் வழி."**

*படைப்பாளியாக மட்டுமல்லாது, படைப்பை நுகரும் கலையினைக் கற்பிக்கும் படிப்பாளியாகவும் தூரன் திகழ்கின்றார்.*

*எல்லையற்ற மனித சமுத்திரத்தின் நடுவே, மனித மன ஆழங்களின் நடுவே தூரனின் கவிதைத்தோணியும் இடைவிடாத பயணத்தை மேற்கொள்கிறது. அவருடைய கவிதையிலேயே அந்தப் பயணத்தைக் குறித்துச் சொல்லுவது பொருத்தமாக இருக்கும்.*

*"உள்ளத்து மின்னல்*
*பூச்செண்டு கட்டி*
*வெள்ளத்துள் எங்கோ*
*விளையாட விட்டேன்...."*

# 3. சிறுகதைப் படைப்புக்கள்

மணிக்கொடிக் காலத்துக்குப் பிறகு தமிழ்ச் சிறுகதைக் கலைக்கு வளம் சேர்த்தவர்களுள் தூரனும் ஒருவர். அவர் படைத்த சிறுகதைகள் ஐந்து தொகுதிகளாக வெளி வந்துள்ளன. 'தூரன் எழுத்தோவியங்கள்' நூலில் உள்ள சிறுகதைகள் மேற்குறித்த தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கதைகளே ஆகும்.

*பிள்ளைவரம் (1945), உரிமைப் பெண் (1952), தங்கச் சங்கிலி (இ.ப.1956), காளிங்கராயன் கொடை (1956), மாவிளக்கு (1958)* என்பன தூரனின் சிறுகதைத் தொகுப்புக்கள்.

சிறுகதை எழுதும் நுட்பங்களைக் குறித்து நிறையச் சிந்தித்தறிந்தவர் தூரன்.

> **"சிறிய கதையாக இருப்பதுதான் சிறுகதை என்ற எண்ணம் ஒரு காலத்தில் இருந்தது. சிறுகதை என்ற பெயரே அதற்குச் சான்று. இன்று அந்தக் கருத்து அப்படியே முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. சிறுகதை ஒரே உணர்ச்சியை அல்லது உள்ளக் கிளர்ச்சியை அல்லது நிகழ்ச்சியைச் சுற்றிப் பின்னிக்கிடக்க வேண்டும் என்பது இன்றைய முக்கியமான கருத்து"**

எனச் சிறுகதையின் உயிர்த் தத்துவத்தை 'மாவிளக்கு' முன்னுரையில் முன்வைக்கிறார். நார்வே நாட்டு எழுத்தாளர் நட் ஹாம்சன் முன்னூறு பக்க அளவில் எழுதிய கதை கூட, ஒரே உணர்ச்சியை மட்டும் கூறுவதால் சிறுகதையாக மதிக்கப்பட்டது என்று சுட்டிக் காட்டுகின்றார்.

> **சிறுகதைக்குக் கதை கூட அவசியமில்லை என்றும் தூரன் கருதினார்: "உள்ளத்தில் எத்தனையோ கிளர்ச்சிகள் குமுறுகின்றன. அவற்றில் ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு அதிலே ஒரு குறிப்பிட்ட மின்னல் போன்ற பகுதியை விளக்கினால் அதுவும் சிறுகதைதான்"**

என்று குறிப்பிடுகின்றார்.

பெரியசாமித் தூரனின் கதைகளில் இந்த மின்னல் தெறிப்பை நன்கு காணமுடிகின்றது.

தூரனின் சிறுகதைகளில் பின்புலமாகக் கொங்கு நாட்டுக் கிராமியச் சூழலும், ஓவியக்கலைசார் நுட்பங்களும், உளவியலும் அமைகின்றன. இது குறித்து அவரே 'பிள்ளைவரம்' தொகுப்பு மூன்றாம் பதிப்பின் முகவுரையில் தெரிவித்திருக்கின்றார்.

> **''அந்தக் காலத்திலே இருந்த கொங்கு நாட்டு மக்களை நினைவில் வைத்து இத்தொகுப்பிலுள்ள பெரும் பாலான கதைகள் கற்பனை செய்யப்பட்டுள்ளன''**

என்பது அவர் குறிப்பு

வட்டார இலக்கியப் படைப்புக்கு வித்திட்ட ஆர்.சண்முகசுந்தரத்தைப் போன்று பெ.தூரனும் கொங்கு வட்டாரத்தைத் தம் கதைகளில் முன் நிறுத்தினார்.

> **''ஆர்.சண்முகசுந்தரத்தை எப்படிக் கொங்கு நாவலாசிரியர் என்கிறோமோ அப்படிக் கொங்கு நாட்டு வாழ்வின் அழுத்தம் படச் சிறுகதைகளைத் தீட்டியவர் என்ற பெருமை தூரனுக்கே கிடைக்கிறது''**
> **(ம.ப.பெ.தூரன் நினைவு மலர், அக்.1987)**

என நா.பார்த்தசாரதி இக்கருத்தை அடிக்கோடிட்டுக் குறிப்பிடுகின்றார்.

தூரனின் சிறுகதைகள் பலவற்றுக்கு ஈரோடு, கோவை, சேலம் மாவட்டக் கிராமங்களே பின்புலமாக அமைகின்றன. நா.பா. குறிப்பது போன்று கரடிப்பாளையம், புதுப்பாளையம், எழுமாத்தூர், வேட்டைக்காரன் புதூர், துடியலூர் என வரும் ஊர்ப்பெயர்கள் எல்லாம் இந்த மாவட்டங்களின் சிற்றூர்களே.

'யதார்த்த அழகு நிரம்பிய கதை' என்று நா.பார்த்தசாரதி குறிப்பிடும்'ரங்க போயன்' கதையில் அவன் மனைவியை வைப்பாக்கிக் கொண்டு அவனையும் குடியால் அழிய வைத்த வேலப்பக் கவுண்டரின் கொலை முக்கிய நிகழ்வாகிறது. ஆயினும் அவரைக் கொலை செய்த நாச்சியப்பனுக்குப் பதில் பழியைத் தானே ஏற்றுக் கொள்கிறான் ரங்கபோயன். எதிர்பாராத இந்த முடிவை அவன் எடுக்கும் உளவியல் முரண் தான் கதைக்கு உயிராக அமைகிறது.

எளிய கிராமத்துச் சிறுவன் வீரன் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன். எருமை மேய்க்கிற சிறுவனிடம் இளம் செம்மறிக்கடா ஒன்றையும் மேய்க்கும் பணி தரப்படுகிறது. 'திருகு கொம்புச் செம்பட்டை' என்று பெயரிட்டு அவன் அதை நேசிக்கிறான். 'வீரனின் பேச்சு அதற்குத் தெரியும்' அதனைப் பண்ணையார் கறுப்பண்ண சாமிக்கு வெட்டிப் பலியிட்ட போது வீரன் துடித்தான். 'ஐயோ, அது எப்படித் துடிச்சுதோ?' என்று வருந்தினான். கறிக்குழம்பை உண்ண மறுத்தான்.

நள்ளிரவில் கறுப்பண்ணசாமி கோயிலுக்குள் நுழைந்து சாமியை வேண்டியும் ஒரு பதிலும் கிடைக்கவில்லை. 'சாமியைப் பாரு சாமியை' என அதைப்பிடுங்கி எறிகிறான். பண்ணையார் அவனைக் கடுமையாக அடிக்க, ஆட்டின் நினைவாகவே உயிர்விடுகிறான். குழந்தை மனத்தின் ஆசைகளோடு தூரன் நடத்திய ஓட்டப் பந்தயம் இந்தச் சிறுகதை.

இந்த வீரனைப் போலவே கூலிக்கார வீரப்பன், மாட்டுக்காரச் சின்னான், விறகுவெட்டி ராமன், விவசாயி மனள் முத்தம்மாள், மழுங்கல் புத்தி சொங்கப்பன் என வரும் பாத்திரங்களை எல்லாம் கொங்கு நாட்டுக் கிராமத்து மண் வாசனையோடு வருகிற பாத்திரங்கள். அவர்களின் பேச்சில் எல்லாம் கொங்கு நாட்டுத் தமிழ் கொஞ்சுகிறது. 'கொங்கு நாட்டு உழவர்களின் தேன் கலந்த கொச்சைப் பேச்சு நடை' என்று அவரே குறிப்பிடுகிற வட்டார மொழி அது.

*''லே, கொஞ்சம் புகைலே கொண்டா''*

*''ஏ குருதாட்ட உக்காந்துக் கிட்டிருக்கிறே?*

*சோறு போட்டு வை'' (கடையின் கவர்ச்சி)*

*''நீ சும்மா வந்து இருந்தாலே, அதுவே ஒரு*

*அத்தாக இருக்கும்'' (கூலிக்கார வீரப்பன்)*

*''அதெல்லாம் நடக்குமுங்களா? என்னமோ நாலு ஆட்டை*

*மேய்ச்சா, அது நாலுகுட்டி போட்டா, நாலுபணங்*

*கிடைக்காதெயா போகும்?'' (கூலிக்கார வீரப்பன்)*

*வீட்டுக்கு வந்த விருந்தாளியை விட்டுப் போட்டுச்*
*சாப்பிடர வழக்கம் எங்க வமிசத்திலேயே இல்லீங்கோ''*

*(காளிங்கராயன் கொடை)*

இவ்வாறு களிநடம் புரிகிற கொங்கு வட்டார மொழியைத் தம் சிறுகதைகளில் வெகுநேர்த்தியாகத் தூரன் கையாளு கின்றார்.

கிராமத்து மனிதர்கள் குடிப்பழக்கத்தால் சீரழிவதை மிகுந்த அனுதாபத்தோடு தூரன் தம் கதைகளின் வாயிலாக உணர்த்துகின்றார். 'புதுக்கடை' என்ற கதையில் வரும் கந்தப்பன் குடியால் கடன்படுகிறான். கடனை மனைவி அடைக்கத் திருந்துகிறான். மீண்டும் ஒரு வாய்ப்பு வரும்போது புதுக் கடையின் வரவால் கெட்டுப் போகிறான். 'கடையில்லா விட்டால் நான் புத்தி கெட்டுப் போயிருக்க மாட்டேனே' என்று கதறுகிறான். 'கடையின் கவர்ச்சி' என்ற கதையில் வரும் விறகுவெட்டி ராமனும் 'ஆமா, சர்க்காரு கடையை எடுத்துப்பிட்டா, எனக்கு இப்படித் தினமும் புத்தி கெட்டுப் போவாது' என்று வருத்தத்தோடு பேசுகிறான். 'ரங்கபோயன்' கதையிலும் குடிவெறியால் பாழாகும் மனிதனைத் தூரன் சித்திரிக்கக் காணலாம். இப்படிச் சின்ன மனிதர்களின் சோகங்களில் பங்காளியாகிறார் தூரன்.

தூரன் ஒரு நல்ல ஓவியராக இருந்தார் என்ற உண்மை பலருக்குத் தெரிந்திருக்காது. தம் மன எழுச்சியால் அவர் வரைந்த ஓவியங்கள் பல. கவிதைகளில் கூட ஓவியம் போல் வருணனைகள் செய்கின்ற தூரன், சில சிறு கதைகளில் ஓவியத்தையே மையமாக்கி இருப்பதைக் காணலாம். 'ஓவியர் மணி', 'கலைஉள்ளம்', 'ஓவியன்' ஆகிய கதைகளில் ஓவியக் கலை மையப் பொருளாகின்றது.

ஓவியர்கள் நெஞ்சில் நாமும் படைப்புத் தெய்வங்கள் என்ற இறுமாப்பு உண்டாகி விடுகின்றது. இரண்டு கதைகளில் இந்தப் பொருண்மை இடம் பெறுகின்றது. இந்த இறுமாப்பை ஊர் பேர் தெரியாத ஒருவன் கிள்ளி எறிவதை 'ஓவியன்' என்ற கதை புலப்படுத்துகின்றது. 'ஓவியர் மணி' எனும் சிறுகதையில் வரும் ஓவியன் தான் அழகுக்காகக் காதலித்து மணந்த பெண், குழந்தை பெற்றுத் தாயாகும் போது, அவள் அழகு அழிந்து விட்டதாக ஆத்திரம் கொள்கிறான். அழியாத அழகைப் படைக்கப் போவதாக அவளது இளமை ததும்பும் படத்தைப் படைக்கிறான். அவள் நோய்வாய்ப்படும் போதும் படம் சிரித்துக் கொண்டே இருப்பதால், சினந்து அதனைக் கிழித்தெறிகிறான். அப்போது தன் காலை வருடும் கரத்தினை உணர்கிறான். கண்ணீர் ததும்பும் மனைவி முகத்தைக் காண்கிறான். தாய்மை மிளிரும் அந்த

அழகே உயிருள்ள அழகு என உணர்கிறான். இந்தக் கதையைப் படிக்கும் போது ஆஸ்கார் ஒயில்டின் "Picture of Dorian Gray" நினைவுக்கு வருகின்றது. கதைகள் வேறுபட்டவை யென்றாலும் அழியும் மனிதன் காணத்தக்க அழியா அழகு குறித்த சிந்தனையை உண்டு பண்ணுவதில் ஒற்றுமைப்படுகின்றன.

அதுபோன்றே 'கலை உள்ளம்' கதையில் ஓவியன் துய்க்கும் அழகு வெறும் உடல் அழகு அன்று; கலையழகு என்ற உண்மை புலப்படுத்தப் பெறுகின்றது. தூரனுக்குள் இயங்கும் அழகு செறிந்த உள்ளத்தில் ஓவியக்கலை உன்னத இடம் பெற்றிருப்பதை உணர்ந்து கொள்கின்றோம்.

பல உளவியல் நூல்களை எழுதித் தந்தவர் தூரன். இந்த அறிவியற் கலை நுட்பம் மாந்தர்களின் உள்ளத்தை அளந்து பார்க்கும் கருவியாகத் தூரனால் சிறுகதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

> ''மனம் என்பது நமக்குக் கிடைத்துள்ள அற்புதமான கொடை. அதன் அமைப்பை முற்றிலும் அறிந்து கொள்வது மிகவும் சிரமமென்றாலும் பொதுவாக அதை இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம். மேலே உள்ள பாகம் சாதாரணமாக வாழ்க்கையிலே தொழிற்படுவது. அதன் இயக்கத்தின்படியே நமது செயல்கள் நடை பெறுகின்றன. ஆனால் அதையும் பிடித்து ஆட்டி வைப்பது மனத்தின் மற்றொரு பாகமாகிய அடிமனம். அது மகாபொல்லாதது. .... அடி மனத்தின் சூழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு புதிய இலக்கியமும் மற்றக் கலைகளும் இன்று வளரத் தொடங்கியுள்ளன''
>
> (உரிமைப் பெண் – முன்னுரை)

என்று ஆழ்மனம் பற்றி ஆராய்ந்து எழுதுகின்றார் தூரன். இந்தப் புதிய அறிவை அடிப்படையாகக் கொண்டும் சிறுகதைகள் பலவற்றைத் தூரன் எழுதித் தந்திருக்கின்றார்.

'உள்நெருப்பு' இந்தப் பண்பை உள்ளடக்கிய கதை ஆகும். சின்ன வயதிலேயே அநாதையான சொங்கப்பன் அறிவு வளர்ச்சி இல்லாதவன். அவன் தொந்தியைக் குறித்து எத்தனை பேர் கேலி செய்தாலும் பொறுத்துக் கொள்ளக் கூடியவன். அவனுக்குக் கோபமே வராது. அவனோடு மாடு மேய்த்துக் கொண்டிருந்த பொன்னப்பன் வெளிநாடு சென்று இருபத்தைந்து ஆண்டுகள்

கழித்துத் திரும்பி வருகிறான். பழைய ஞாபகத்தில் சொங்கப்பனைக் கேலி செய்த போது அவன் பொன்னப்பனைத் தாக்கி அடித்து நொறுக்கி விட்டான். பின்னால் தீர்க்கமாக அவனை விசாரித்தபோது சின்ன வயதில் பொன்னப்பன் அவனை எப்போதும் அடிப்பான் என்றும், அப்போது தனக்குப் பலம் இல்லாமையால் பொறுத்துக் கொண்டதாகவும், இப்போது அவன் கேலி செய்ததும் உள்ளத்தில் பதுங்கியிருந்த கோபத்தில் அப்படிச் செய்து விட்டதாகவும் கூறினான். இதைத்தான் 'உள்நெருப்பு' என்று தூரன் உருவகமாகக் குறிப்பிடுகின்றார்.

'அவள் வளர்த்த கடாரி' யில் தன் அன்புக்குரிய கடாரி விற்கப்படப் போவதை அறிந்து சோர்ந்து போகும் வள்ளியாத்தாள் அதைப் புலி அடித்துக் கொன்றதை அறிந்ததும் வருத்தத்தை மீறிய இன்ப உணர்ச்சி அடைகிறாள். தன் உடைமை பிறர் கைப்படாமல் தப்பியது போன்ற உணர்வு அவளுக்கு ஏற்படுவது மனோதத்துவம் கண்ட வியப்பாக அமைகிறது.

விறகு நனைவதைப் பார்த்து மழையில் வாசலில் இறங்கி அதை எடுத்து வைக்க முற்படுகிறாள் இளம் பெண் மாராயி. தாத்தா நஞ்சப்பன் பதறுகிறான். ''மாரு, உள்ளே வந்துவிடு. மழையில் நனையாதே'' என்று கூச்சலிடுகிறான். தாத்தாவின் பயத்துக்கு என்ன காரணம் என்று துருவித் துருவிக் கேட்கிறாள் பேத்தி. இந்த மாதிரி ஒரு மழைக்காலத்தில் தன் கோபத்துக்கு அஞ்சி கடாரி மாட்டைத் தேடிப்போன அவன் மருமகள் காய்ச்சலால் இறந்து போனதையும், இன்னொரு மழைக்காலத்தில் அவன் மகனும் காய்ச்சலால் மடிந்ததையும் கூறுகிறான் நஞ்சப்பன். 'மழை தானம்மா அவர்கள் ரெண்டு பேருக்கும் கூத்துவனாக வந்தது' என்று சிறுமியை அணைத்துக் கொள்கிறான். பழைய நிகழ்வு மனத்துக்குள்ளேயே பதுங்கிக் கிடந்ததை 'மழையும் இடியும்' கதையால் புலப்படுத்துகிறார் தூரன்.

'வித்தியாசம்' என்னும் கதை உண்மையில் வித்தியாசமானது. செல்வச் செழிப்பில் மிதந்த கமலநாதன் அனைத்தையும் இழந்து ஒரே ஒரு ஒற்றை நோட்டு மட்டும் பையில் இருக்கப் பூங்காவில் வந்து அமர்கிறான். இந்த நோட்டு முடிந்தால் கடைசித் தொகையும் முடிந்ததே என்கிற சோகம் அவருக்கு. அவர் அருகில் இன்னொரு மனிதன் வந்து உட்கார்ந்தான். அவன் பையிலும் ஒற்றை நோட்டு. அவன் குதூகலத்தின் உச்சியில் இருந்தான். இருவருக்கும் தர்க்கம் ஏற்படுகிறது. தன்னிடம் உள்ள பணம்

தீர்ந்ததும் சாவுதான் முடிவு என்கிறார் முதல் மனிதர். தன்னிடம் உள்ள பணத்தால் இனி வாழ்வே இன்பம் என்றான் அடுத்த மனிதன். அப்படி என்னதான் பணம் இருவரிடம் உள்ளது என்று பார்த்துவிட முடிவு செய்து ஒரே சமயத்தில் இருவரும் தங்களிடம் உள்ள ஒற்றை நோட்டை எடுத்தார்கள். இருவரிடமும் இருந்தது நூறு ரூபாய் நோட்டு. மகிழ்ச்சி பணத்தின் அளவால் இல்லை என்ற உளவியல் உண்மையை அழகாகப் படம் பிடிக்கிறது இந்தக் கதை.

'பழிக்குப் பழி' 'விதியின் பிழை' முதலிய சிறுகதைகளிலும் மாந்தர் உளவியல் செயல்படும் விசித்திரங்களைக் கலையழகோடு படைத்துக் காட்டுகின்றார் தூரன். 'எஜமானி' என்ற சின்னஞ்சிறுகதையில் குழந்தை உள்ளம் செயல்படும் தன்மையைக் கதைப் பொருளாக்குகின்றார். வீட்டு வேலைக்காரி முத்தம்மாளைத் தன் தாயார் அதிகாரம் செய்து மிரட்டுவதைப் பார்த்த குழந்தை சரோஜா தன் பொம்மைக்கு முத்தி என்று பெயர் வைத்து அதிகாரம் செய்கிறாள். சலித்துப் போனதும் உடைந்த பொம்மையை எறிந்து விடுகிறாள். அந்தப் பொம்மை வேலைக்காரி மகள் லச்சுமிக்குக் கிடைத்து விடுகிறது. அந்தப் பொம்மை அவளுக்கு எஜமானி ஆகிவிடுகிறது. அதை மரியாதையாய் அமரவைத்து அதன் முன்னால் ' அம்மா, இதோ ஆச்சு, கோவிக்காதேங்கோ' என்று பணிவுடன் பேசினாள் எச்சுமி. அவளுக்கு எஜமானி அம்மாள் கிடைத்துவிட்டாள். மனதை நெகிழ வைக்கும் கதை இது.

அடிமனதின் நிழலாட்டங்களை மையமாக வைத்து இத்தகைய உளவியல் கதைகள் பலவற்றை எழுதியுள்ளார் தூரன்.

சிறுகதையில் எத்தனையோ வகையான உத்திகளைத் தூரன் கையாண்டிருக்கிறார். ஒரு துப்பறியும் கதையின் லாவகத்தை 'டெலிபோன் மணி' யில் காண முடியும். அறிவியல் உண்மை கலந்த எதிர்காலவியலை 'கால யந்திரம்' கதையில் சந்திக்கிறோம். நிறைவுறாத மனம் ஒரு தற்செயல் நிகழ்வில் அமைதி பெற முடியும் என்ற கோட்பாட்டை ஒரு வாய்ச்சொல்லால் 'குரங்கு மனம்' உணர்த்துவது எளிமையான நுட்பமாகத் துலங்குகிறது. பல்வேறு கதைகளை ஒருங்கிணைக்கும் உத்தியை 'எது பெரிது?' கதையில் உணர்ந்து கொள்கிறோம்.

கலைநயமும் கற்பனையும் தொழில் திறனும் செறிந்த பல சிறுகதைகளைத் தூரன் படைத்திருக்கிறார். எனினும் 'ஓவியர்மணி', 'காளிங்கராயன் கொடை', 'சாரதாவின் காதல்', 'அன்னை தந்த ஒளி', 'விதியின் பிழை', 'பாறாங்கல்' முதலிய கதைகள் தூரனின் வியப்புக்குரிய கலைத்திறனைப் புலப்படுத்தக் கூடியவை. மனித மனதுக்குள் நுழைந்து ஊடுருவிப் பார்க்கும் ஆச்சரியமான கதைகள் இவை.

காளிங்கராயன் வாய்க்கால் அருகிலுள்ள ஊருக்கு வந்து சேரும் வயதான கிழவர் இரவில் ஒருவீட்டில் தங்குகிறார். அவர்கள் என்ன சொல்லியும் சாப்பிட மறுத்துவிடுகிறார். வற்புறுத்தி கேட்ட போது அந்த வாய்க்காலை வெட்டிய காளிங்கராயன் வமிசத்தைச் சேர்ந்தவர் தாம் என்றும், அந்த வாய்க்கால் பாசனத்தில் விளையும் அரிசியைத் தங்கள் குலத்தார் உண்பதில்லை என்றும், ஏன், தண்ணீர் கூடக் குடிப்பதில்லை என்றும் கிழவர் தெரிவிக்கின்றார்.

> "கொடுத்த தருமத்தை மறுபடியும் கையிலே தொடரது
> எங்க வமிசத்திலேயும் இல்லீங்கோ..."

என்னும் அவர் பேச்சு ஒரு அறக்கொடையின் சாசனமாகத் திகழ்கிறது, 'காளிங்கராயன் கொடை' என்னும் கதையில்.

அருமையான சிறுகதைகளில் ஒன்று 'பாறாங்கல்'. உயிரற்ற பாறாங்கல் ஒரு காதல் இணை மீது கோபம் கொள்கிறது. வாய்ப்பு வந்தால் தன்னை மிதித்த அவர்களைக் கொல்லத் துடிக்கிறது. உடைந்து துண்டாகிப் பொடிமணல் ஆகிற ஒவ்வொரு கட்டத்திலும் அதன் சினம் தணியவில்லை. கடைசியாகத் தன்னை ஏந்திச் செல்லும் காற்றும், மேகமும், மலரும், குயிலும் அந்தக் காதலர்களை வாழ்த்துவதை அறிந்து மனம் மாறுகிறது.

> "தென்றலே, என்னை மெதுவாகக் கொண்டு போய்
> அந்தக் காதலர்கள் நடக்கும் பாதையிலே பட்டுப் போலத்
> தூவி விடு"

என்று பேசுகின்றது.. கனிவையும் அன்பையுமே உலகத்துக்குத் தன் இலக்கியத்தின் செய்தியாகச் சொல்ல விரும்பும் தூரனின் கொள்கைக்கு அருமையான எடுத்துக்காட்டாக அமைகிறது இச்சிறுகதை.

தூரன் தான் கையாளும் ஒவ்வொரு இலக்கிய வடிவம் குறித்தும் ஆன்ற தெளிவு படைத்தவராக இருந்தார். சிறுகதைகளைக் குறித்து அவர் தெரிவித்துள்ள கருத்து இதற்குச் சான்றாகும்.

**"கதைக்குக் காலில்லை என்று கூறுவார்கள். நான் இதை ஒப்புக் கொள்வதில்லை. கதைக்கு நல்ல உறுதியான இரண்டு கால்கள் இருக்க வேண்டும். கவர்ச்சியான சம்பவம் அல்லது உணர்ச்சி, சொல்லும் திறமை ஆகிய இவ்விரு கால்களும் இல்லாமல் மக்களின் உள்ளத்திலே கதை நிலைத்து நிற்க முடியாது...... சிறுகதையின் கண், காது, மூக்கு என்றிப்படிப்பட்ட உறுப்புகளின் இலக்கணத்தை அறுதியிட்டுக் கூறுவதிலே சங்கடங்கள் இருந்தாலும் அதன் கரல்களைப் பற்றி நிச்சயமாகக் கூறிவிடலாம். அதனால்தான் கதைக்குக் காலில்லை என்ற பேச்சை நான் ஒப்புக் கொள்ளுவதில்லை"**

தூரனின் சிறுகதைகளுக்கு உறுதியான கால்கள் இருப்பதால், தமிழ்ப் புனைகதை இலக்கியத்தில் அழுத்தமான சுவடுகளை அவை பதித்திருக்கின்றன.

# 4. நாடகங்களும் கீர்த்தனைகளும்

## நாடகப்பணி

முழுநிறைவான படைப்புக்களைக் கவிதைகளாகவும் சிறுகதைகளாகவும் அளித்துள்ள தூரன் தேர்ந்தெடுத்துக் கொண்ட மற்றொரு இலக்கியக் களம் நாடகம். அவ்வாறே இசைக்கலைக்குப் பெரும் பங்களிப்பாகப் பல இசைப்பாடல் (கீர்த்தனை) தொகுதிகளையும் தூரன் இயற்றித் தந்துள்ளார்.

தெருக் கூத்துக்கலை சிதைந்து போன சூழலில் தமிழ் நாடகத்துக்கு ஒரு நிகழ்கலை இலக்கியம் தேவைப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் நாடகங்கள் இருவேறு நாடகப் பாணிகளை அறிமுகம் செய்தன. மெல்ல மெல்ல சமூக நாடகங்கள் வளர்ச்சி பெற்றன. எனினும் நாடக இலக்கியத்துக்குப் புதிய புதிய கோணங்களில் படைப்புக்கள் தேவைப்பட்டன. இந்தத் தேவையை நிறைவு செய்யும் முயற்சியில் தூரன் ஈடுபட்டார்.

ஏழு நாடகத் தொகுதிகள் தூரனின் படைப்புகளாக வெளிவந்துள்ளன. **அழகு மயக்கம்** (இ.ப.1955), **சூழ்ச்சி** (1955), **பொன்னியின் தியாகம்**(1955), **ஆதி – அத்தி** (1956), **காதலும் கடமையும்** (1957), **மனக்குகை** (இ.ப.1960), **இளந்துறவி** (1961) என்பன அந்நாடகங்கள்.

ஆதி – அத்தி, மனமாற்றம், சூழ்ச்சி, காதலும் கடமையும், மனக்குகை ஆகிய நாடகங்கள் தவிரப் பெரும்பாலும் மற்றவை எல்லாம் ஓரங்க நாடகங்களே.

ஓரங்க நாடகங்கள் சிறுகதைகள் போல் ஓர் உணர்ச்சி அல்லது நிகழ்ச்சியை மையமாகக் கொண்டவை என்று தூரன் உணர்ந்திருந்தார். எனினும் சில முக்கியமான வேறுபாடுகளும் உண்டு என்பதையும் அவர் எடுத்துக்காட்டி உள்ளார். குறிப்பாகச் சிறுகதை படிப்பதால் ஆசிரியனோடு உறவாட முடியும் என்றும், நாடகமோ, நடிப்பு, காட்சியமைப்பு முதலிய பிற கூறுகளால்தான் முழுமை அடைய முடியும் என்றும் அவர் நாடக நுட்பத்தைப் புலப்படுத்தியுள்ளார் (பொன்னியின் தியாகம் – முன்னுரை). நாடகத்தைப் படிப்பதும் ஓர் அனுபவமே என்றாலும் அதற்கு

வாசகனின் கற்பனை பெருமளவு தேவை என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

'அழகு மயக்கம்' என்ற நூலில் ஐந்து சிறிய நாடகங்கள் இடம் பெற்றுள்ளன. முதல் நாடகமான அழகு மயக்கம் ஓர் ஓவியனை மையமாக்கி அமைந்தது. தூரனின் ஓவியம் சார்ந்த சிறுகதைகளில் காணப்படுவது போலவே இந்த நாடகத்தில் வரும் ஓவியனும் முருகன் என்றே பெயரிடப்பட்டுள்ளான். ஓவியன் தன்னை மறந்து போன கமலாவால் நிலைகுலைந்து போகிறான். புதிதாக அறிமுகமான வசந்தாவை ஓவியமாக்கி மகிழ்வதோடு தன் காதலையும் புலப்படுத்துகிறான். அவள் தான் கமலாவின் தோழி என்று உணர்த்துவதோடு, ஓவியனுக்கு ஓர் உண்மையையும் சொல்லிப் போகிறாள். 'அழகைக் கலை வசப்படுத்தலாம்; ஆனால் காமவசப்படுத்தக் கூடாது' என்பது தான் அது. செறிவு மிக்க நாடகம் இது.

உணர்ச்சிப் போராட்டங்களுக்கு இடம் தந்து முடிவுகள் எதையும் நிகழ்வுகள் ஆக்காமல் மெய்யான வாழ்வின் இழை போல அப்படியே விட்டுவிடும் கலை நுட்பத்தை 'யார் விளையாட்டு' என்ற நாடகத்தில் அமைத்துக் காட்டுகின்றார்.

தன்னைப் புறக்கணித்த கணவன் மற்றொருத்தியோடு வாழ்வதை அறிகிறாள் தயாம்மாள். தன் குழந்தைகளைக் காப்பாற்ற நல்ல வேலை ஒன்றைப் பெறப் போகும் வழியில் கர்ப்பிணியான கணவனின் காதலியைச் சந்திக்கிறாள். அவள் துயரக் கதையைக் கேட்டு வேலையை அவளுக்கு விட்டுக் கொடுக்கிறாள். இந்தப் பெண்மனப் புதிர் 'கணவன்' என்ற நாடகமாகிறது.

ஹுமாயூனின் வாக்குறுதி காக்கும் மாண்பை ஒரு ரஜபுத்திரப் போர்ச் சூழற் பின்னணியில் சித்திரிக்கிறது, 'கங்கணம்'. தான் வழி தவறியது போல மகளும் தவறலாகாது என்ற பாதுகாப்பு உணர்ச்சியை ஒரு தாய் மேற் கொள்வதையும், அதை அவள் கணவன் புரிந்து கொண்டு, மனைவியின் பழைய வாழ்க்கையைப் பெருந்தன்மையோடு மறந்துவிடுவதையும் உளவியல் நுட்பத்தோடு புலப்படுத்துகிறது. 'புடமிட்ட பொன்' நாடகம்.

சூழ்ச்சி என்னும் நாடகம் தனி நூலாக வெளிவந்துள்ளது. தூரனின் மனதைக் கவர்ந்த சித்தூர் ரஜபுத்திரர் வீரமே இந்த நாடகத்திலும் இயங்கு சக்தியாகத் திகழ்கிறது. சித்தூர் ராணி பத்மினியின் உயிர்த் தியாகத்துக்குப் பிறகு அலாவுதீனின்

கைப்பாவையான மால்தேவ் அரியணை ஏறுகிறான். பத்மினியின் புதல்வன் அஜேசிங் சித்தூரை மீட்காமலே மரணம் அடைய, அவன் சகோதரன் மகன் ஹமீர்சிங் மால்தேவின் மகள் கமலாதேவியை மணக்கிறான். அந்த வீர மங்கையின் தூண்டுதலால் சித்தூர் ரஜபுத்திரர் வசமாகிறது. இந்தச் சரித்திரத்தை எவ்வித ஆரவாரமும் இல்லாத இயல்பு நடையில் நாடகமாகத் தந்திருக்கிறார் தூரன். நாடகத்துக்கு அடிப்படையான முரண் கூர்மை அடைவதை மிக அருமையாகச் சித்திரித்துள்ளார்.

'பொன்னியின் தியாகம்' என்ற மூன்றாவது நாடக நூலில் ஆறு சிறிய நாடகங்கள் இடம் பெற்றுள்ளன. 'மனமாற்றம்' தவிர மற்றவை யாவும் ஓரங்க நாடகங்களே.

சங்க காலத்து வள்ளல் பாரியின் பறம்பு மலையை நிகழ்களமாகக் கொண்டது பொன்னியின் தியாகம். மூவேந்தரின் முற்றுகை நெடிது நீண்டு போகவே, பாரியின் பறம்பு மலை பல்வகைப் பஞ்சங்களால் துயரம் அடைகிறது. போரில் சலிப்பெய்திய மாரன் என்ற வீரன் பறம்பு மலையைப் பகைவருக்குக் காட்டிக் கொடுக்க முற்படுகிறான். அவனைக் கொன்று நாட்டைக் காக்க முற்படுகிறாள் மனைவி பொன்னி. இந்தத் தியாகச் செயலைப் பேசுகிறது 'பொன்னியின் தியாகம்' நாடகம். தேர்ந்தெடுத்துக் கொண்ட நாடகச் சூழல் புதுமையானது.

மற்றொரு மங்கையின் செயலைக் கூறுகிறது 'சர்க்கரையின் கரும்பு' நாடகம். வயது முதிர்ந்தவளும், புலமைப் பாரம்பரியத்தில் வந்தவளுமான நெட்டி மாலை சர்க்கரைப் புலவரின் மனைவி, பொன்னையும் பொருளையும் திருடர்களுக்குக் கொடுத்துப் பழைய ஏட்டுச் சுவடிகளை அவர்களிடமிருந்து காப்பாற்றுகிறாள்.

'காதலின் பொய்' என்ற நாடகத்தில் கட்டபொம்மு காலத்தில் ஓர் ஆட்டுக்காரன் நாட்டுக்காகச் செய்த தியாகமும், அவன் காதலியும் கட்ட பொம்முவைக் காக்க உதவிய சிறப்பும் புலப்படுத்துப்பட்டுள்ளன. மேற்குறித்த மூன்று நாடகங்களிலும் 'விழுமியவை' எவை என்பதை உணர்ந்த மாதரசிகளின் வியத்தகும் அறிவு விளங்கக் காணலாம்.

இந்த நாடக நூலில் காந்தியச் சிறப்பை 'அன்பு வழி' நாடகமும். மானுட உளவியலை 'தன்னைத் தெரியுமா?'

நாடகமும் அன்பிருந்தும் அதனைப் பழகிக் கொள்ளாத தம்பதியரால் ஏற்படும் விபரீதத்தை 'மனமாற்றம்' நாடகமும் எடுத்துக்காட்டுகின்றன.

சங்க காலத்துக் காதலர்களான ஆதிமந்தி – ஆட்டன் அத்தி கதையைக் காவியமாகவும், நாடகமாகவும் பலர் எழுதி யுள்ளனர். காதல் உள்ளத்தின் பணிமனையில் நுழைந்து அதன் செயல்பாடுகைள நுட்பமாகச் சித்திரித்துத் தூரன் எழுதிய நாடகம் 'ஆதிஅத்தி'. பாரதிதாசனின் 'சேரதாண்டவம்,' கண்ணதாசனின் 'ஆட்டனத்தி ஆதிமந்தி' (காவியம்) ஆகியனவும் இதே கதையை அடிப்படையாகக் கொண்டவை. இம்மூன்று படைப்புகளுக் கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை, 'பெ. தூரன் கவிதைத் திறன்' என்ற ஆய்வேட்டில் ★வெ.சத்தியமூர்த்தி ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். அதன் வாயிலாக அத்தி, ஆதி, மருதி முக்கோணக் காதல் போராட்டமாகத் தூரன் இந்நாடகத்தை அமைத்துள்ள திறத்தை அறியமுடிகிறது. கலை பற்றிய தூரனின் எண்ணங்களை அத்தியின் பாத்திரம் ஏந்தி இருப்பதையும் காணமுடிகிறது.

> **''கலைஞன் என்ற முறையிலேயே அரசவையில் உரிய பாராட்டுப் பெற வேண்டும் என்று எண்ணி வந்தேன். இளவரசன் என்பதற்காக எனது கலைக்குப் பாராட்டுப் பெற நான் விரும்பவில்லை''**

(ஆதிஅத்தி, ப.21)

என்ற அத்தியின் கருத்து கலை, ஆட்சி அதிகாரம் கடந்த மாட்சி உடையது என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

இந்நாடகத்தில் பாத்திரங்கள் துல்லியமான படைப்புகளாக உருவாகி இருப்பதை ஆய்வாளர் மா. இராமச்சந்திரன் தம் எம்.ஃபில் ஆய்வேட்டில் விரிவாக ஆராய்ந்துள்ளார். ★அத்தி, காதலும், கற்பனையும், தன்மானமும் மிக்கவனாக அமைந்திருப்பதையும், ஆதிமந்தி கணவனையே தெய்வமாக நினைக்கும் பாத்திரமாகச் சிறந்திருப்பதையும், மருதி 'குறுகிய கால எல்லைக்குள் வந்தாலும் அனைவர் மனதிலும் நீங்கா இடம்

---

★வெ.சத்தியமூர்த்தி, பெ.தூரன் கவிதைத்திறன் (எம்ஃபில் ஆய்வேடு) அழகப்பா பல்லைக்கழகம், 1990

★மா.இராமச்சந்திரன் – பெ. தூரனின் இலக்கியப்பணி (எம்ஃபில் ஆய்வேடு) சென்னைப் பல்கலைக்கழகம், 1987.

பிடித்து விடுகின்ற... தியாகச் சுடர்' எனத் திகழ்ந்திருப்பதையும் அவர் திறம்படச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்று அங்கங்களில் ஒரு முழு நாடகமாக உருப்பெற்றது – 'காதலும் கடமையும்'. காதலுக்கும் கடமைக்கும் இடையில் நடைபெறும் போராட்டமே நாடகத்தின் கரு. காதலிக்காகக் கடமை தவறுபவனாக அறிமுகமாகும் டாக்டர் கேசவன், நாடக முடிவில் உண்மையை உணர்ந்து சரோஜாவின் காதலை ஏற்கிறான். அவனை முதன்மைப்படுத்திய மனப் போராட்டங்களே நாடகத்தின் இயங்குதளமாக அமைகின்றன. பெரும்பாலும் நல்லவர்களின் சோகங்களே தூரனின் கலைப் படைப்புகளின் மூலப் பொருளாகின்றன என்பதற்கு இந்த நாடகமும் எடுத்துக் காட்டுகின்றது.

மறை மனதின் பெருஞ் சக்தியே வாழ்வியலை வழிநடத்துகிறது என்ற உளவியல் கருத்தை அடித்தளமாகக் கொண்டது 'மனக்குகை' நாடகம். மனக்கோளாறு உடையவன் என்று தெரிந்திருந்தும் மாதவனை மணந்து கொள்கிறாள் சீதா. இருட்டு, கருமையான பொருள்கள் என எதனைக் கண்டாலும் அலறி மயங்குகிற மாதவனின் நோயின் மர்மம் பழனியில் ஓர் இருட்டுச்சந்தில் தெளிவாகின்றது. அதே இடத்தில் சின்ன வயதில் இருட்டில் மாடு மிரண்டு வந்தபோது ஏற்பட்ட அதிர்ச்சியே வயதான பின்னும் நீடிப்பதை அவனே புரிந்து கொள்கிறான். ஒரு மனோதத்துவ மருத்துவரின் நுணுக்கத்தோடு புதிரை அவிழ்க்கிற தூரனின் நாடகத்திறம் பாராட்டுக்குரியதாய் அமைகின்றது.

## நாடகங்கள் நடிக்கப்பட்டவை

குற்றவாளி, காதல் எங்கே, இளந்துறவி என்றும் மூன்று நாடகங்களின் தொகுப்பாக அமைந்த நாடகநூல் 'இளந்துறவி'. உயிரோடிருந்த சரோஜினி கொலை செய்யப்பட்டதாக ராகவன் நடத்தும் நாடகமும், அந்த நாடகத்தில் அலை பாயும் வாசுதேவன். மாலதி, சோமு ஆகியோர் உணர்ச்சிப் போராட்டமும் திகிலும், திடுக்கிடுமாக இந்த நாடகத்தை வழிநடத்துகின்றன. டெலிபோன் மணி என்ற சிறுகதையில் தூரன் வைத்த புள்ளியே இந்த நாடகம் என்ற கோலமாக உருக்கொண்டிருக்கிறது என்று கூறலாம்.

'காதல் எங்கே?' என்ற நாடகத்தில் 'அழகு மயக்கம்' நாடகத்தைப் போலவே ஓர் ஓவியன் பாத்திரமாகிறான். கலை ரசனை மிக்க லலிதாவை ஓவியனின் மேம்போக்கான

நடத்தையில் அந்தக் கற்பனைக்கு வடிகால் காண்கிறாள். ஆயினும் உரிய நேரத்தில் கணவனின் அன்பால் காப்பாற்றப் படுகிறாள். அடிமனப் பின்னலை மெல்ல அவிழ்க்கிறது இந்நாடகம்.

துறவி தன் பக்குவத்தை இழந்து ஓர் இளம் விதவையைக் காதலிக்க முற்படுகிறான்; ஆனால் அவளோ அவன் பாடலைக் கேட்டே 'துறவு உள்ளம்' கொண்டு விடுகிறாள். இந்த முரண்பாட்டின் சந்திப்பாக 'இளந்துறவி' நாடகம் அமைகிறது.

தூரனின் நாடகங்களில் நாட்டுப்பற்று, தூயகாதல், உள்ளத்து முரண்பாடுகளின் மோதல், கலை விளைவிக்கும் தடுமாற்றம், மகளிரின் தியாகம், அடிமனம் நிகழ்த்தும் விளையாட்டு ஆகிய அடிப்படைகள் மிகுதியாகத் துலங்கு கின்றன. செயற்கையான பேச்சு, ஆடம்பரமான நடை, இயல்புகட்கு மாறான சிக்கல் எவையும் இல்லை. பொய்யான நகைச்சுவை இழிவுசூளும் தூரன் நாடகங்களை அலங்கோலம் செய்யவில்லை. அறிவியல் அறிவும், கவிதை உள்ளமும் பின்னி உருவாக்கிய ஒரு நெசவுக்கலை விந்தையைத் தூரன் நாடகங்களில் பார்க்க முடிகிறது.பள்ளிகளில் சில நாடகங்கள் நடிக்கப்பட்டன. பெரிய அளவில் மேடை ஏறத்தக்கவை தூரனின் நாடகங்கள்.

## இசைக்கு ஆற்றிய தொண்டு

நாடகக் கலைக்கு ஒரு நல்ல பங்களிப்பைத் தந்திருக்கும் தூரன் இசைப்பாடல்களின் வாயிலாக இசைக் கலைக்கு ஆற்றியுள்ள பணி விலைமதிப்பிட முடியாதது.

தொன்மை வாய்ந்த தமிழ்ப் பண்கள் சங்க இலக்கியக் காலத்தில் வழங்கின. சிலப்பதிகாரமும் அதன் உரையும் இசைப் பழமையை விளக்குகின்றன. தேவார, திவ்யப்பிரபந்த காலமாகிய பக்தி இயக்கக் காலத்தில் எண்ணிலடங்காப் பண்கள் இனிமை பொழிந்தன. அன்னிய ஆட்சிக்காலம் வந்தபோது தொன்மைத் தமிழிசையே கர்நாடக இசை என அழைக்கப்பெற்றது.

> **''வடநாட்டினர் தமக்கு அருகில் உள்ள கர்னாடக நாட்டைப் பார்த்து அங்கும் அதற்கு தெற்கிலும் உள்ள இசைக்குக் கர்னாடக இசை என்று பெயரிட்டு அழைத்தனர்''**

எனத் தூரன் ஒரு சொற்பொழிவில் விளக்கம் அளித்ததர்.

வரலாற்றுப் போக்கில் முத்துத் தாண்டவர், மாரிமுத்தா பிள்ளை, அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி, ஊத்துக்காடு வேங்கட சுப்பையர் முதலிய பல அருமையான இசைப்பாடல் ஆசிரியர்கள் உருவாயினர். ஆயினும் தமிழ்நாட்டில் நிலவிய நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தியாகராச சுவாமிகளின் இசை உருக்கள் செல்வாக்குப் பெற்றன. அவ்வாறே முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் பாடல்களும் இசைவாணர்களால் பாடப் பெறலாயின. மகாகவி பாரதியார் முதல் பிற்காலத்தில் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் வரை பல நல்லோரும் தமிழிசை வளர வேண்டுமென ஆர்வமுற்றனர். இந்தச் சூழலில் தமிழ் இசை உருக்களாகிய கீர்த்தனைகள் ஏராளமாகப் படைக்கப்பட வேண்டிய அவசியம் நேர்ந்தது. இந்த இன்றியமையாத தேவையை நிறைவு செய்யும் வகையில் தூரனின் இசைப் பாடல்கள் மலர்ந்தன.

பல்வேறு தொகுதிகளாக வெவ்வேறு காலங்களின் தூரனின் இசைப் பாடல்கள் (கீர்த்தனைகள்) வெளி வந்துள்ளன.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடுகளாக 'தமிழிசைப் பாடல்கள் (தொகுதி 7)'. 'தமிழிசைப் பாடல்கள் (தொகுதி 15)' என இரு தொகுதிகள் வெளிவந்துள்ளன. அல்லையன்ஸ் நூல்வெளியீட்டு நிறுவனம் 'இசை மணிமாலை' என்னும் தொகுதிஜ்ய வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சென்னை தமிழ் இசைச்சங்கம் 'கீர்த்தனை மஞ்சரி' என்ற அழகான நூலைத் தொகுத்துத் தந்தது (1951).

இந்த நான்கு தொகுதிகளுக்குப் பின்னர் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும், தமிழ் இசைச் சங்கமும் அளித்த நிதியுதவியைப் பயன்படுத்தி 'இசை மணி மஞ்சரி' (1970), 'முருகன் அருள்மணிமாலை'(1972), 'கீர்த்தனை அமுதம்' (1974) ஆகிய நூல்களைத் தூரன் வெளியிட்டு, இசைக் கலைஞர்களுக்கு இலவசமாக வழங்கினார். இவை அனைத்தும் சுர, தாள, இசைக்குறிப்புக்களோடு அச்சில் வெளிவந்துள்ளன. 1980–ல்' நவமணி இசைமாலை' என்னும் தொகுப்பும் வெளியிடப் பட்டதாகத் தெரிகிறது.

இசைத் தமிழுக்கு ஒரு அருணாசலம் (அருணாசலக் கவிராயர்) பெருந் தொண்டு ஆற்றியது போல, பெரியசாமித் தூரன் என்ற இசைப் பேரறிஞரை உருவாக்குவதில் இரண்டு அருணாசலங்கள் பங்கு வகித்துள்ளனர். ஒருவர் சிற்றப்பா அருணாசலக் கவுண்டர்;

இன்னொருவர் தந்தைவழி உறவினரான மற்றொரு அருணாசலக் கவுண்டர். பள்ளிப் பருவத்தில் சிற்றப்பா அருணாசலக் கவுண்டர் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைப் பாடல்களைப் பாடி அறிமுகம் செய்வித்தார். தெற்கு வளவு அருணாசலக் கவுண்டர் பாடல்கள் எழுதி இசையோடு பாட உணர்வூட்டினார்.

இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணி யாற்றும்போதே தூரன் கீர்த்தனைகள் புனையத் தொடங்கி விட்டதாக சி. சின்னுசாமி தம் கட்டுரையொன்றில் குறிப்பிடு கின்றார். 1933 முதல் 1947 வரை பள்ளி ஆசிரியப் பணிக்காலத்தில் இயற்றிய கீர்த்தனைகளுக்கு இசையமைத்து உதவியவர் அப்போது உடன்பணியாற்றிய இசை ஆசிரியர் என். சிவராமகிருஷ்ணய்யர். அவரே இத்துறையில் தம் முதல்குரு என்று தூரன் கீர்த்தனை மஞ்சரி நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

> **''சாகித்யமும் இசையும் பூவும் மணமும் போல் இணைந்திருப்பவை. என்னுடன் கூடவேயிருந்து என் உள்ளக் கருத்ததையறிந்து பொருத்தமாக அவர் இசை வகுத்து உதவியிருக்கிறார்....அவருக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன்''**

என்று நன்றி பாரர்ட்டியுள்ளார் தூரன். சென்னையில் வசிக்கத் தொடங்கிய பின் முசிறி சுப்பிரமணிய அய்யரின் மாணவர் டி. கே. கோவிந்தராவ் துணையாக நின்று இசையமைத்து உதவியுள்ளார். சில பாடல்களுக்குத் தண்டபாணி தேசிகர் இசைக் குறிப்பு வகுத்துத் தந்துள்ளார்.

பள்ளி ஆசிரியப் பணியில் இருந்தபோது எழுதிய கீர்த்தனைகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நடத்திய தமிழிசைப் போட்டிக்கு அனுப்ப மறுத்தார் தூரன். பின்னர் மிகுந்த வற்புறுத்தலுக்கு இசைந்து அனுப்பியபோது முதல் பரிசு தூரனுக்குக் கிடைத்தது. அது மட்டுமன்றி அவருடைய பாடல்களைத் தமிழ் இசைப் பாடல்கள் எனப் பதிப்பிக்கவும் முன்வந்தது அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தம்முடைய இசைப் பாடல்கள் எவ்வாறு பிறந்தன என்பதையும் தூரன் எடுத்துச் சொல்லி இருக்கின்றார்.

**"நாம் இறைவனை நோக்கி ஓரடி நடந்தால் அவன் நம்மை நோக்கி நூறடி வருகின்றான் என்று கூறுவார்கள்... இவ்வாறு இறைவனை நோக்கி நடக்கும் முயற்சியிலே எழுந்தவை தான் என்னுடைய கீர்த்தனைகள் எல்லாம்"**

(முருகன் அருள்மணிமாலை—முன்னுரை).

தூரனின் இசைப் பாடல்களில் மிகச் சிலவற்றைத் தவிர அனைத்தும் இறைவனோடு நடத்தும் இனிய உரையாடல் களாகவே திகழ்கின்றன.

சக்ரவாகப் பண்ணில் தூரன் இயற்றியுள்ள ஒரு பாடல் மிக அருமையாக அவர் தம் கீர்த்தனைகளின் மூல ஊற்றினை அடையாளம் காட்டுகின்றது.

பல்லவி

*நானொரு சிறு வீணை அதன்*
*நாதமாம் உயிர் நீயே*
*(நான்)*

அனுபல்லவி

*தேனெனும் மொழியாள்சிவசக்தி பாலனே*
*தென் பழனாபுரித் தெய்வமாம் வேலவனே*
*(நான்)*

சரணம்

*நல்ல நல்லிசைகளாய் நாதனே வருவாய்*
*நானிலம் இன்புற நான் நடம் புரிவேன்*
*கல்லும் கரைந்துருகக் கனிவுடன் பாடுவேன்*
*கருணையங் கடலேயுன் பெருமையைப் பேசுவேன்*
*(நான்)*

அருளமுதாய் உருகுகிற இசைப் பாடல்களை முக்கிய ராகங்கள் அனைத்திலும் பாடியுள்ளார் தூரன்.

அழகான சொற்கட்டுக்கள் நிரம்பியவை தூரனின் இசைப் பாடல்கள்.

எடுத்துக்காட்டாகச் சிவபெருமானைப் பற்றிய பாடல் வருமாறு:

***"புரத்தைச் சிரித்தழிப்பான் மதன்***
***உரத்தை விழித்தழிப்பான் யம***

*மதத்தை உதைத் தழிப்பான் கடல்*
*விடத்தைக் குடித் தழிப்பான்*
*வரத்தைக் கொடுக்கு மீசன் மலர்ப்*
*பதத்தை நினைத்து மெத்த மிகு*
*சிரத்தை யுடன் துதித்தால் உயர்*
*பதத்தை பெறலா மிதைக்*
*கருத்தில் எந்நாளும் கொள்ளுவாய்—மனமே*
*கவலைக் கடலைத் தள்ளுவாய்.''*

உருவகக் கற்பனை அழகு துளும்பும் படியாகவும் தம் கிருதிகளைத் தூரன் உருவாக்கியுள்ளார். வாழ்க்கை என்பது ஐம்பொறிகளோடு நடத்தும் போர் என்றும், அது நிகழும் குருட்சேத்திரம் உள்ளம் என்றும், தான் தேர் என்றும் அதை நடத்துபவன் கண்ணனாகிய சாரதி என்றும் அருமையாக உருவகம் செய்கிறார்:

*சாரதியாய் வருவாயே—கண்ணா*
*சமர் தனிலேயிந்த ரதந்தனை நடத்திடும்*
*(சாரதி)*

*பாரில் வாழ்க்கையே போரதில் ஐம்பொறிப்*
*பகைவர்களை வென்றே வகையுடன் ஆளவே*
*(சாரதி)*

அவருடைய வழிபடு கடவுளாகிய முருகனைப் பாடும் பாடல்கள் ஒரு தனி மெருகோடு ஒளி வீசுகின்றன. அமுதமயமாக அழகன் முருகனைத் தரிசிக்கின்றார் மணிரங்கு ராகப் பாடலில்:

***எண்ணிடும் போதே இனித்திடும் அமுதம்***
***என்னுளத் திருக்கின்ற தே***
***(எண்)***

***கன்னலும் தேனும் கனியும் இன்பாகும்***
***என்ன சுகமவை இதற்கு நிகராகுமோ***
***(எண்)***

***நாவினுக் கமுதம் செவிதனக் கமுதம்***
***நயனத்திற்கும் அது நந்தா அமுதம்***
***பாவிலும் பண்ணிலும் பொங்கிடும் அமுதம்***
***பஞ்சாமிர்தம் மகிழ் பழநி வாழ் அமுதம்   (எண்)***

இராமகமாலிகைகளாக அமைந்து 'பண்ணிற் கோடி வகை இன்பம்' வழங்கும் பாடல்கள் பல படைத்துள்ளார் தூரன்.

*என்னென்ன விளையாடல் அம்மா—முருகன்*
*என் கண்ணில் காட்டிடும் மாயங்கள் ஒன்றோ'*

எனத் தொடங்குத் பாடலில் குந்தலவராளி, வசந்தா, கமாசு, அடாணா, கீரவாணி, துர்க, சிந்துபைரவி என இராகங்கள் பூப்பூவாய் மணக்கின்றன. அதுமட்டுமன்றி; பாரதியாரின் தீராத விளையாட்டுப் பிள்ளை போல் நயம் காட்டவும் வல்லது இப்பாடல்.

மற்றொரு இராமகமாலிகைப் பாடலில் இராகங்களின் பெயர்கள் பாட்டுவரிகளிலேயே பொதிந்து வைக்கப் பட்டுள்ளன.

*பிச்சை எடுக்கவந்த <u>சங்கர னாபரணம்</u>*
*பிறை மதி பாம்பாமே (பிச்சை)*

*<u>நாட்டை</u> அரசாளும் நம்பி மாறனிருக்க*
*வீட்டை யளிக்கும் ஈசன் வீடு*
*சுடலையாமோ (பிச்சை)*

இவ்வாறு இராகப் பெயர்கள் பல வருமாறு மிகத் திறமையோடு பாட்டை உருவாக்கியுள்ளர்.

சில பாடல்களில் தம் பெயரை முத்திரையாக அமைத்தும் பாடியுள்ளார். 'பழனி மலைதனில் வாழும் முருகா' என்னும் பாடலின் இறுதியில் 'தூரனைக் காத்திடும் துய்யனே மெய்யனே' என முடிக்கின்றார். பழனி முருகன் காவடிச் சிந்தாக அமைந்த இன்னொரு பாடலில்,

*நித்ய ஜோதி வடிவாம் ப்ரகாசன்—தூரன்*
*நெஞ்சை நீங்கா தென்றும் அங்கு வாசன்*

என அழகாக முத்திரை பதிக்கின்றார். எனினும் தன் பெயரை முத்திரையாக அவர் வைத்த பாடல்கள் மிகவும் குறைவு.

துதிப்பாடல்களாக அன்றிப் பொதுக் கருத்துக்களையும் இசைப் பாடல்களாகப் பாடியுள்ளார்.

*''எவ்வுயிர்க்கும் அன்பு செய்திடுவாய்''*
*''கலை இன்பமே நிலை இன்பமாம்''*

''அன்பு செய்து வாழ்வாய்''
''சோர்வடையாதே உள்ளம் கலங்காதே''
''இன்பத் திருநாள் வந்ததையா எங்கள்
தந்தை மகாத்மா காந்தி பிறந்த நாள்''

எனத் தொடங்கும் பாடல்கள் எல்லாம் அத்தகையவை. அவற்றுளெல்லாம் தலைசிறந்த ஒரு பாடல் தாகூரின் கவிதை ஒன்றை உட்கொண்ட அருமையான கருத்தும் வளமும் செறிந்தது. ஹரிகாம்போதி ராகத்தில் அமைந்த அப்பாடல் வருமாறு:

*எங்கே தேடுகிறாய்—இறைவனை*
*இங்கே காணாமல்—இறைவனை (எங்கே)*

*கங்காதரா கார்வண்ணா முருகா*
*பங்கேருகத் துறையனே எனக்கூவி (எங்கே)*

*மங்கும் பொழுதளவும் வாடித்தொழில் புரியும்*
*மக்களெல்லாம் இறைவன் வடிவல்லவோ*
*அங்கங் குறைந்தழுகி ஐயா எனக் கையேந்தி*
*அகத்தின் கதவருகே அழைப்போன் அவனல்லவோ*
*(எங்கே)*

தாகூரின் கவிதைக்கும் அப்பால் ஒரு கனிவையும் உருக்கத்தையும் சமைக்கும் ஆற்றல் இந்தப் பாடலில் ஒளிவிடுகின்றது.

இத்தகைய அருமைப்பாடுகளெல்லாம் நிறைந்து செறிந்த இசைப் பாடல்கள்—தூரனின் கீர்த்தனைகள்—என்பதால்தான் இசைப் பேரறிஞர்களும், கலைஞர்களும் ஒருமனதாக அவரைப் போற்றிப் புகழ்ந்திருக்கின்றனர்.

**''ஸ்ரீ தூரனின் சாகித்யங்களில் உயர்தர சங்கீதத்துக்குரிய சிறந்த பண்புகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. சாகித்யங்களில் அவர் கையாளும் தமிழ் எளிதாயும் இனியதாயும் இருக்கின்றது. உணர்ச்சி ததும்பிக் கவிதா சந்தம் பொருந்தியிருக்கிறது...**

**''ஸ்ரீ தூரன் ஒரு கவிஞர். அவருடைய இருதயம் தூய்மையானது. இசைமயமானது. ஆகையால்**

**பாடல்களில் இயற்கையாகவே தமிழ் வளமும் இசையும் ஊடுருவி நிற்கின்றன....''**

**''இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ் நாட்டில் வரப்போகும் சங்கீத வித்வான்களும் மாணவர்களும் மாணவிகளும் பெரியசாமித் தூரன் அவர்களின் சாகித்யங்களைப் பாடுவதையும் பதினாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கேட்டு மகிழ்வதையும் மனக் கண்ணால் கண்டு களிக்கின்றேன்....''**

*(கீர்த்தனை மஞ்சரி – அணிந்துரை)*

என்று அருங்கலைச் சுவைஞர் கல்கி மெய்சிலிர்க்கப் பாராட்டியுள்ளார்.

டைகர் வரதாச்சாரியார், முசிரி சுப்பிரமணிய அய்யர், செம்மங்குடி சீனிவாசையர், பேராசிரியர் சாம்பமூர்த்தி, மு.வரதராசனார் போன்ற இசைக் கலை வல்லுநர்களும், அறிஞர்களும் தூரனின் இசைப்பாடல்களுக்கு உவகை மிக்க வரவேற்பு நல்கியுள்ளனர்.

**''பாடுவதற்குச் சொல் நயத்துடனும், உள்ளத்தைத் தொடும் பக்திப் பெருக்குடனும், இசை அமைப்பு ராக பாவம், தாள அமைப்பு வெகு சுச்சிதத்துடனும் எளிதாக எல்லோரும் பாடம் செய்து பாடக்கூடிய முறையிலும் அமைந்துள்ளது....''**

– செம்மங்குடி சீனிவாசய்யர்.

**''இவருடைய பாடல்கள் பாடுவதற்கு மிக எளிமை யோடும் அழகிய சொற்கோர்வையோடும் அமைந்திருக் கின்றன. இவற்றைப் பாடும்போது தமிழின் அழகும், இசையின் அழகும் நன்கு வெளிப்படுகின்றன''**

– முசிரி சுப்பிரமணிய அய்யர்

மேடைகளில் இசைமாலைகளாக மணக்கும் தூரனின் பாடல்கள் இசைத்தட்டுகளாகவும் வெளிவந்துள்ளன.

இசைக் கலைக்குத் தூரன் ஆற்றிய பெரும் தொண்டுக்காகவே தமிழ் இசைச் சங்கம் 1972 –ல் 'இசைப் பேரறிஞர்' பட்டம் வழங்கி கௌரவித்தது. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

1970–ல் 'கலைமாமணி' எனக் கௌரவித்து மகிழ்ந்தது. எம்.ஏ.சி. அறக்கட்டளையினர் பெருநிதி அளித்துப் போற்றினர். அந்த நிதியை அடித்தளமாக வைத்து ஆண்டு தோறும் இசையரங்கு நடத்த ஒரு அறக்கட்டளை நிறுவினார் தூரன். பண்ணாராய்ச்சி மாநாடுகள் நிகழ மூலகாரணமாகவும் விளங்கினார்.

இத்தனை பெருமைக்குரிய சாதனைகளை நிகழ்த்திய தூரன் மெத்தவும் பணிவுடன் கூறுகிறார்:

> **"இசை என்கிற பெருங்கடலிலே சுமார் 40 ஆண்டுகள் மூழ்கியிருக்கிறேன்; ஆனால் சுண்டுவிரல் ஆழம்கூட நான் உள்ளே புகவில்லை என்பதை நான் இப்போது உணர்கிறேன்"**
>
> *(இசைமணி மஞ்சரி – முன்னுரை)*

# 5. கட்டுரைச் செல்வம்

**எ**ளிமையும் அழகும் ததும்பும் நடையில் தூரன் எழுதிய கட்டுரைத் தொகுதிகள் நான்கு வெளிவந்துள்ளன. **பூவின் சிரிப்பு** *(1951)*, **காட்டுவழி தனிலே** *(1952)*, **தேன்சிட்டு** *(இ.ப. 1963)*, **காற்றில் வந்த கவிதை** *(1958)* என்பன அந்நூல்கள்.

எந்த ஒரு பொருளைக் குறித்தும் எண்ணங்களை வெளியிட வாய்ப்பான ஒரு கலை வடிவமாகக் கட்டுரைகளைக் கருதினார் தூரன். அவருக்கு மிகவும் பிடித்த ஆங்கிலக் கட்டுரை ஆசிரியர் ஏ.ஜி. கார்டினர். அவர் எழுதிய 'எனது பயணத் தோழன்' என்னும் கட்டுரையை வியந்து போற்றுகின்றார் தூரன்.

> **''ஏ.ஜி. கார்டினர் என்ற ஆங்கிலக் கட்டுரை ஆசிரியர், 'எனது பயணத் தோழன்' என்ற தலைப்பில் ஒரு கொசுவைப் பற்றி அழகான கட்டுரை எழுதி யிருக்கிறார். ஒருநாள் இரவு அவர் ரயிலில் போய்க் கொண்டிந்தாராம். அவர் இருந்த பெட்டியில் வேறு யாருமே இல்லையாம். ஆனால் ஒரு கொசு மாத்திரம் பயணம் செய்ததாம். அதைப் பற்றி எழுந்த உணர்ச்சி களையும் எண்ணங்களையும் அக்கட்டுரையிலே தீட்டி இருக்கிறார்..... அற்பம் என்று கருதக்கூடிய பலபொருள்களை அடிப்படையாகக் கொண்டு அவைகள் எழுதப் பெற்றிருக்கின்றன''**

(பூவின் சிரிப்பு – முன்னுரை)

என்று குறிப்பிடுகின்றார். கட்டுரை வரைவதற்கு மிகச் சாதாரணமான பொருள்களைக் கூடத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று எடுத்துக் காட்டுகின்றார்.

கட்டுரை எழுதும் கலை குறித்து அவருக்கென்று சில வரையறைகளை அவர் வகுத்துக் கொண்டிருந்தார். கட்டுரைகள் இலக்கியம் என்ற தகுதியைப் பெற வேண்டுமானால் எடுத்தாளும் பொருள்களை விட, எழுதுகின்ற மனிதனின் சொந்த மனப்பான்மையையும் உணர்ச்சிகளையும் அது தாங்கி நிற்க வேண்டியது முக்கியம். இரண்டாவதாக எழுதுவதிலே இலக்கியச் சுவையும் கலைப்பண்பும் சிறப்பிடம் பெற வேண்டும் என்றும் தூரன் கருதுதினார்.

ஒரு கட்டுரை உருவாவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். தூரனைப் பொறுத்தவரை இரண்டு காரணங் களால் கட்டுரைகள் உருவாயின என்று தெரிவிக்கிறார்.

> **''நல்ல நூல்களைப் படிக்க வேண்டும்; இல்லாவிட்டால் தனியாக உலாவச் செல்ல வேண்டும். இந்த இரண்டு செயல்களிலும் எனக்கு அளவு கடந்த விருப்பம் உண்டு. நல்ல நூலைப் படிக்கும்போது அதை ஆக்கியோனுடன் சேர்ந்த கொண்டு அவன் தோற்றுவிக்கும் ஒரு தனி உலகத்திலே மனம் உலவுகிறது; தனியாக உலாவும் போது அது தனது சொந்தக் கற்பனை உலகத்திலே யாதொரு கட்டுப்பாடுமின்றிப் பறந்து திரிகிறது. நூலாசிரியன் தோற்றுவிக்கும் உலகமும், மனம் தானே உண்டாக்கிக் கொள்ளும் உலகமும் எனக்குப் பெரியதோர் இன்பம் பயக்கின்றன''**

*(பூவின் சிரிப்பு – முன்னுரை)*

மக்கட் கூட்டத்தை விட்டு விலகி நின்று, அதன் போக்கைக் கூர்ந்து கவனிப்பதைத் தான் தன் மனம் பெரிதும் நாடுகின்றது என்றும் அவர் தெரிவிக்கின்றார். வாழ்க்கை விளையாட்டினை இந்த இருவேறு உலக அனுபவங்களாகக் கண்டு எழுதுவது தான் தூரனின் கட்டுரைகள் தோன்றுவதற்கான மூலமாகக் காண முடிகிறது.

தூரனின் கட்டுரைகளில் இயற்கை கற்றுக் கொடுக்கும் பாடங்கள் முதன்மை பெறுகின்றன. மலர்ந்து உதிரும்பூ ஒரு மகத்தான கருத்தைச் சொல்வதாக அவர் உணர்த்துகிறார்.

> **''பூ சிரிக்கிறது. ஓயாத சிரிப்பு; மாறாத புன்முறுவல். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வண்ணத்தை நறுமணத்தை அள்ளி வீசுகின்றது. ரீங்காரமிட்டு வரும் வண்டுகளுக்குத் தேனை மோகன இளநகையோடு கொடுக்கிறது, அடடா! அதன் வாழ்வு ஒரே இன்பம், இறுதிவரையில் ஒரே களியாட்டம். அதிலும் காற்றுத் தேவன் வந்து உடலைத் தீண்டிவிட்டால் அதன் இன்ப நடனத்திற்கு முடிவே இல்லை''**

*(பூவின் சிரிப்பு)*

என்று பூவின் சிரிப்பை அறிமுகம் செய்கிற தூரன் மனிதனிடத்தில் மண்டிக்கிடக்கும் கவலை, சலிப்பு, பொறாமை,

பூசல்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றார். பூவைப் போலத் தனக்கும் பிறர்க்கும் மகிழ்வு தந்து மனிதன் வாழவில்லையே என்ற ஏக்கத்தைப் பகிர்ந்து கொள்கிறார்.

பறவைகளைக் கூர்ந்து கவனிக்கிற பார்வை தூரனுக்கு இருந்தது. அவர் அடிக்கடி தம் கட்டுரைகளில் குறிப்பிடுகிற ஒரு பறவை இரட்டைவால் கரிக்குருவி. அக்குருவி ஆட்டின் முதுகில் அமர்ந்தபடி பூச்சிகளைப் பிடித்து உண்பதைப் பார்க்கிறார். சாதுவான ஆட்டைத் தன்னலத்துக்குப் பயன்படுத்துகிறதே குருவி என்று அவர் நினைக்கிறார். மாடு மேய்க்கும் கிழவன் ஒருவன் அந்த நினைப்பை அகற்றி விடுகிறான்.

> **"ஆடு புல்லை மேய்கிறது. கரிக்குருவி பூச்சிகளைப் பிடித்துத் தின்கிறது. ஆடு வாகனமானதோடு சரி. ஆனால் எங்களைப் பாருங்கள். எசமானர்கள் எங்கள் மேல் உட்கார்ந்திருக்கிறார்கள். எங்களைச் சக்கை யாகப் பிழிந்து வேலை வாங்குகிறார்கள். அதோடு விட்டுவிடுகிறார்களா என்ன? அதுதான் இல்லை. நாங்கள் பாடுபடுவதால் கிடைக்கும் பொருள்களை எல்லாம் எடுத்துக் கொள்ளுகிறார்கள்"**
>
> *(கரிக்குருவி)*

என்று கிழவன் சொல்லுகிறான். அன்று முதல் கரிக்குருவியை அருவருப்போடு பார்ப்பதை விட்டு விட்டதாகத் தூரன் தெரிவிக்கின்றார்.

ஒரு நாள் உலாவப் போகும்போது ஓர் இடையன் ஆடு மேய்ப்பதைக் காண்கிறார். ஆடுகளை உற்றுப் பார்த்ததைக் கண்ட இடையன், ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள் என்று கேட்கிறான். 'ஆட்டுக் குட்டிகளுக்காவது வாழத் தெரிகிறது, மனிதனுக்கு அதுகூட முடியவில்லையே என்று யோசிக்கிறேன்' என்று தூரன் சொன்னபோது, இடையன் சொன்ன பதில் சிந்தனைக்கு உரியதாகிறது.

> **"ஆட்டுக்குட்டிக்கு என்ன சாமி தெரியும்? பாவம்! நானும் ஐம்பது வருஷமாக ஆடு மேய்க்கிறேன். இருபது தலைமுறைக்கு மேலே ஆடுகளைப் பார்த்தாச்சு. ஒரு நரிக்குட்டியை எதிர்த்து நிற்க இதுகளுக்கு முடியலையே"**
>
> *(மாலைப் பொழுதினிலே)*

இந்த அபூர்வ உண்மை மனதில் ஆழமாகப் பதிகின்றது. அதே சமயம் ஆட்டுக்குட்டியைப் போலவே தன் வாழ்வையும் மாற்றிக் கொள்ளத் தெரியாத இடையனைக் குறித்தும் தம் உள்ளத்தின் வெதும்பலை உணர்த்துகிறார் தூரன்.

பூச்சிகளைப் பிடித்து உண்ணுகின்றன கரிச்சானும், மைனாவும். ஆனால் தேன்சிட்டு மலர்களில் இருக்கும் தேனை உண்ணுகின்றது. அதனால் மகரந்தச் சேர்க்கைக்குக் உதவுகின்றது. இந்தக் காட்சியைக் காணும்போது தூரன் உள்ளம் நினைக்கிறது.

> **"கொன்று செய்கின்ற தொண்டை விடத் துன்பங்கலவாத**
> **இன்பத் தொண்டைச் செய்வது மேல்"**
>
> (தேன் சிட்டு)

இயற்கை இவ்வாறு பல பாடங்களைக் கற்றுத் தருவதாகக் கட்டுரைகளில் எழுதுகின்றார்.

தூரனின் கட்டுரைகளில் சில, வாழ்வியல் உண்மைகளை நகைச்சுவையோடும், மென்மையோடும் எடுத்துரைக்கின்றன. தினந்தோறும் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும் பேராசிரியர் மழைநாளன்று குடைபிடித்துக் கொண்டே தண்ணீர் ஊற்றுகிறார். பழக்கம் இப்படி மயக்கமூட்டுகிறது. நல்ல பழக்கமென்றாலும் அது நம் கையாளாக இருக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டுகின்றார்.

'குறட்டை' என்ற நகைச்சுவை குமிழியிடும் கட்டுரையில் தன் குறட்டைப் பழக்கத்தை மறந்துவிட்டுப் பிறர் குறட்டையைக் குற்றம் சொன்ன வேடிக்கை நிகழ்ச்சி விளக்கப்படுகிறது.

புதிதாகக் கட்டிய வீட்டில் அடைக்கலாங் குருவிகள் கூடு கட்டி விடுகின்றன. அவற்றை அடித்து விரட்ட முற்படும் தன் உள்ளம் சுயநலத்தால் இறுகிப் போனதை உணர்கிறார் தூரன்.

> **"..... உடைமை என்கின்ற எண்ணம் வந்தவுடன் என்**
> **போக்கே மாறிவிட்டது. என் உள்ளத்திற்கு இயல்பான**
> **மகிழ்ச்சியும் மங்கிவிட்டது"**
>
> (எங்கள் வீடு)

என்று தூரன் குறிப்பிடும்போது ஓர் எளிய நிகழ்ச்சியிலிருந்து ஒரு பெரிய உண்மை புலப்படுத்தப்படுகிறது.

ஓர் அழகான கட்டுரையில் தலையெழுத்து வேறு, விதி வேறு என்று நுட்பமாக எடுத்துக் காட்டுகின்றார். விதி என்பது ஒரு நியதி அல்லது சட்டம் என்றும், தலையெழுத்து என்பது தன்னை மீறி ஏற்பட்ட பாரம்பரியம், இளமைச் சூழல் என்றும் விளக்கம் தருகிறார். ஒருவன் தன் வாழ்வில் செய்யும் தவறை அனுபவித்தே தீர வேண்டும் என்பது விதி. ஆகவே ஒருவன் தன் விதியைத் தானே எழுதிக் கொள்ளுகிறான் என்று 'தலையெழுத்து' என்னும் கட்டுரையில் விளக்குகின்றார்.

'தேன்சிட்டு' என்னும் கட்டுரைத் தொகுதியின் முன்னுரையில் பின்வருமாறு எழுதுகின்றார் தூரன்.

> **''இன்று ஓங்கி முழங்கவேண்டிய வாழ்க்கை இலட்சியம் 'அன்புசெய்தல்' என்ற ஒன்றேதான். அந்த மாணிக்க இழையிலே செல்லக்கூடிய எண்ணச் சித்திரங்களையே இங்கு கோவை செய்திருக்கிறேன்''**

உண்மையில் அவருடைய எல்லாக் கட்டுரைத் தொகுதிகளிலும் அன்பு என்ற மந்திரத்தின் ஒலியையே கேட்க முடிகிறது.

ஆமைக்கும் முயலுக்கும் ஏற்பட்ட போட்டி அனைவருக்கும் தெரிந்தது தான். அந்தக் கதையின் மூலம் தூரன் கண்டெடுத்த பாடம் மாறுபட்டது. ''ஊர்ந்து செல்லும் பிராணி ஓட்டம் மிகுந்த பிராணியை வெல்ல வேண்டும் என்று மக்களின் உள்ளத்திலே பரிவு சுரக்கின்றது'' இந்தப் பரிவின் அடையாளமே இக்கதையின் அடித்தளம் என்கிறார் தூரன்.

''முருங்கை மர வேதாளம்'' பற்றிய பழைய கதையின் தத்துவத்தை ஆராய்கிற தூரன், மனிதன் தன்னலம் என்ற வேதாளத்தைக் கட்டிப் போட வேண்டியதன் அவசியத்தைச் சொல்கிறார். அப்படிக் கட்டிப் போட்டால் அனைவரும் உடன் பிறந்தார் போல வாழலாம் என்ற ஆசையைச் சொல்லுகின்றார்.

அன்பின் ஒலியை 'அன்பு வழி', 'அமைதியும் இன்பமும்' முதலான கட்டுரைகளில் புலப்படுத்தும் தூரன் இரண்டு மாறுபட்ட கோணங்களை எடுத்துக் கூறித் தன் கருத்தை நிலைநாட்டவும் செய்கின்றார்.

உணவுக்கு உப்புப் போல மாறுபாடுகள் அல்லது முரண்கள் அவசியம் என்றாலும் உப்பு அதிகமானால் உணவு பாழாவது போன்று முரண்கள் மிகுதிப்பட்டால் அனைத்தும் அழியும் என்று 'முரண்பாடுகள்' என்ற கட்டுரையில் விளக்குகின்றார். இந்த முரண்பாட்டையே காட்சிப் படுத்துவதாக அமைகிறது 'பல்லி

வாழ்க்கை'. கருணையின் திருவுருவமான புத்தர் பெருமானின் படத்துக்குப் பின்னால் ஒரு பல்லி ஒரு பூச்சியின் உயிரை மாய்க்கிற முரண்பாட்டைச் சுட்டிக்காட்டுகின்றார். ஆனால் அடுத்த மூச்சில் பல்லியைக் காட்டிலும் கொடுமை மிக்கவர்களாக மனிதர் இயங்குவதை வருத்தத்துடன் எடுத்துக் காட்டுகின்றார்.

தூரனின் கட்டுரைகளில் அண்ணல் காந்தியடிகளின் வாழ்வும் வாக்கும் சிறப்பிடம் பெறுகின்றன. 'அன்பே வழி', 'காந்திய அடிப்படை', 'அடிகளின் தோற்றம்', 'அன்புவழி' ஆகிய கட்டுரைகளில் காந்தியடிகளின் அன்பும், அகிம்சையும் இணைந்த கோட்பாடுதான் மனிதகுலத்தை உய்விக்கும் என்ற மாண்புறு செய்தி வலியுறுத்தப்படுகின்றது.

> **''பாரதத்தின் பண்பாட்டிலே ஊறித் தெளிந்தது அவருடைய சத்தியநெறி. அதை உலகிற்கு எடுத்துக்கூற நமக்கு அதிக உரிமையுண்டு. ஆனால் அந்த உரிமைக்கு முதலில் நாம் பாத்திரமாக வேண்டும்''**

என்று அறிவுறுத்துகின்றார்.

இலக்கிய மேதைகளின் எண்ணங்களையும், சிந்தனை களையும் தொட்டுக் காட்டுகிற பணியையும் தூரன் தன் கட்டுரைகளில் மேற்கொண்டுள்ளார்.

காட்டு வழிகளில் நடமாடும்போதெல்லாம் கவிதை தனக்கு உற்ற துணையாவதையும், கவிதாதேவி தன் காதலியாகத் திகழ்வதையும் 'கவிதை என் காதலி' என்ற கட்டுரையில் பேசுகின்றார். பழனி மலை ஏறிச் செல்லும்போது பக்தர்கள் பாடும் நாட்டுப்புறப்பாடல்களில் மனதை நெகிழ விடுகின்றார். சிறுபாணாற்றுப்படை என்னும் பழம்பெரும் இலக்கியத்தின் நயங்களைப் பட்டியலிடுகின்ற அதே மூச்சில் நிப்பன் நாட்டுக் கவிதை என்ற தலைப்பில் ஜப்பானியத் 'தங்கா'க் கவிதையின் அழகுகளையும் வியந்து பேசுகின்றார். ''காற்றுப் போலக் கவிதை நிறைந்த தேசமல்லவா நிப்பன்?'' என்று மிக அருமையாக முத்தாய்ப்பு வைக்கின்றார்.

தூரனின் கட்டுரைகளில் சின்னச் சின்ன வாக்கியங்கள் செண்டுகளாக மணம் தருகின்றன.

> **''அக்கினி நட்சத்திரம். வெயில் கொதித்துக் கொண்டிருக்கிறது''**

என்று தொடங்குகிறது ஒரு கட்டுரை.

**"அன்பு செய்தால் அல்லல் தீரும், அல்லல் தீர்ந்தால் அமைதி பெருகும். அமைதி பெருகினால் அதுவே பேரின்பம்"**

இப்படி முடிகிறது இன்னொரு கட்டுரை. இப்படியே சிற்றடியால் மலர்க் காட்டை அளக்கும் வண்டு போல் வாழ்வின் அகல நீளங்களை அளக்கின்றன தூரனின் வாக்கியங்கள்.

'இயற்கையையும் மனிதர்களையும் வருணனை செய்வதில் விவரிக்க முடியாத பேரழகு துலங்கக் காணலாம்.

**"எனது நாட்டம் நிலவின் மென் கீற்றின் மீதே திரும்பியது. பிஞ்சுமதி, பிறைக்கீற்று; இல்லை, இல்லை இனி வரப்போகும் வசந்தத்திற்கு மன்மதன் புதிதாகச் செய்து கொண்ட பொன்வில்"**

என்பது 'கார்த்திகைப் பிறை' பார்த்த தூரனின் பரவசம்.

**"இப்பொழுது மழை நின்றுவிட்டதென்றாலும் மரங்களும் செடிகளும் முத்துமுத்தாகத் துளிகளைத் தாங்கி நிற்கின்றன. சிறகை உலர்த்திக் கொண்டு காகமொன்று பன்னீர் மரத்தில் போய் அமர்கிறது. மரம் அழகிய வெண்மையான பூக்களோடு மழை முத்துக்களையும் உதிர்க்கின்றது"**

என்பது ஒரு 'மழைக்காலக் காட்சி'யின் சித்திரம். எழுத்துக்களால் ஓவியம் தீட்டுகிற கலையில் தூரன் பெற்ற பெருவெற்றியை மீன்கொத்திப் பறவை குறித்த ஒரு வருணனையில் கண்டு திளைக்கலாம்.

**"செவ்வரளி குனிந்த வேளையில் ஒரு சின்னஞ்சிறிய சிங்கார மீன் கொத்தி அதன்மேல் வந்து அமர்ந்தது. உடம்பெல்லாம் நீல நிறம்; மார்பிலே வெண்மை வட்டம், பாக்கின் செந்நிறம் கொண்ட பெருமூக்கு. அந்த அழகுக் குருவி ஆடி அமர்ந்திருப்பதே ஒய்யாரம்"**

இப்படிச் சொற்களால் அலங்காரம் செய்கிற கலைத்திறன் தூரனுக்கு ஒரு தனிச்சிறப்பாக அமைந்திருக்கின்றது.

கட்டுரைகளில் இருண்மை என்பது துளியும் இல்லை என்றாலும் தத்துவங்களில் முக்குளிக்கிற முயற்சியும் அவரிடம்

இருந்தது. 'காலம்', 'காலச்சக்கரம்' ஆகிய கட்டுரைகளில் விளக்கவோ, அளக்கவோ முடியாத காலத்தின் கோலத்தை வியக்கிற மனப்பாங்கைக் காணலாம்.

இலக்கியச்சுவையின் இனிய அலை நடனத்தை 'சேரி விளையாட்டு', 'காற்றாடி', 'நந்தா ஒளி', 'தைப் பொங்கல்' 'தேன்சிட்டு' 'குழலோசை', 'மௌனப் பெரும் பேச்சு' ஆகிய கட்டுரைகளில் படித்துச் சுவைக்கலாம்.

★ ★ ★

1958–ல் வெளியான 'காற்றில் மிதந்த கவிதை' பன்மணித் திரளாக அமையாமல் நாட்டுப்புறப் பாடல்கள் என்னும் வாய்மொழி இலக்கியத்தை மட்டுமே பொருளாகக் கொண்டது. நாட்டுப்புற இலக்கியத்துக்குத் தூரனின் பெரும் பங்களிப்பாக அமைந்தது இந்நூல்.

நாட்டுப்புறப் பாடல்களைக் குறித்த ஆய்வுகள் பெரிதும் வளராத ஒரு காலத்தில் முதன் முதலாக இத்துறையில் அடியெடுத்து வைத்த பெருமக்களில் ஒருவர் பெ. தூரன். நாட்டுப்புறப் பாடல்களைக் குறித்துப் பேசும்போது வெகு துல்லியமாக அதன் கூறுகளை எடுத்துக் கூறியுள்ளார்.

> **"எளிமையிலே ஓர் இன்பம். வெள்ளைச் சொல்லிலே ஒரு கவர்ச்சி, தெம்மாங்கு இசையிலே ஒரு குழைவு அந்தப் பாடலை யார் எழுதினார்கள்? யார் அதற்கு இசை அமைத்தார்கள்? எந்தக் காலத்திலே அது தோன்றியது? எந்தச் சுவடியிலே அது இடம்பெற்றிருந்தது? யாருக்குமே தெரியாது:"**

நாட்டுப்புற இலக்கியத்தின் இயற்பண்புகளை அடையாளம் கண்டறிந்த தூரன், பலகாலமாகத் திரட்டிய அருமையான கொங்கு நாட்டுப்புறப் பாடல்கள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

மாட்டுக்காரன் பாட்டு, ஆக்காட்டிப் பறவையின் பாட்டு, ஓடக்காரன் பாட்டு, மழை வேண்டிப் பாடிய பாட்டு, கேலிப் பாட்டு, விளையாட்டுப் பாட்டு, தாலாட்டு, காதல் பாட்டு, கடவுள் பாட்டு, கணிதப் பாட்டு, விழாப்பாட்டு, கும்மிப் பாட்டு என வகைவகையான பாடல்களை எல்லாம் தூரன் தேடி எடுத்துத் தந்திருக்கின்றார்.

ஆசிரியர் பெயர் தெரியாத இந்தப் பாடல்களுக்கு அவர் எழுதிய விளக்கங்கள் தான் 'காற்றில் கலந்த கவிதை' நூலாக உருவெடுத்துள்ளன. பல அரிய செய்திகள் தூரன் நூலால் தெரியவருகின்றன. பரணி இலக்கியத்தில் வருகிற 'கடை திறப்பு'ப் பாடலுக்கு நாட்டுப்புறப் பாடல்களில் மூலம் இருப்பது இந்நூலால் புலனாகின்றது.

பனை ஓலை வெட்டி நார் உரிக்கும் தொழிலாளி வேலை முடித்து வீடு திரும்புகையில் மனைவி ஊடலால் கதவைச் சாத்திக் கொள்கிறாள். திறக்கும் படி வேண்டுகிறான் அவன்.

*''ஒண்ணாம்பனை ஏறுபனை*
*ஓலை வெட்டி நார் உரிச்சி*
*நானும் வந்தேன் பொன்னாச்சி*
*நடந்தலுத்தேன் பொன்னாச்சி*
*பொன்னாச்சி கதவு திற*
*பொன் மயிலே வீடு திற''*

அப்போது அவள் பதில் சொல்லுகிறாள்:

*''நானெப்படி நான் திறப்பேன்*
*நடுச்சாமம் வந்தாலே....?''*

இந்தப் பாடலின் உள்ளே கடைதிறப்பின் மையம் இருப்பதைக் காண முடியும்.

தூரனின் கட்டுரைகளில் மற்ற படைப்புகளில் காண்பது போன்றே அன்பின் தத்துவம் அரசாளுகின்றது. மென்மை யான சொற்களுக்குள் மேதைமை துலங்குகின்றது. மானுட வாழ்வின் செழுமைக்கு ஒரு தோழமை நெஞ்சின் பரிவுமிக்க பரிந்துரை நிரம்பி நிற்கின்றது.

# 6. சிறுவர் இலக்கியம்

தூரன் சிறுவர் சிறுமியருக்காக எழுதிய கதைகளில் ஒன்று 'மந்திரத் தூரிகை'. இந்தத் தூரிகையால் வரையப்படும் ஓவியங்களெல்லாம் உயிர் கொண்ட உண்மை வடிவங்கள் ஆகி விடுகின்றன. இந்தத் தூரிகையால் எதிரிகளை எப்படி ஒரு சிறுவன் வெற்றி கொண்டான் என்பதைச் சொல்லுகிறது கதை.

உண்மையில் தூரன் கையில் இருந்த எழுதுகோலும் ஒரு மந்திரத் தூரிகைதான். குழந்தைகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிறுகதைகளும், நாவல்களும், பாடல்களும் அருமையான படைப்புகளாக அதிலிருந்து பிறந்து வந்தன.

குழந்தை மனதையும் அதன் மலர்ச்சியையும் குறித்து ஆராய்ந்து நூல் எழுதியவர் தூரன். 'பச்சைக் குழந்தை என்றால் – மனதில் பாசம் பிறக்குதம்மா' என்று பாடி மகிழ்ந்தவர் தூரன். குழந்தைகள் கலைக்களஞ்சியத்தை உருவாக்கி அளிப்பதிலும் அக்கறை காட்டியவர் அவர். அதனால் குழந்தைகளுக்கான இலக்கியத்தை உருவாக்கி அளிப்பதிலும் அவர் கணிசமான பங்களிப்பை நல்கியுள்ளார்.

இளம் வயதுப் பிள்ளைகளோடு ஆசிரியப் பணியால் தன்னை இணைத்துக் கொண்ட தூரன், அவர்களுக்குக் கதைகள் சொல்லி மகிழ்விப்பது வழக்கம் என்று அவருடைய மாணவரும் வேதாரண்யம் கஸ்தூரிபா காந்தி குருகுலத்தின் நிர்வாக அறங்காவலராக இருந்தவருமான வே. அப்பாக்குட்டி குறிப்பிட்டுள்ளார்.

> **''1935–ம் ஆண்டு நான் கோவை ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலய மாணவன். தினம் இரவு உணவுக்குப்பின் வரும் நேரத்தை ஆவலுடன் சக மாணவர்களுடன் எதிர்பார்த்திருப்போம். பிரெஞ்சு நாவலாசிரியர் விக்தர் ஹியூகோவின் லா மிசரபிள் கதையைச் சின்னச் சின்ன வாக்கியங்களில் மிக அழகாக எடுத்துக் கூறுவார் எங்கள் தலைமை ஆசிரியர். சிறுவர்களாகிய எங்கள் உள்ளத்தில் அது நன்கு பதிந்து மெய்மறக்கச் செய்யும். அவர் தான் திரு. பெரியசாமித் தூரன்''**

*(மழலை அமுதம் – முன்னுரை)*

இந்த அனுபவம் குழந்தைகளுக்காக எழுதும் ஆர்வத்தை அவரிடம் தூண்டியிருக்க வேண்டும். அரும்பு வயதில் குழந்தைகளின் மனதைப் பண்படுத்திப் பக்குவம் செய்வது அவசியம் என்பதைத் தெளிவாக அவர் உணர்ந்திருந்தார்.

> **''உலகத்திற்கு வந்தது முதல் குழந்தைகளுக்கு எத்தனையோ அடங்காப் பசியுண்டு. பார்த்தும், கேட்டும், தொட்டும் அவைகள் புதுப்புது அனுபவங்களைப் பெற்றுத் தம் அறிவைப் பெருக்கிக் கொள்கின்றன. இயம்வயதில் தாமே எளிதில் பெற முடியாத அறிவையும் இன்பத்தையும் அவைகள் குழந்தை இலக்கிய நூல்களின் வாயிலாகப் பெறுகின்றன. குழந்தைகளுக்குக் கொஞ்சிக் கொஞ்சி, துள்ளித்துள்ளி ஆடுவதற்கும் பாடுவதற்கும் அழகான பாட்டு வேண்டும். கதை என்றால் அவைகளுக்கு உயிர். மேலும் ஆயிரம் ஆயிரம் கேள்விகள் கேட்கும் தம் அறிவை வளர்த்துக் கொள்கின்றன.இப்படி அவைகளுக்கு அறிவுப்பசி அடங்காப் பசியாக இருக்கின்றது''**

என்று நான்காவது குழந்தை இலக்கிய மாநாட்டு வரவேற்புரையில் (1972) தூரன் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தை இலக்கியத்துக்கு வளமூட்டிய தூரன் சிறுகதைகள், நாவல்கள், பாடல்கள், அறிவியல் எனப் பல துறைகளிலும் வல்லுநராகத் திகழ்ந்தார்.

குழந்தைக் கதைகளாக அவர் எழுதிய நூல்கள்: **ஓலைக்கிளி** (1961), **தம்பியின் திறமை** (1963), **நாட்டிய ராணி** (1970), **கடக்கிட்டி முடக்கிட்டி** (1976), **மஞ்சள் முட்டை** (1977), **நிலாப் பாட்டி** (1979) என்பன. இவற்றுள் ஓலைக்கிளி, நிலாப்பாட்டி, கடக்கிட்டி முடக்கிட்டி என்பன நெடுங்கதைகளாய் அமைந்தவை.

குழந்தை மனதின் வளமான கற்பனைகளுக்கு உரமூட்டுவது தூரனின் கதைகளில் காணப்படும் ஒரு முக்கியமான பண்பு. தேவதைகளும், அதிசயங்களுமாக வளரும் கதைகளில் இப்பண்பைக் காணலாம். மஞ்சள் முட்டையிலிருந்து ஒரு தேவதை பிறக்கிறாள் என்று ஒருகதை. பஞ்சவர்ணக்கிளி ஒன்று இளவரசனின் தாயாக மாறுவதைச் சொல்கிறது நீலத்தாமரை என்கிற கதை. 'நிலாப்பாட்டி' கதையில் நித்தம் ஒரு தங்கக் காசு

கொண்டு வருகிறது அழகான ஒரு குருவி. இவையெல்லாம் சிறுவர், சிறுமியரின் ஆசை மனக் கற்பனைகளை அழகாகத் தூண்டிவிடுகின்றன.

'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்ற இனிய கருத்தை உரம் போட்டு வளர்ப்பது தூரனின் கதைகளில் காணும் மற்றொரு பண்பு. ஒட்டைச் சிவிங்கி ஊமையாகிப் போன கதையைச் சொல்லும் 'ஊமை விலங்கு', முயலைத் தன் கூர்மையான அறிவால் வெல்லும் முள்ளெலியை அறிமுகப்படுத்தும் 'முள்ளெலியும் முயலும்', ஏழைக் கிழவிக்கு உதவும் குருவியைப் பற்றிச் சொல்லும் 'நிலாப்பாட்டி' ஆகிய கதைகள் இதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. 'நாட்டியராணி' தொகுப்பில் ஆடு, சிங்கம், குரங்கு ஆகிய விலங்குகளின் கதைகள் பரிவுணர்ச்சியோடு கூறப்பட்டுள்ளன.

ஊனம் ஒரு குறையல்ல என்ற கருத்தை கதைகளின் வாயிலாகத் தூரன் உணர்த்துகின்றார். 'தண்டிமூக்கன்' கதையில் பருத்த மூக்குக்காக வருத்தப்படுபவன் சர்க்கசில் தன் மூக்கே புகழைப் பெற்றுத் தந்தமையால் மகிழ்வதைக் கூறுகின்றார். 'கடக்கிட்டி முடக்கிட்டி' என்ற நெடுங்கதையில் பின்னங்கால் வளைந்து போன ஒரு கழுதைக்கு அதுவே வெற்றிகளைத் தேடித் தருகிற அதிசயம் பேசப்படுகின்றது.

கதைச்சுவையோடு நோகாமல் நல்ல பண்புகள் பதிய வைக்கப்படுவது தூரனின் கதை சொல்லும் திறனில் இன்னொரு பரிமாணமாகும். 'தம்பியின் திறமை' கதையில் இளைஞனின் அறிவுக் கூர்மை வெற்றி பெற்ற நிகழ்ச்சி எடுத்துரைக்கப் படுகிறது. தீமையை எதிர்த்துப் போராட மதிநுட்பத்தைப் பயன்படுத்தும் சிறுவர்களைக் குறித்து 'மந்திரத் தூரிகை', 'மூச்சி' ஆகிய கதைகள் பேசுகின்றன. 'பொய் சொல்லி ராஜா' என்ற கதையின் உண்மை பேசுபவன் பெறும் உயர்வு எடுத்துரைக்கப்படுகிறது. ஒற்றுமையால் கிடைக்கும் நற்பயனை 'மஞ்சள் முட்டை' கதை சித்திரித்துக் காட்டுகிறது. நகரங்களைக் காட்டிலும் கிராமங்கள் தாழ்ந்தவை என்ற கருத்தைமாற்றி நல்லுணர்வு பெற்ற சிறுவனின் கதையாக 'யாரடா அவன்' அமைகிறது.

திருட்டுப் புத்தியின் இழிவை 'முத்துவின் முதல் திருட்டு' விளக்குகின்றது. உழைப்பின் உயர்வை 'ஓலைக்கிளி' எடுத்துரைக்கின்றது. மிகமிக முக்கியமான தாய்மொழிப் பற்றைத்

'தாய்மொழி பேசாத நாய்க்குட்டி' கதையின் வாயிலாக வற்புறுத்துகின்றார். தனக்கே உரிய குரைப்பை மறந்த நாய்க்குட்டி வாத்துப் போலவும், எருமைக்கன்று போலவும் பேச முயன்று அடிபட்டு அவமானப்படுகிறது. கடைசியில் தன் மொழியே மதிப்பைத் தரும் என்பதை உணர்ந்து கொள்கிறது.

கதைகளின் வாயிலாக அறிவியலைச் சொல்லுகிற முயற்சியையும், தூரன் மேற்கொண்டதற்கான அடையாளத்தை, 'அற்புதச் செடிகள்' என்ற கதை உணர்த்துகிறது. எண்ணெயை முதன்முதலாக விளக்கு எரிக்கப் பயன்படுத்திய செய்தியையும், பருத்தியை ஆடையாக்க அறிந்து கொண்ட செய்தியையும் கற்பனை கலந்து தருகின்றார்.

நாவல் என்ற புனைகதை வடிவில் சிறுவர்களுக்காகத் தூரன் எழுதிய கதைகள் **மாயக்கள்ளன்** *(1961)*, **சூரப்புலி** *(1966)*, **கொல்லி மலைக் குள்ளன்** *(1973)*, **சங்ககிரிக் கோட்டை மர்மம்** *(1978)*, **தரங்கம் பாடித் தங்கப் புதையல்** *(1981)* ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றுள் மாயக்கள்ளன் என்ற கதை ஒருவகை மாயத்தன்மை (Fantasy)யுடன் சொல்லப்படுகின்றது. ஆத்ம ரங்கன் என்பவன் தான் நினைத்த வடிவம் எடுக்கும்போது துன்பம் அனுபவிக்கிறான். புல்லாக, பூவாக, பாம்பாக, குயிலாக, சிங்கமாக, மனிதக் குழந்தையாக உருமாறுகிறான். இந்தக் குழந்தையை ஒரு மாயக்கள்ளன் பிடித்துக் கொண்டு பலகதைகள் சொல்லி ஏமாற்றுகிறான். கடைசியில் ஆத்மரங்கன் தன்மனமே மாயக்கள்ளன் என்று புரிந்து கொள்கிறான். கதைக்குள் கதை சொல்லும் உத்தியை இந்த நாவலில் தூரன் திறமையாகப் பயன்படுத்துகின்றார்.

ஒரு தெருநாயின் அனுபவங்களாக அமைந்தது சூரப்புலி. இந்த நாய் காட்டுக்குள் சென்று, ஒரு துறவியின் உதவியால் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவதாகக் கதையை அமைக்கின்றார். இந்தக்கதையில் வனவிலங்குகள், பறவைகள் பற்றிய விரிவான செய்திகள் சொல்லப்படுவதால் குழந்தைகளுக்கு ஒரு புதிய உலகம் அறிமுகம் செய்யப் படுகின்றது. முள்ளம்பன்றி, புலி, காட்டெருமை, மான்கள் ஆகியவற்றின் இயல்புகள் எல்லாம் விளக்கப் படுகின்றன. அதுபோன்றே துறவியுடன் இமயமலைப் பயணம் மேற்கொள்ளும் சூரப்புலி என்ற நாயின் கதை வாயிலாகக்

குழந்தைகளுக்கு இமயமலை பற்றிய தகவல்கள் எடுத்துக் கூறப்படுகின்றன.

மற்றைய நாவல்களான கொல்லிமலைக் குள்ளன், சங்ககிரிக் கோட்டை மர்மம், தரங்கம்பாடித் தங்கப் புதையல் ஆகிய மூன்றும் வெவ்வேறு களங்களில் நிகழ்ந்தாலும் சுந்தரம், தங்கமணி, கண்ணகி என்ற மூன்று குழந்தைகளின் சாகசங்களாக அமைந்துள்ளன. இவர்களுக்குத் துணையாக ஜின்கா என்ற குரங்கும் உதவி செய்கின்றது. குழந்தைகளின் துப்பறியும் சாதனைகளாக அமைந்த இந்தக் கதைகளில் அவர்களின் சாகச உணர்வுக்கு (Adventurous spirit) வாய்ப்புகள் தரப்படுகின்றன. இக்கதைகளை எழுதிய காரணத்தை நூலாசிரியரே தெளிவுபடுத்தியுள்ளார்.

> "சுமார் 12 வயது முதற்கொண்டு 16 வயது வரையுள்ள இளைஞர்களுக்குத் துணிச்சல் மிகுந்த கதைகளில் (Adventure Stories) மிகுந்த ஆர்வம் உண்டு. அவற்றை அவர்கள் ஆர்வமாகப் படிப்பார்கள். இந்தக் கதைகள் சொல்வதில் இரண்டு வழிகள் உண்டு. குறிப்பிட்ட சில பாத்திரங்களைக் கொண்டு அவற்றின் இயல்புக்கு மாறாமல் எழுதுவது ஒருவகை. கொல்லிமலைக் குள்ளன், சங்ககிரிக் கோட்டையின் மர்மம், தரங்கம் பாடித் தங்கப் புதையல் ஆகிய துணிச்சல் மிகுந்த கதைகளில் இதே முறைதான் கையாளப்பட்டுள்ளது. சுமார் 12 வயதுடைய தங்கமணி என்ற சிறுவன் கூரிய அறிவு உடையவன். பத்து வயதுள்ள சுந்தரமோ ஒரு தமாஷ் பேர்வழி. 8 வயதுடைய கண்ணகி பயந்த சுபாவம் உடையவள். இந்த மூவரையும் வைத்துக் கொண்டு தான் மேலே குறிப்பிட்ட மூன்று நூல்களும் எழுதப்பட்டன. ஜின்கா என்ற குரங்கு தங்கமணியினால் நன்கு பயிற்சி கொடுக்கப்பட்டிருப்பதால் அது இடை இடையே புகுந்து ஆச்சரியமான பல சாகசங்களைப் புரிகின்றது"
>
> (த.த. புதையல் – முன்னுரை)

இவ்வாறு ஆசிரியரே விளக்கம் தருகின்றார். தூரனின் கதையுலகில் சிறுவர்களின் அறிவுக்கும், ஆற்றலுக்கும், துணிவுக்கும், செயல்திறனுக்கும் தூண்டுதல்கள் அமைந்துள்ளன. இளைஞர்களின் தாழ்வு மனப்பான்மை தவிர்க்கப்பட்டுத் தன்னம்பிக்கை தழைக்க வகை செய்யப்படுகின்றது.

இவை தவிர **ஜிம்மி** (1966) என்றொரு கதை நூலையும் தூரன் படைத்துள்ளார். இவையனைத்திலிருந்து மாறுபட்ட குழந்தைகள் நூல் **பறக்கும் மனிதன்** (1981). குழந்தைகளுக்கான அறிவியல் நூல் இது. ஆகாய விமானத்தின் வரலாறு சுவையான இந்நூலில் சொல்லப் படுகிறது. ஓவியங்கள் நிரம்பிய 'பறக்கும் மனிதன்' இளம் மனதில் கண்டுபிடிப்பு ஆர்வத்தைத் தூண்டிவிட வல்லது.

குழந்தைகளின் கலை வளரும் நெஞ்சுக்குக் காணிக்கையாக மூன்று கவிதை நூல்களைத் தூரன் படைத்துள்ளார். **ஆனையும் பூனையும்** (1957) **நல்ல நல்ல பாட்டு** (1965), **மழலை அமுதம்** (1981) என்பன அவை.

மழலையர்களுக்கு முதன்மையாகத் தேவைப்படுவது ஓசை நயம் மிக்க பாட்டுக்கள். நயமான இந்தப் பாட்டுச் செல்வத்தைத் தூரன் வாரி வாரி வழங்கியுள்ளார்.

*"டக் டக் கடிகாரம்*
*தட்டத்திலே பணியாரம்*
*குட்டிக் குட்டிச் சுண்டெலி*
*எட்டி எட்டிப் பார்க்குதாம்*
*தட்டத்திலே கண்ணை வைத்துக்*
*கிட்டக்கிட்ட நகருதாம்*
*டண்டண் கடிகாரம்*
*தாவி யோடுதாம் சுண்டெலி"*

என்ற பாட்டின் ஓசையில் ஈடுபடாத குழந்தைகள் இருக்க முடியாது.

இன்னொரு பாடலில் ஓசையழகு கொஞ்சுகிறது.

*"மலை மேலே மஞ்சு*
*மல்லிகைப் பூம் பஞ்சு*
*மாலை வெயில் கொஞ்சும்*
*வந்து விளையாடும்...."*

குழந்தை மனதில் விலங்குகளும். பறவைகளும், புழு, பூச்சிகளும் ஓடி வந்து ஒட்டிக் கொள்ளும். தூரனின் கவிதைகளில் பூனை, குருவி, நத்தை, ஆடு மாடுகள் திரும்பத் திரும்ப வந்து குழந்தைகளோடு விளையாடுன்றன. மெல்ல நகரும் நத்தையிடம்,

*"நத்தையாரே நத்தையாரே*
*அத்தை வீடு பயணமோ?*
*அத்தை வீடு போக முதுகில்*
*தண்ணீர்க் குடம் வேணுமோ?"*

என்று குழந்தை செல்லமாகக் கேட்கிறதாம். யானை மெதுவாக நடந்து போவதைப் பற்றிக் கவிஞர் சொல்கிறார்.

*"ஆனையொன்று வந்ததாம்*
*அசைந்தசைந்து நடந்ததாம்*
*பூனையொன்று பார்த்ததாம்*
*பதுங்கிக் கிட்டச் சென்றதாம்"*

ஆனைக்கும் பூனைக்கும் உள்ள வேறுபாடு ஒரே அடியில் எத்தனை கச்சிதமாகச் சொல்லப்பட்டு விடுகிறது; இந்தக் கற்பனை இன்பம் ஏறஏறக் குழந்தை தன்னைப் பற்றியே கற்பனை செய்து கொள்கிறது.

*"அம்மா சிங்கம் நான் தானாம்*
*ஆட்டுக் குட்டியும் நீ தானாம்*
*சும்மா கர்ஜனை செய்திடுவேன்*
*சுற்றிலும் பார்த்து நீ கதறிடுவாய்"*

என்று அம்மாவை வேடிக்கையாய் மிரட்டிப் பார்க்கிறது. உண்மையான தாய் அப்போது ஆட்டுக் குட்டியாகவே பயந்து போய் அபிநயிப்பாள் என்பதில் ஐயமில்லை.

அழகாக அறிவுரைகள் சொல்லவும் நாட்டுப்பற்றை ஊட்டவும் பாடல்களைப் பயன்படுத்தினார் தூரன்.

*"சின்னச் சின்னத் துளிகள் சேர்ந்தால்*
*பெரிய பெரிய ஆறே ஆகும்*
*சின்னச் சின்னச் செங்கல் சேர்ந்தால்*
*பெரிய பெரிய வீடே ஆகும்...."*

என்று தொடங்குகிற பாட்டுச் சின்ன சின்ன உதவி செய்தால் பெரிய பெரிய இன்பமாகும் என்று முடிகின்றது.

*"ஜாதி பேதச் சிறுமைகள்*
*சமய வாதப் பிரிவுகள்*
*ஏதும் இந்த நாட்டிலே*
*இல்லை என்று போக்குவோம்"*

என்று கட்டப் பாடலாய் மலர்கிறது 'தேச சேவை' என்ற பாடல்.

குழந்தை உள்ளம் பெரியவர்களைப் பார்த்துச் சிலவற்றைக் கற்பனை செய்து கொள்கிறது. தாகூர் இந்த இனிய கற்பனைகள் பலவற்றை 'வளர்பிறை' நூலில் தருகின்றார். அதுபோன்றே ஆசையாய்க் குழந்தைகள் செய்யும் கற்பனைகளைத் தூரனும் பேசுகின்றார். அம்மாவைப் போலவே தனக்கும் ஆயிரம் வேலை இருப்பதாகப் பெரியவள் போலப் பேசுகிறாள் ஒரு சிறுமி.

*''சுண்டாச் சட்டியில் என்றன் வீட்டில்*
*சோறு வேகுதம்மா*
*குண்டா என்றொரு கிளிஞ்சல் நிறையக்*
*குழம்பும் ஆகுதம்மா*
*கடைக்குப் போன பையனை இன்னும்*
*காண வில்லையே*
*வடைக்கு மணலை வைத்துள்ளேன்*
*மாவும் அரைக்க வேணும்''*

இன்னொரு குழந்தை தான் ஒரு மலராகப் பிறக்க ஆசைப்படுகிறது. வேறொரு குழந்தை தனக்கும் பொம்மைக்கும் சண்டை வந்து விட்டதாகச் சொல்கிறது. தானும் ஒரு குழந்தையாக மாறிப் போகிற விந்தையில் தூரன் வல்லவராகி விடுகிறார்.

பாடல்களிலேயே விளையாட்டுகளை அமைத்துக் காட்டுகிறார் தூரன். 'அம்மா நானோர் ரயில் வண்டி என்று சொல்லும் குழந்தை ரயிலின் ஓசையை எல்லாம் கூறுகின்றது.

*''பச்சைக் கொடியைக் காட்டியதும்*
*பலமாய்க் கூவிப் போகுது பார்*
*இச்சைப் படி நீ சென்றிடலாம்*
*ஏறுவாய் அம்மா மணியாச்சு.....''*

என்று வேடிக்கையாகப் பேசுகின்றது. ஈரமணலில் விளையாடும் குழந்தை கொட்டாங்கச்சியால் இட்டிலி உருவாக்கி மகிழ்வதைக் குறித்து ஒரு பாடல்:

*''லொட்டு லொட்டு லொட்டு லொட்டுக்*
*கொட்டாங்கச்சி இட்டிலி....*
*அக்கா சுட்ட இட்டலி*
*அடுப்பில்லாமல் இட்டலி....''*

என்று பாடப்பட்ட அது ஆடலாக மாறிவிடுகின்றது.

உவகையோடு குழந்தைகள் பாடி மகிழ, 'தாடித் தாத்தா', 'கோமாளி யண்ணா' முதலிய வேடிக்கைப் பாடல்கள் உதவுகின்றன.

*"கோமாளி அண்ணா குப்பண்ணா*
*குடமே போலொரு வயிற்றண்ணா*
*ஏமாளி இங்கே யாரண்ணா*
*எனக்குக் கொஞ்சம் சொல்லண்ணா"*

என்று தொடங்கும் பாடல் சிறுவர் சிறுமியரைக் கவர்ந்துவிடும் அழகுடையது.

குழந்தைகளுக்காக எழுதிய பாடல்களில் வாயிலாகக் கவிதைச் சுவையோடு செய்திகளையும் சொல்லி விடுகிற தந்திரத்திலும் தூரன் வல்லவர். 'ஆடு மேய்க்கும் அண்ணா', 'எங்கள் வீட்டுத் தோட்டம்' ஆகிய பாடல்கள் இதற்கு எடுத்துக்காட்டு. 'எங்கள் வீட்டுத் தோட்டம்' என்ற பாடலில் பறவை வகைகள் எல்லாம் கூறப்படுகின்றன. மஞ்சள் மூக்கு மைனா, சிட்டு, கிளி, ஆலாத்தி முதலிய பறவைகள் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தப் படுகின்றன.

இயற்கையோடு கொஞ்சிக் குலாவவும், பேசி மகிழவும், ஆடிப் பாடவும் தூரனின் பாடல்கள் குழந்தைகளுக்குக் களம் அமைக்கின்றன. 'நீலக் கடல் ஓரத்திலே நிமிர்ந்து பார்ப்பது யாரோ?' என்ற குழந்தை கேட்கிறது. நிலா சொல்கிறது:

*"பட்டு நிலா நான் தான்*
*பார்க்க வந்தேனே*
*கட்டித் தயிரைக் கடலில் ஊற்றிக்*
*காண வந்தேனே"*

என்று, இந்தக் குழந்தை உலகத்தை அத்தனை இயல்பாக நெருங்கி விடுகின்றன தூரனின் குழந்தைப் பாடல்கள்.

சிறுவர் இலக்கியத்துக்குத் தூரன் தந்திருக்கும் படைப்புகள் அழிவற்றவை. முடிவற்ற இன்பத்தின் கருவூலங்கள். பூங்குழந்தையின் உதடுகளையே சிம்மாசனமாகக் கொண்டு அவை என்றும் வாழ்ந்திருக்கும். குழந்தையைப் பார்த்து மாமரம் கூறுவதாக ஒரு பாடலில் தூரன் எழுதுவார்.

*"சித்திரை மாதம் தேனாய்ப் பழுத்தேன்*
*சின்னப் பாப்பா உண்ண வா*
*ஒட்டு மாம்பழம் உனக்குப் பிடிக்கும்*
*உண்ண வா வா சின்னப் பாப்பா"*

தூரனின் சிறுவர் இலக்கியமும் இப்படி ஓயாமல் அழைத்துக் கொண்டே இருக்கிறது.

# 7. அறிவியல் நூல்களும் பிறவும்

கல்லூரியில் கணிதம் கற்றார் பெரியசாமித் தூரன். அதுமட்டுமின்றி இயல்பாகவே அறிவியல் நாட்டம் மிக்கவராகவும் அவர் விளங்கினர். ஆசிரியப் பணியில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த காரணத்தால் இளையோர் உள்ளத்தைக் குறித்து ஆராயும் உளவியலிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. அறிவியல் நூல்கள் படைக்க வேண்டும் என்ற உந்துதலுக்கும் ஆர்வத்துக்கும் இவைகளே காரணமாக அமைந்தன என்று கொள்ளலாம்.

அவருடைய அறிவியல் நூல்களை இரண்டு பிரிவாக வகுக்கலாம். மரபியல் நூல்கள், உளவியல் நூல்கள் என இரண்டு பிரிவாக அமைந்தவை அவை.

பாரம்பரியம் (1949), பெற்றோர் கொடுத்த பெருஞ்கொடை (1954), கருவில் வளரும் குழந்தை (மூன்றாம் பதிப்பு 9162) என்பன மரபியல் சார்ந்த அறிவியல் நூல்கள். எனினும் இவை உளவியல் நூல்களோடு உறவுடையனவே

'கருவில் வளரும் குழந்தை' என்னும் நூலுக்கு எழுதிய முன்னுரையில் இந்த நூலை எழுதியதற்காக காரணத்தைத் தூரன் தெளிவு படுத்தியுள்ளார்.

> **''ஒவ்வொருவரும் குழந்தை சம்பந்தப்பட்ட நான்கு முக்கியமான உண்மைகளை உணர்ந்திருக்க வேண் டும். தாய், குழந்தையின் வாழ்க்கைக்கு அளிக்கும் பாரம்பரியத் தன்மைகள் யாவை? அவை எவ்வாறு சூழ்நிலையால் பாதிக்கப்படுகின்றன? குழந்தை எவ்வாறு கருப்பையிலே உருவெடுத்து வளர்ச்சியடைந்து பிறக்கிறது? அதன் மனம் எவ்வாறு மலர்ச்சியடைகின்றது? என்ற இந்நான்கையும் எல்லோரும் அறிந்திருக்க வேண்டும்.''**

பதினொரு சிறு அத்தியாயங்கள் கொண்டது 'கருவில் வளரும் குழந்தை'

**'பிறவி ஒரு விந்தை. கண்ணுக்குத் தெரியாத ஒரு உயிர் அணு ஆச்சரியமாக உருவடைந்து அழகிய பூங்குழந்தையாக உலகில் தோன்றுகிறது, என்று சுவையாகத் தொடங்கும் இந்நூலில்**

அத்தியாயங்களுக்கு ஆசிரியர் அமைத்துள்ள தலைப்புகளே இந்நூலை அறிவியல் இலக்கியமாக மாற்றி விடுகின்றன ஆண்மகன் வருவது, பெண்மணி தருவது, இரண்டறக் கலந்து ஒருயிராதல், காணாத கருப்பையூர், மாயப்பிறவி, நாளொரு மேனி பொழுதொரு வண்ணம், பத்துமாத விந்தை எனவரும் தலைப்புகள் வாசகனுக்கு அறிவியலைச் சுவையோடு ஊட்டுகின்றன. அவற்றுக்குத் துணைத் தலைப்புகளும் தரப்பட்டுள்ளன.

'பனியிலோர் பாதி சிறுதுளி மாது பண்டியில் வந்து புகுந்து' அற்புதமான மானிடக் குழந்தையாக வெளிப்படும் அதிசயச் செயலை, விளக்கப் படங்களின் உதவியோடு சுருக்கமாகவும், எளிய நடையிலும்சொல்லுகிறது இந்நூல். கரு உருவாகி வளர்ந்து வெளிப்படுவதை விளக்கமாகக் கூறியபின் 'தாயின் தியாகம் ஒப்பற்றது; இந்தத் தியாகம் குழந்தை பிறந்ததோடு முடிந்து விடுவதில்லை' என்றும் தூரன் எடுத்துக் காட்டுகின்றார்.

'ஆணா பெண்ணா?' என்ற அத்தியாயத்தில் குழந்தையின் பால் எது என நிச்சயிக்கும் எக்ஸ், ஒய் நிறக் கோல்களையும், அவற்றின் செயல் பாடுகளையும் விளக்குகின்றார். இரட்டைக் குழந்தைகள் உருவாவது எப்படி என்பதையும் சுவையாகக் கூறுகின்றார்.

நூலின் இறுதியில் கலைச் சொல் விளக்கம் தந்திருப்பது மிக இன்றியமையாத ஒரு அறிவியல் தொண்டு என்று குறிப்பிடலாம். Cell, Soma, Atom என்பவையெல்லாம் அணு என்று குறிப்பிடப்பட்டாலும் அவற்றுக்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவையெவை என்று கூர்மையாக எடுத்துக் காட்டுகிறார். தூரன் ஏற்றுக் கொண்டதும், உருவாக்கி யிருப்பதுமான கலைச் சொற்கள் அறிவியல் தமிழுக்கு பெருவளம் சேர்ப்பன. அண்டம் (Ovary), நிறக்கோல் (Chromosome), கருக்குடை (Placenta), பூரித்த அண்டம் (Fertilised Egg), மஞ்சலரி (Corpus luteum) என்பன அவற்றுள் சில.

பாரம்பரியம் நூலின் சுருக்க விளக்கம் தான் 'பெற்றோர் கொடுத்த பெருங்கொடை' என்னும் நூலாகவும் வெளி வந்துள்ளது. தினமணியில் தொடர் கட்டுரையாக வெளிவந்து, பின்னர் நூலாக உருப்பெற்றது பாரம்பரியம். இந்த நூலுக்குப் புகழ்பெற்ற மருத்துவர் டி.எஸ் திருமூர்த்தி மிக நுட்பமும் திட்பமும் வாய்ந்த ஒரு முன்னுரை வழங்கியுள்ளார்.

> **''பாரம்பரியத்தைப் பற்றியும் அதன் அடிப்படையில் எழுந்த ஜெனிடிக்ஸ் (Genetics) யூஜெனிக்ஸ் (Eugenics) என்ற விஷயங்களைப் பற்றியும் பல நூல்கள் ஆங்கிலத்திலும், ஜெர்மன், பிரெஞ்சு முதலிய பாஷைகளிலும் வெளி வந்துள்ளன. இவைகளைப் படித்துப் பட்டம் பெற்று ஆராய்ச்சி செய்து வந்த நமது நாட்டு விஞ்ஞானிகள் எவரும் தாங்கள் கற்றதைத் தாய் மொழியில் நூல்களாக இயற்றி ஆங்கிலம் கல்லாத பெரும்பான்மையான தமிழ் மக்களுக்கு யாதொரு உதவியும் செய்யவில்லை''**

என்ற அவர் குறிப்பை நினைவில் வைத்துக் கொண்டு பார்க்கும் போதுதான் தூரனின் பணி எத்துணை அருமை வாய்ந்தது என்பது புலனாகும்.

ஒரு மனிதனை உருவாக்குவது பாரம்பரியமா அல்லது சூழலா என்ற வினாவை எழுப்பிக் கொண்டு, இருபக்க வாதங்களையும் சீர்தூக்கிய பின் தூரன் பின்வரும் முடிவுக்கு வருகின்றார். ஆய்வாளர்களின் முடிவே அவர் முடிவும் ஆகின்றது.

> **''பாரம்பரியமோ, சூழ்நிலையோ மற்றதன் உதவி யின்றித் தனித்து நின்று சிறந்த பயனை அளிக்காது. ஒவ்வொன்றும் மற்றதைச் சார்ந்தே நிற்கின்றது. அவை இரண்டின் கலப்பில் விளைந்ததே நாம் காணும் மனித வாழ்க்கையாகும்''**

இந்த அடித்தளத்தில் தொடங்குகிறது தூரனின் நூல்.

பொதுவாக உடல் உறுப்புகளும், நிறமும், தலைமுடியின் தன்மையும் பாரம்பரியமாகக் காணக்கூடியவையே. எனினும் மனப்பண்பையும், கலை உணர்வையும் இவ்வாறு கூறுவது கடினமானது. இதனைத் தெளிவுபடுத்தும் பொருட்டு மெண்டல் என்பார் மலர்களை வைத்து நடத்திய ஆய்வுகளையும், பின்னர் வந்தோர் எலி முதலிய பிராணிகளை வைத்து நடத்திய ஆய்வுகளையும் எடுத்துச் சொல்கிறார் தூரன்.

நிறக்கோல்கள் பாரம்பரியத்தின் தூதுவர்களாக இலங்குவதைத் தூரன் விவரிக்கின்றார். காக்கை வலிப்பு, பைத்தியம் ஆகியவை பெரிதும் பாரம்பரியம் தருகிற பரிசுகளாக வருகின்றன என்றும், மனத் திறமைகள்கூட அவ்வாறே பெரிதும் அமைவதையும் சுட்டிக் காட்டுகின்றார். எனினும் தட்ப வெப்பச் சூழல்களும்,

ஒரு மனிதனின் தன்மையை நிர்ணயிக்கின்றன என்று எடுத்துக் காட்டுகின்றார். அதே சமயம் பின்வரும் எச்சரிக்கையையும் அவர் செய்திருக்கின்றார்:

**''சூழ்நிலையானது பரிணாமம் ஒருவகையாக அமையச் சாதகமாக இருக்கலாம். ஆனால் அதுவே பரிணாமத்தை உண்டாக்கி விட முடியாது.''**

மிகச் சிக்கலும் நுட்பமும் வாய்ந்த ஒரு அறிவியல் துறையை மிக எளிய முறையில் விளக்கம் செய்கிறது 'பாரம்பரியம்' என்று மட்டும் நிச்சயமாகக் கூறலாம். உயிரியல் தொழில் நுட்பம் மிக வீச்சுடன் வளர்ந்து கொண்டிருக்கும் இன்றையச் சூழலில் தூரனின் நூல்கள் பயனுள்ள தொடக்கமாகத் திகழ்கின்றன.

தூரனின் கவனத்தைக் கவர்ந்த மற்றொரு அறிவியல் துறை உளவியல். சிக்மண்டு பிராய்டால் ஒளியுறுத்தப்பட்ட இத் துறையில் தீவிரமான ஈடுபாடு அவருக்கு இருந்தது. உளவியலை மையமாகக் கொண்டு சிறுகதைகளையும், நாடகங்களையும் படைத்தவர் தூரன். அவருடைய உளவியல் நூல்கள் என, **குழந்தை உள்ளம்** (1947), **குமரப் பருவம்** (1954), **தாழ்வு மனப்பான்மை** (1955), **அடிமனம்** (19957), **மனமும் அதன் விளக்கமும்** (1968) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். **குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும்** (1953) என்ற நூல் முன்னர் வெளிவந்த குழந்தை உள்ளம் என்ற நூலின் விரிவாக்கமே ஆகும். இரண்டையும் ஒன்றாகப் படிப்பது நல்லது என்ற இரண்டாவது நூலில் தூரன் குறிப்பிட்டுள்ளார். உளவியல் விளக்கமாக 'மனம் என்னும் மாயக் குரங்கு' என்றொரு நூலையும் அவர் எழுதி இருக்கின்றார். அதனையே பின்னர் 'மனமும் அதன் விளக்கமும்' என்று விரிவான நூலாகத் திருத்தி விரிவாக்கியுள்ளார்.

குழந்தை மனத்தை மிகப் பக்குவமாகக் கவனித்து வர வேண்டும் என்பது தூரனின் கருத்து. உடல் நலம் போன்றே உளநலமும் பேணப்பட வேண்டும் எனக் கருதினார்.

**''சில சமயங்களிலே குழந்தை பிடிவாதம் பண்ணு கிறது; ஓயாது அழுது தரையிலே விழுந்து புரளுகிறது. பொய் சொல்லுகிறது. இப்படி நாம் விரும்பாத ஏதோ ஒன்றைச் செய்கிறது. தாய்க்குப் பெரிய சோதனையாக முடிகிறது. என்ன செய்வதென்று அவளுக்குப் புரிகிறதில்லை. வீட்டில் அநுபவம் வாய்ந்தவர்கள் இருந்தால் அவர்கள்**

**குழந்தையைத் திருத்த ஏதாவது உபாயம் கூறுவார்கள். பாட்டியம்மாள் இருந்தால் அவளுடைய யோசனை நிச்சயம் கிடைக்கும். குழந்தையின் உள்ளப் போக்கை ஆராய்ந்தறிந்த மனத் தத்துவர்கள் தங்களுடைய யோசனைகளையும் கூறியிருக்கிறார்கள்''**

*(குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும்)*

இவ்வாறு குழந்தை உள்ளத்தின் இயல்பறிந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தைத் தூரன் வலியுறுத்தியுள்ளார். பாரம்பரியமும் சூழ்நிலையும் குழந்தையின் மலர்ச்சியில் பெறும் இடத்தை இந்நூலில் தூரன் விரிவாக ஆராய்கின்றார்.

உடலும் உள்ளமும் வளரச் சத்துள்ள உணவு, தூய காற்று, சூரிய ஒளி, விளையாட்டு, ஓய்வு, தூக்கம் ஆகியவை அவசியம். ஆயினும் அன்பும் அமைதியும் அனுதாபமும் உள்ள சூழ்நிலை இல்லாவிட்டால் குழந்தையின் வளர்ச்சி நிறைவுறுவதில்லை என்று தூரன் தெளிவுபடுத்துகின்றார். அன்பு கண்மூடித்தனமாக இல்லாமல் அளவாக இருத்தலும் வேண்டும்.

குழந்தையின் முன் பெற்றோர் காக்க வேண்டிய கட்டுப்பாடுகளும் உண்டு. குழந்தையின் பேச்சையும், பாடலையும் தடை செய்யலாகாது. தடுக்கப்படும் குழந்தை திக்குவாய் ஆகிவிடக்கூடும். அதுபோன்றே குழந்தைக்கு இயல்பாக விளையாட்டுக்களுக்குக் குறுக்கே நிற்கலாகாது. மண்ணும், தண்ணீரும் குழந்தைக்கு விருப்பமான விளையாடும் பொருள்கள் என்றும், பொருள்களைப் படைக்கும் உணர்வு விளையாட்டாகவே குழந்தைகளுக்குள் மலர்கின்றன என்றும் எடுத்துக் காட்டுகின்றார் தூரன். இவற்றையெல்லாம் மனம் நோகாதபடி ஊக்குவிக்க வேண்டும்.

சிறுவர்களின் ஓவிய ஆர்வம் தூண்டிவிடப்பட வேண்டும். சொந்தக் கற்பனைகளை வளர்த்துக் கொள்ளும் வயது அது. பள்ளிகளில்கூட அவர்கள் போக்கில் கொண்டாட்டங்கள், நாடகங்களைப் போடவிட்டு ஆசிரியர்கள் கண்காணிப்பாளர் களாக மட்டும் செயல்பட்டால் போதுமானது என்று தூரன் தெரிவிக்கின்றார்.

குழந்தைகளைப் பயமுறுத்துவதை அறவே களைய வேண்டும் என்பது தூரனின் கருத்து. அதுபோன்றே அடித்துத் திருத்துவதையும் தூரன் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படிச்

செய்வதால் அடி மனதில் குழந்தைகள் காயம்பட்டுப் பிற்காலத்தில் தொல்லையுறும் என்ற அறிவியல் நுட்பத்தைச் சுட்டிக்காட்டுகின்றார்.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு பெற்றோர் குழந்தைகளுக்கு அன்பையும் ஆதரவையும் காட்ட வேண்டுமென வற்புறுத்துகின்றார்.

குழந்தைப் பருவம் போன்றே எச்சரிக்கையுடன் அணுக வேண்டிய பருவம் குமரப் பருவம். இரண்டும் கெட்டான் வயதாக அமையும் இக்காலத்தில் இளைஞனும் இளம் பெண்ணும் தங்களைக் குழந்தை என்று சொல்வதை வெறுக்கின்றனர். உடலும், மனமும் மலர்ச்சி உற்று விடுகின்றன. அதற்கு உடலின் பல்வேறு சுரப்பிகள் உதவி புரிகின்றன.

குமரப் பருவத்தில் உள்ளக்கிளர்ச்சிகள் அப்பட்டமாக வெளியிடப்படுகின்றன. முதிர்ச்சி வர வர அவை கட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன. இந்தக் கட்டத்தில் பெற்றோர்களும் மற்றவர்களும் அவர்களைப் புரிந்து கொண்டு வழிகாட்ட வேண்டும். அதேபோன்று பல்வேறு வகையான அச்சங்களும் இப்பருவத்தினரைச் சூழ்வது உண்டு. அவற்றையும் வளர விடாமல் நேசத்தோடு கண்காணிக்க வேண்டும்.

இந்தப் பருவத்தில் குடும்ப எல்லையைத் தாண்டி, விளையாட்டுத் தோழர்கள், பள்ளி, நண்பர்கள், சமூகம், நூல்கள், இதழ்கள், பொழுது போக்குச் சாதனங்கள், என்று உணர்ச்சி எல்லைகள் விரிவடையும். குற்றங்கள், குறைகள், வசவுகள் கூட அறிமுகமாகும் வயது இது. இவற்றையெல்லாம் அன்பினால் களைதல் வேண்டும். பெருங் குற்றங்களாகிய ஓடிப்போதல், திருடுதல், ஆண் – பெண் உறவில் தவறு செய்தல் போன்றவை சூழலால் நிகழ்கின்றன. ஆகையால் குமரப் பருவத்தில் தீய சூழல் நேராது காக்க வேண்டும்.

பாலுணர்வு தூண்டப்படும் குமரப் பருவத்தில் ஒழுங்கு குலையாதபடி வளர்ப்பதற்கு மிகமிகக் கவனம் அவசியம். முதிர்ந்த பருவமே ஒருவன் வாழ்நாளில் நீண்ட பருவமாகும். இந்த பருவ காலம் அமைதியும் ஆளுமையும் செறிந்த பருவமாக உருவாகக் குமரப் பருவம் கண்ணாடிப் பாத்திரம் போல் காக்கப்பட வேண்டிய காலமாகும்.

இவ்வாறு குமரப் பருவம் குறித்துச் சிந்திக்கின்றார் தூரன்.

'தாழ்வு மனப்பான்மை', 'அடிமனம்', 'மனமும் அதன் விளக்கமும்' ஆகிய நூல்கள் வெவ்வேறு படிநிலைகளில் நின்று உளவியலைப் பகுத்து ஆய்கின்றன. மனம் உடையவன் மனிதன். இந்த மனதைத் தீவிரமாகப் பகுத்து ஆராய்ந்தவர்களில் மிக முக்கியவமானவர் ஆஸ்திரியா நாட்டவரான பிராய்டு.

அவருடைய நீண்ட ஆராய்ச்சியின் விளைவாக மனதை மூன்று அடுக்குகள் கொண்டதாகக் கண்டறிந்தார். நனவிலி மனம் ஆழ்நிலையிலும், அதன் மேலே நனவடி மனமும், அதன் மேலே நனவு மனமும் அமைந்திருப்பதாக விவரித்தார். மறைந்திருக்கும் நனவிலி மனத்தின் இச்சைகளே புற மனத்தை ஆட்டி வைக்கின்றன என்பது அவர் கண்டு பிடிப்பு.

பிற்காலத்தில் மனதின் இந்தப் பாகுபாட்டைப் பிராய்டு வேறு விதமாக அழைத்தார். அடிமனதை இத் என்றும் இடை மனதை அகம் (Ego) என்றும், அதன் ஒருசார் பகுதியை அதீத அகம் (Super Ego) என்றும், மேல் மனதை நனவு மனம் என்றும் அழைக்கலானார். அகம் என்ற பகுதியிலிருந்து அடக்கப்பட்ட இச்சைகள் நனவிலிப் பகுதியான இத்திலும், மற்றொரு பகுதிய நனவு நிலையிலும் தொடர்பு கொள்கிறது என்று விளக்கினார்.

குழந்தைப் பருவத்திலிருந்தே பா்லுந்தல் இருப்பதாகப் பிராய்டு கருதினார். பிராய்டின் மாணவரான ஆட்லர் பாலுந்தலே வாழ்க்கைப் போக்கின் முக்கிய உணர்ச்சி என்பதை மறுத்து உயர்வுந்தலே வாழ்க்கைக்கு வேகம் தருகிறது என்று கருத்துரைத்தார். மற்றொரு மாணவரான யுங், பாலுந்தல் (லிபிடோ) என்பது லிபிடோவின் ஒரு பகுதியே என்றும், பொதுவாக வாழ்க்கைக்கு வேகம் தரும் உந்தலேது லிபிடோ என்றும் மாற்றுக் கருத்துக் கொண்டார்.

ஆயினும் மூவரும் நனவிலி மனம் என்ற மறைமனம் இருப்பதை ஏற்றுக் கொண்டனர். குழந்தை மனப் பதிவுகளின் தொகுப்பே நனவிலி மனம் என்பது பிராய்டின் கருத்து. ஆனால் மனித குலத்தினுடைய ஆதிச் சமூகங்களின் அனுபவப் பதிப்பே நனவிலி மனம் என்ற பிரிந்த கோட்பாட்டை 'யுங்' மேற்கொண்டார்.

ஹிஸ்டீரியா என்ற உளநோயையும், பைத்தியம் என்கிற மன நோயையும் ஆராய்ந்த போது இந்த உண்மைகள் உளவியலாளர் கண்டறிந்தனர்.

அதீத அகத்தையும், இத் என்கிற மறை மனத்தையும் கடிவாளமிடுகிற திறனில்தான் வாழ்க்கையின் வெற்றி அமைகிறது.

கனவுகளை ஆராய்வதிலும் உளவியல் அறிஞர்கள் மிகுந்த ஈடுபாடு காட்டினர். நனவிலி மனதில் அடக்கப்பட்ட ஆசைகள் விழிப்பு நிலையில் மனச்சான்றாலும், சமுகக் கட்டுப் பாடுகளாலும் ஒடுக்கப்படுகின்றன. அவற்றிற்குக் கனவுகள் வடிகால்கள் ஆகின்றன.

இவ்வாறு ஆராய ஆராய மனம் என்னும் விந்தை உலகம் விரிகின்றது.

> **''மூளைக்கும் மனத்திற்கும் நெருங்கிய தொடர் பிருந்தாலும் மூளை வேறு; மனம் வேறு. மூளைக்கு அடங்காமல் வேலை செய்வது மனம்''**

என்ற உண்மையையும், உளவியல் ஆய்வு வழியே எடுத்துக் காட்டுகின்றார் தூரன்.

உடலை எவ்வாறு நலமாக வைத்திருக்க வேண்டுமோ, அதுபோலவே மனத்தையும் நலம் குறையாமல் வைத்திருப்பதே வாழ்க்கையின் இன்பத்துக்கும், வெற்றிக்கும் அடிப்படை என்பது தூரனின் கருத்து.

மாண்புறு மனிதனாகத் தன்னை உருவாக்கிக் கொள்ளும் வாய்ப்பை ஒவ்வொருவனும் தேடிக் கொள்ள இந்த ஆய்வுகளை அறிமுகம் செய்கின்றார் தூரன். மரபியலில் தொடங்கி உளவியலில் பயணம் செய்கின்றன தூரனின் அறிவியல் நூல்கள்.

## மொழி பெயர்ப்பு நூல்கள்

தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் மொழி பெயர்ப்புப் பணியிலும் தூரன் ஆர்வம் காட்டினார். கலைக்களஞ்சியப் பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில் பல்வேறு அறிஞர்கள் ஆங்கிலத்தில் தந்த கட்டுரைகளை எல்லாம் தூரனே முயன்று தமிழாக்கம் செய்தார் என்று கேள்விப்படுகின்றோம்.

படைப்பைக் காட்டிலும்மிகுதியான உழைப்பை வேண்டி நிற்பது மொழிபெயர்ப்பு. மூல ஆசிரியனின் பொருள் நயமும் சுவையும் கெடாது, மொழி பெயர்க்கப்படும் மொழியின் அழகும் இயல்பும் குன்றாது மிகக் கவனமாகச் செய்ய வேண்டிய பணி

மொழிபெயர்ப்பு. இந்த அரும்பணிக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டார் தூரன்.

குழந்தை இலக்கியத்தில் தனக்கென்று தனியிடம் பெற்றுள்ள தூரன் இரவீந்திரரின் குழந்தை இலக்கியத்தைத் தமிழுக்கு அறிமுகம் செய்தார். குழந்தை இலக்கியத்துக்குத் தாகூர் ஆற்றிய அருந்தொண்டை எடுத்துக் காட்டியும், சில பகுதிகளை மொழி பெயர்த்தும் அவர் தந்த நூல் 'இரவீந்தர் குழந்தை இலக்கியம்' (1963).

தேசியப் புத்தக நிறுவனத்துக்காக (NBT) அவருக்கு மிகவும் விருப்பமான மற்றொரு நூலையும் மொழி பெயர்த்துத் தந்தார். ஜமால் ஆரா என்பவர் எழுதிய 'பறவைகளைப் பார்' (1970) என்ற நூல் பல்வகைப் பறவைகளைக் குறித்து எழுதப்பட்ட நூல். இனிய எளிய நடையில் இந்நூலைத் தமிழாக்கம் செய்துள்ளார் தூரன்.

தென்மொழிகள் புத்தக நிறுவனம், தேசியப் புத்தக நிறுவனத்தின் உதவியுடன் மேலும் சில நூல்களை வெளியிட்டது. அவற்றுள் நயோமி மிச்சிஸனின் Judy and Lakshmi என்ற நாவலின் தமிழாக்கமாக வெளிவந்த 'கடல் கடந்த நட்பு' தூரனின் கை வண்ணத்தால் சிறப்புற்றது.

புகழ்பெற்ற விஞ்ஞானி ஜே.பி.எஸ். ஹால்டேனின் தங்கை நயோமி மிச்சிஸன் சிறந்த நாவலாசிரியராகத் திகழ்ந்தார். 1958-ல் இந்தியாவுக்கு வந்து சில காலம் தங்கியிருந்த அவர் இந்தியச் சூழ்நிலையை வைத்து எழுதிய நாவல் இது. ஆங்கிலச் சிறுமியான ஜூடியும் இந்தியச் சிறுமியான லட்சுமியும் நெருங்கிய தோழிகளாக இருந்ததையும், இந்தியத் திருவிழாக்களில் ஒன்றாகக் கலந்து மகிழ்ந்ததையும், கருத்து வேறுபாடு கொண்டதையும், பிரிந்தவர் கூடியதையும் உணர்ச்சிப் பின்னலாகக் கொண்டது இக்கதை.

தூரன் மொழியாக்கம் செய்த மற்றொரு நாவல் ஜாக் லண்டனின் புகழ் மிக்க படைப்பான கானகத்தின் குரல் (The Call of the wild).

நாற்பதாண்டுகளே வாழ்ந்த ஜாக்லண்டன் (1876 - 1916) நாடோடியாக வாழ்ந்து செழிப்பான அனுபவங்கள் பெற்றவர். தீ மூட்டுதல், ஸ்நார்க் கப்பல் பயணம், சாலை, கடல் ஓநாய்,

மார்ட்டின் ஈடன் முதலான ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருந்த போதிலும் 'கானகத்தின் குரல்' அழியாத இலக்கியமாய் நின்று நிலைத்திருக்கின்றது.

'பக்' என்ற தீரம்மிகுந்த நாயின் கதை இது. உறைபனிப் பகுதியான அலாஸ்காவில் ஜாக்லண்டனும் தங்கம் தேடிச் சென்றார். அங்கு கண்ட நாய் ஒன்றை மையமாக வைத்து எழுதப்பட்ட அந்த நாவலில் ஒரு விலங்கின் தீரமும், துணிச்சலும் மனதை ஈர்க்கும் வண்ணம் சித்திரிக்கப் பட்டுள்ளது. எந்தக் கடுமையான சோதனையிலும் போராடும் தீரத்தைக் கற்றுக் கொடுக்கிற பக், மாவீரர் லெனினையும் கவர்ந்த பாத்திரம் என்பர்.

இந்த அருமையான கதையை மறக்க முடியாத இலக்கியமாகத் தமிழில் தந்துள்ளார் தூரன். 'கானகத்தின் குரல்' என்ற தலைப்பே ஓயாது ஒலிக்கும் கனமான அந்த நாயின் துயரக் குரலை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

### தூரன் பதிப்பித்த நூல்கள் ★

தூரனின் பதிப்புப் பணியின் சிகரமாக விளங்குவது 'பாரதி தமிழ்'. அதனைப் பாரதி பணி பகுதியில் காணலாம்.

ஓலைச் சுவடிகளில் மறைந்துகிடந்த சில நூல்களையும் பதிப்பித்து வெளியிட்ட பெருமை தூரனுக்கு உண்டு.

காளமேகப்புலவரின் 'சித்திர மடல்' தூரன் பதிப்பித்த நூல்களில் ஒன்று. விளக்கக் குறிப்புகளோடு காளமேகப் புலவரின் பெருமை துலங்கும்படி இந்நூலைப் பதிப்பித்துள்ளார்.

வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் தந்த ஏட்டுச் சுவடியினின்றும் அவிநாசி நாவலனின் 'திங்களூர் நொண்டி நாடகத்'தையும் பதிப்பித்து வெளியிட்டார்.' கொள்ளை யடிப்பதைத் தொழிலாகக் கொண்ட ஒரு திருடன் பிடிபட்டு அரசனால் தண்டிக்கப்படுகிறான். மாறுகால் மாறுகை வாங்கப்பட்டு நொண்டியான பின் அவன் திருந்தி இறைவழிபாடு செய்து காலையும் கையையும் மீண்டும் பெறுகிறான். ஏறத்தாழ இருநூறு ஆண்டுகட்கு முன்னால் எழுதப்பட்ட் இந்நாடகத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார் தூரன்.

---

★தகவல் : ப.கொழந்தசாமி, ம.ப.பெரியசாமித் தூரனின் தமிழ்ப்பணி, 'தமிழாய்வு', 14, சென்னைப் பல்கலைக் கழகம் (1984–1990)

'வடிவேல் பிள்ளை மோகினி விலாசம்' என்னும் நாட்டிய நாடக நூலையும் தூரன் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

தூரனின் இலக்கியப் பணியும் எழுத்துப் பணியும் வியக்கத்தக்க பன் முகங்களைக் கொண்டவை. அண்மைக் காலத்தில் வாழ்ந்தவரெனினும் அவர் பதிப்பித்த நூல்கள் அனைத்தும் ஆய்வுலகுக்குக் கிடைத்தன என்று கூறுதற்கில்லை.

# 8. கலைக்களஞ்சியப் பணி

> **"தமிழ் நூல் பதிப்புத் துறைக்கு ஓர் அய்யரவர்கள் வாய்த்தது போலக் கலைக்களஞ்சியத் துறைக்கு ஒரு தூரன் என்று உணர்த்துமளவுக்குத் தொண்டர் நாதனாகத் தமிழ்ப் படையின் தனிநாயகனாகத் திகழ்ந்தவர் பெ. தூரன்"**

என்று பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி கலைக்களஞ்சியப் பணி குறித்து மதிப்பிடுவார்.

இந்திய மொழிகளிலேயே முதல் முயற்சியாகத் தி.சு.அவினாசிலிங்கம் அய்யா தோற்றுவித்த தமிழ் வளர்ச்சிக் கழகம் இப்பணியை 1947–ம் ஆண்டில் மேற்கொண்டது. அப்போது அய்யா தமிழ்நாட்டின் கல்வி அமைச்சராக விளங்கினார்.

உண்மையில் ஒரு மொழியின் செல்வமாகக் கருதத்தக்க கலைக்களஞ்சியப் பணியைத் தொடங்குவதற்குத் தூரனே வித்திட்டார் என்று ஆய்வாளர் மா. இராமச்சந்திரன் கருத்துரை நல்கியுள்ளார்.★ 1947–ல் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய தூரன் கலைக்களஞ்சியம் ஒன்றைத் தமிழில் உருவாக்கும் முயற்சியில் கட்டுரைகள் வேண்டி முயற்சிகளில் இறங்கியுள்ளதாக அறிவித்தார் என்றும், இத்திட்டத்தை வரவேற்ற அந்நாளைய கல்வி அமைச்சர் தி.சு. அவினாசிலிங்கம் அய்யா தமிழ் வளர்ச்சிக் கழகம் நிறுவி அதனிடம் இப்பொறுப்பை ஒப்படைத்தார் என்றும் அவர் தெரிவிக்கின்றார். தூரனின் குறிப்புகளும் இதனை உறுதி செய்துள்ளன.

முதலில் ஒரு முதன்மை ஆசிரியரைக் கண்டுபிடிக்கும் வரையில் தூரன் பொறுப்பில் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் பொ. திரிகூட சுந்தரம், தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் ஆகியோர் பெயர்கள் ஆராயப் பட்டபோதிலும் முதன்மை ஆசிரியர் நியமனம் பெறாமலே நாட்கள் சென்றன. அப்போது பெ. தூரனும், கல்கியும் தமிழ்

---

★மா.இராமச்சந்திரன், பெ.தூரனின் இலக்கியப் பணி, எம்ஃபில் ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம், 1987, ப.149

வளர்ச்சிக் கழகத்தின் செயலாளர்களாக இருந்தார்கள். 'கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலையலாமா?' என்று கல்கி கல்வி அமைச்சரிடம் தூரனைக் குறித்து நினைவு படுத்தியபோது அவரும் மனமுவந்து அவரை 1948–ல் முதன்மை ஆசிரியராக நியமனம் செய்தார். ஓர் ஒப்பற்ற சாதனையைச் செய்யும் வாய்ப்பு இதன் காரணமாகத் தூரனுக்குக் கிடைத்தது.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் சிங்காரவேலு முதலியார் 'அபிதான சிந்தாமணி' என்னும் கலைக்களஞ்சியத்துக்கு முன்னோடியான ஒரு நூலை வெளியிட்டார். அந்நூலில் இலக்கியம், புராணங்களும் மட்டுமே இடம் பெற்றிருந்தன. அறிவியல் செய்திகளோ, வரலாற்றுத் தகவல்களோ இல்லை. பிற இந்திய மொழிகளிலும் கூட இந்தஅளவு முயற்சிகளே இருந்தன. என்சைக்ளோப்பீடியா பிரிட்டானிக்கா போன்ற மேலை நாட்டுக் கலைக்களஞ்சியங்களுக்கு நிகரான ஒரு முயற்சி இங்கு உருவாகவில்லை. இந்நிலையில் தான் 1947–ம் ஆண்டு தமிழ்நாட்டில் கலைக்களஞ்சியப் பணி ஆரம்பமாகிறது.

> ''தூரன் ஆற்றிய பணிகளில் எல்லாம் சிறந்ததும் கடினமானதும், பல்லாண்டு வேலை வாங்கியதும் தமிழில் வெளிவந்த பத்து பாகங்கள் கொண்ட கலைக்களஞ்சியம் ஆகும். தொகுப்பு ஆசிரியராகத் திரு. தூரன் அவர்களைத் தேர்ந்தெடுத்தது நல் வாய்ப்பாக அமைந்தது. கலைக் களஞ்சியம் உருவாக்கும் பணி பகீரத முயற்சியாகும். எவ்வளவு பேரறிஞரானாலும் ஒருவரோ, ஒரு சிலரோ கலைக்களஞ்சியத்தைத் தொகுத்து வெளியிட்டு விட முடியாது. பல்வேறு துறைகளில் வல்லுநர்களுடைய ஒத்துழைப்பு அதற்குத் தேவை. அவ் ஒத்துழைப்பைப் பெற, ஊக்கப்படுத்தும் திறமையும், பிழை பொறுக்கும் பொறுமையும் வேண்டும். பெரியசாமித் தூரனிடம் இரண்டு தன்மைகளும் சேர்ந்திருந்தன''
>
> (ம.ப.பெ.தூரன் நினைவு மலர் – 1987)

என்று நெ.து. சுந்தரவடிவேலு நினைவு கூருகின்றார்.

கடல் போன்ற இந்தப் பொறுமை தூரனிடம் அமைந் தருந்தமையைப் பல அறிஞர்கள் வியந்துள்ளனர். பேராசிரியர்

அ.ச. ஞானசம்பந்தன் 'நான் கண்ட கர்மயோகி' என்ற கட்டுரையில்,

> **''மனித நிலைக்கு அப்பாற்பட்ட இத்தகைய பொறுமையை, விருப்பு வெறுப்பற்ற சம திருஷ்டியைத் தூரன் என்ற மனிதன் எவ்வாறு பெற முடிந்தது?..... தூரனின் இந்த மனநிலை ஆழமான தெய்வ பக்தியின் அடியில் தோன்றிய ஒன்றாகும்''**
>
> (ம.ப.பெ. தூரன் நினைவுமலர் – 1987)

என்று போற்றுகின்றார்.

ஒவ்வொன்றும் எழுநூற்றைம்பது பக்கங்கள் கொண்ட பத்துத் தொகுதிகளாகக் கலைக்களஞ்சியத்தை உருவாக்கித் தந்தார் தூரன். 1200 அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள், 15,000–க்கு மேற்பட்ட பொருள்களைக் குறித்த செய்திகள் கலைக்களஞ்சியத்தில் இடம் பெற்றுள்ளன. நாடுகள், நகரங்கள் சார்ந்த வரலாற்று நிகழ்ச்சிகள், நிலவியல் செய்திகள் அனைத்தும் மிகச் சரியான தகவல்களாகத் தரப்பட்டுள்ளன. வேளாண்மை முதல் புதிய அறிவியல் தொழில் நுட்பம் வரை தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன. கலைஞர்கள், அரசியல் அறிஞர்கள், இலக்கிய மேதைகள், அறிவியலாளர்கள் என உலக அரங்கிலும், தேசிய அளவிலும், இலக்கிய மேதைகள், அறிவியலாளர்கள் என உலக அரங்கிலும், தேசிய அளவிலும், தமிழகத்திலும் குறிப்பிடத்தக்க அனைவரைக் குறித்தும் கட்டுரைகள் இணைக்கப் பட்டுள்ளன. அறிவுக் கருவூலமாகக் கலைக்களஞ்சியம் உருவாக்கப்பெற்றது.

தமிழிலே பல்துறை அறிவியல், கலையியல் செய்திகளை வழங்குவதற்கு ஏற்ற கலைச்சொற்களை உருவாக்கும் மிகக் கடுமையான பணி தொடக்கத்தில் காத்திருந்தது. இதற்கு முன் எந்த நிறுவனத்துக்கும் ஏற்படாத பெரிய சோதனையாக இச்சிக்கல் அமைந்தது. தூரன் ஆழ்ந்து சிந்தித்து நாற்பதுக்கும் மேற்பட்ட சிறு குழுக்களை இதற்கென அமைத்தார். பல நாட்கள், மாதங்கள் ஓயாத விவாதங்கள் நடைபெற்று 22,000–க்கு மேற்பட்ட கலைச்சொற்கள் கண்டுபிடிக்கப் பட்டன. சில நாட்களில் ஒரு சொல்லுக்கு ஏற்ற கலைச்சொல் கண்டுபிடிக்கப் படாமல் போனதும் உண்டு. இது குறித்துத் தூரன் தம் நினைவுக் குறிப்பில் எழுதியுள்ளார்.

**''கலைச் சொற்கள் நல்ல தமிழிலே எல்லாரும் ஏற்றுக் கொள்ளும்படியாக அமைப்பது மிகக் கடினம். எடுத்துக் காட்டாக Personality என்ற கலைச்சொல்லை எடுத்துக் கொள்வோம்... மூர்த்திகரம், தோற்றம், தோற்றப் பொலிவு என்பவை எல்லாம் அவர்கள் (உளவியல் துறையினர்) பயன்படுத்திய சொற்களாகும். ஆனால் இவைகளில் எவையும் முழு மனநிறைவைப் பெறாதவையே ஆகும்.... இந்த ஒரு சொல்லுக்கு மட்டும் ஒரு கூட்டம் முழுவதும் செலவழித்தோம். செலவழித்தாலும் ஏற்ற சொல்லைக் காணமுடியாமல் தடுமாறினோம்..... இறுதியாக Personality என்ற சொல்லுக்குப் பன் மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரையே அடுத்த நாள் ஒரு புதுச் சொல் கண்டுபிடித்து வருமாறு கேட்டுக் கொண்டோம்... இறுதியாக இலக்கணத்தைப் பயன்படுத்தி, 'ஆளுமை' என்ற சொல்லை அடுத்தநாள் கூட்டத்திலே தெரிவித்தார்கள்.''**

இவ்வாறு கடும் விவாதங்களுக்குப் பிறகு கலைச்சொற்கள் உருவாக்கப்பெற்றன. இந்தக் கன்னி முயற்சிக்கு நிச்சயமாக ஒரு வரலாற்றுச் சிறப்பு உண்டென நம்பினார் தூரன்.

முதன்மை ஆசிரியர் பொறுப்பு எத்தகையது என்பது குறித்து அவருக்குத் தெளிவு இருந்தது. எந்தெந்த நாட்டில் எந்தெந்தத் துறை வல்லுநர்கள் இருக்கிறார்கள். எந்தெந்தக் கலைக்கூடங் களில், விலங்கக்ங்களில் கவர்ச்சியான படங்கள் கிடைக்கும், உள்நாட்டு வல்லுநர்களின் முகவரிகள் எங்கே பெறலாம், என்பன பற்றி ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். பல்துறை குறித்தும் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஐயங்களைத் தக்காரிடம் தெளிவு செய்து கொள்ள வேண்டும். அறிஞர்களும், பொதுமக்களும் வெளிவந்த தொகுதியில் குறித்துச் சொல்லும் கருத்துக்களைப் பொறுமையாகக் கேட்க வேண்டும்.

கிடைக்கும் செய்திகளைச் சுருக்கித் திட்பமாக ஆக்க வேண்டும். முதன்மை ஆசிரியர் அரசியல் கட்சி சார்பாளராக இருக்கலாகாது. சாதி, சமயப் பற்றாளராகவும் இருக்கக் கூடாது. என்றெல்லாம் தம் (அச்சில்வராத) நினைவுக் குறிப்புகளில் தூரன் எழுதியிருக்கின்றார்.

எந்த முக்கியமான செய்தியும் விடுபட்டுப் போகக்கூடாது. என்பதில் மிகுந்த அக்கறை தூரனுக்கு இருந்தது, ஒரு சமயம் தூரனின் மூத்த மகள் சாரதாமணி கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார். கவலை சூழ்ந்திருந்த நேரம் அது. மருத்துவர் 'காலா–அசார்' என்ற ஒருவகைக் காய்ச்சலால் மகள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். மருத்துவர் விடைபெற்றுப் போனதும் கலைக்களஞ்சியக் குறிப்புகளைப் புரட்டினார் தூரன். நோயின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை என்று தெரிந்ததும் தம் சிறுகுறிப்பேட்டை எடுத்து அதில் அப்பெயரைக் குறித்துக் கொண்டார். விடுபட்ட செய்திகளைக் குறித்துக் கொள்கிற புத்தகம் அது. துயரப் போதிலும் இப்படிப்பட்ட தீவிர அக்கறை தூரனிடம் இருந்தது.

கலைக்களஞ்சியத்தில் சில குறைகள் இருந்த போதிலும் Encylopaedia Britannica வுக்குப் பல வகைகளிலும் நிகரானது தமிழ்க் கலைக்களஞ்சியம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. மேல்நாட்டுக் கலைக்களஞ்சியங்களிலே காணமுடியாத இந்திய அழகுக் கலைக் குறிப்புக்கள் நம் கலைக்களஞ்சியத்தில் உண்டு என்று அவர் தெரிவித்துள்ளார்.

'பொருட்களஞ்சியம்' என எழுத்தாளர் சங்கக் கூட்டத்தில் (1947) இதன் பெயரை முதலில் தாம் குறிப்பிட்டதாகவும், பின்னர் கலைக்களஞ்சியம் என்று பெயர் சூட்டியதாகவும் தூரன் தெரிவித்துள்ள செய்தி கலைக்களஞ்சிய வரலாற்று ஆய்வாளர்கள் நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

தம்முடைய கலைக்களஞ்சியப் பணி குறித்துத் தூரன் சில குறிப்புகளை விட்டுச் சென்றிருக்கிறார். எதிர்பாராத விதமாக நல்ல துணையாசிரியர்கள் தமக்கு வாய்த்திருந்தார்கள் என்று தூரன் தெரிவிக்கின்றார். ஆனாலும் அவர்கள் ஆர்வத்தால் உழைத்தார்களே அன்றி, நல்ல சம்பளம் பெறவில்லை. பொருத்தமான சம்பளம் தருவதற்குத் தாம் சரியான முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்று தூரன் வருந்தியுள்ளார். தன்னலமற்ற முதன்மை ஆசிரியர் பெற்றுக் கொண்ட முதல் சம்பளம் வெறும் முந்நூற்றைம்பது ரூபாய் என்று அறிந்தபோது கல்கியே திடுக்கிட்டுப் போனார்! இருபதாம் நூற்றாண்டுத் தமிழுக்கு ஆற்றப்பட்ட நிகரற்ற பணியில் தங்களை மறந்து உழைத்த பெருமக்களின் வரலாறுதான் கலைக்களஞ்சியப்பணி.

கோப்புகளை ஒழுங்குபடுத்தி, கட்டுரைகளை நிரல்படுத்தி, பொருள்களை வரிசைப்படுத்தி, கட்டுரையாளர்களின் பட்டியலை நவீனப் படுத்தி, புகைப்படங்கள், ஓவியங்கள் ஆகியவற்றை முறையாகத் தொகுத்து ஒரு விநாடியில் அவற்றைக் கண்டறியுமாறு அலுவல் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பது தூரனின் கருத்து.

தொண்டு மனப்பான்மையையே முதலீடாகக் கொண்டு கலைக் களஞ்சியப்பணி வெற்றியுடன் நிறைவேற்றப் பட்டது. 1948–லிருந்து ஆறாண்டுக் காலம் அனைத்தும் ஒழுங்குபடுத்தப்பட்டு 1954–ல் முதல் தொகுதி சி. சுப்பிரமணியம் தலைமையில் வெளியிடப்பெற்றது. தொடர்ந்து ஏறத்தாழ ஆண்டுக்கு ஒரு தொகுதியாகக் கொண்டு வரப்பட்டு 1963 ஜனவரி மாதம் 4–ம் நாள் ஒன்பதாம் தொகுதி குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் தலைமையில் மக்களுக்குக் காணிக்கையாயிற்று. தொடர்ந்து விடுபட்டுப் போன செய்திகளைத் தொகுத்து இணைப்புத் தொகுதியாகப் பத்தாம் தொகுதி பின்னர் வெளிவந்தது.

கலைக்களஞ்சியத்துக்குத் தூரன் ஆற்றிய அரும்பணியைச் சிறப்பித்து முதல்வர் காமராசர் தலைமையில் பாராட்டுக் கூட்டம் 1963 பிப்ரவரி மாதத்தில் நடைபெற்றது. தூரனுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டது. அவ்விழாவில் மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் 'தமிழால் எதுவும் முடியும் என்பதற்குத் தமிழ்க் கலைக்களஞ்சியமே சான்று' என்று குறிப்பிட்டார்.

வாழ்வின் கனவாகக் கலைக்களஞ்சியப் பணியைத் தூரன் கருதினார். உயர்ந்த சம்பளத்தில் அனைத்திந்திய வானொலி அளிக்க முன்வந்த பணியையும் தம் லட்சியக் கனவுக்காக ஏற்க மறுத்தார்.

இந்த ஈடுபாட்டின் காரணமாகவே குழந்தைகள் கலைக்களஞ்சியம் தொகுக்கும் பணியும் தூரனிடமே ஒப்படைக்கப்பட்டது. ஒவ்வொரு தொகுதியும் நூறு பக்கங்கள் கொண்ட பத்துத் தொகுதிகளாக ஆயிரம் வண்ணப் பக்கங்களில் அழகுற நிறைவு செய்தார் தூரன்.

பொதுக் கலைக்களஞ்சியம் ஐந்தாம் தொகுதி வெளிவரும் போதே உடல் நலக்குறைவு தூரனுக்கு ஏற்பட்டுவிட்டது. ஆயினும் தம் கலைக்களஞ்சியப் பணியே அவருக்கு உயிர் மூச்சாக இருந்தது. ஆகவே குழந்தைகள் கலைக் களஞ்சியப்

பணியைத் தொடக்கத்தில் வழிகாட்டிவிட்டு ஓய்வெடுக்கக் கருதினார். அதற்கென ஓர் ஆசிரியரையும் அவர் பரிந்துரை செய்து விட்டார். ஆனால் அவர் குழந்தைகளுக்காக எழுதும் ஆற்றல் இல்லாதவராகப் போனது அவருக்கு அதிர்ச்சியாகப் போயிற்று. எனவே ஓய்வை உதறி விட்டுத் தாமே பொறுப்பெடுத்துக் கொண்டு இப்பணியை வெற்றியுடன் முடித்தார். 1976–ஆம் ஆண்டு அப்பணி நிறைவேறியது.

தமிழ்நாட்டில் இப்பெரும்பணிக்குப் பல தடைகள் இருப்பதையும் ஆங்கில நாட்டோடு ஒப்பிட்டுத் தூரன் தெரிவித்துள்ளார். குழந்தைகள் கலைக்களஞ்சியம் எத்தனை பிரதிகள் வெளியிடலாம் என்று கேட்டபோது தமிழ்ப் பதிப்பாளர்கள் ஐயாயிரத்துக்கு மேல் வெளியிடலாகாது என்று கருத்துத் தெரிவித்தார்களாம். ஆனால் ஆங்கிலத்தில் குழந்தைகள் கலைக் களஞ்சியத்தின் முதல் பதிப்பு ஒரு கோடிப் பிரதிகள் அச்சிடப்பட்டன என்று தூரன் ஒப்பிட்டுப் பேசுகின்றார்.

காந்தியடிகள் கண்ட கனவு சுதந்திர இந்தியா என்றால் தூரன் கண்ட கனவு தமிழின் முதல் கலைக்களஞ்சியமாகப் புகழ் ஒளி வீசி நிற்கின்றது.

## பத்திரிகைப்பணி

கலைக்களஞ்சியப் பதிப்புப் பணிக்கு ஒத்திகை போல மாணவப் பருவத்தில் 'பித்தன்' இதழை நடத்தினார் தூரன். ஒரு கட்டத்தில் 64 பக்கங்கள் கொண்டதாக இவ்விதழ் வெளிவந்துள்ளது.

இராமகிருஷ்ண வித்யாலய ஆசிரியப் பணிக் காலத்தில் தொழிலதிபர் நாச்சிமுத்துக் கவுண்டர் விருப்பத்துக்கிணங்க தூரன் ஆசிரியராகவும், கே. எஸ். பெரியசாமி துணை ஆசிரியராகவும் அமைந்த 'காலச்சக்கரம்' இதழ் வெளிவந்தது. 'டைம்' இதழ் போல் வடிவமைக்கப்பட்டுக் கோவை நகரிலிருந்து அவ்விதழ் சில காலம் வெளிவந்தது. தூரன் ஆசிரியப் பணியை விட்டுக் கலைக்களஞ்சியப் பொறுப்பேற்கச் சென்றதால் 'காலச் சக்கரம்' ஓட்டத்தை நிறுத்திக் கொண்டது.

எனினும் பத்திரிகை ஆசிரியப் பணி கலைக்களஞ்சியப் பணிக்கு ஓரளவு பயிற்சி தருவதாக அமைந்தது.

# 9. பாரதி தமிழ்

"ஒரே சங்க நாதம்
வேதங்களின் மூச்சு
அவன் பாடலில் வீசிற்று
அமுதத்தின் தெளிவு கலந்திருந்தது
நிலவின் தீஞ்சாறு மிதந்தது
வீரக்கனல் வழிந்தது
புதிய உயிர்பெற்றுக் கவிதை பொங்கிற்று...."

மகாகவி பாரதியாரைக் குறித்துப் பெரியசாமித் தூரன் எழுதிய கவிதை இது.

இளம்வயதில் தூரனுக்கு மிக நெருங்கிய நண்பராக இருந்த கவிஞர் ச.து.சு. யோகியார் தான் பாரதியார் பாடல்களை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தவர். கம்பீரமாக அவர் பாடிய பாரதியார் பாடல்களில் மனம் பறி கொடுத்தார் தூரன். தூரனின் நண்பர் கே. எஸ். பெரியசாமி எழுதியுள்ள 'என் உயிர்த் தோழன்' என்ற கட்டுரையில் (ம.ப.பெ. தூரன் நினைவுமலர் 1987) இச்செய்தி குறிப்பிடப்படுகிறது.

கல்லூரி நாட்களில் பாரதி காதல் வளர்வதற்கான சூழல் மேலும் மிகுதியாயிற்று. 1929–ல் பர்மா அரசாங்கம் பாரதியார் பாடல்களுக்குத் தடை விதித்ததைப் பின்பற்றி சென்னை அரசும் தடைவிதித்தது. அதனை எதிர்த்துச் சென்னைச் சட்டமன்றத்தில் உணர்ச்சிப் பிழம்பாக தீரர் சத்தியமூர்த்தி பேசிய பேச்சு எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாயிற்று மாணவர்கள் இடையே பாரதியார் கவிதைகள் பற்றிய பேரார்வம் பற்றி எரிந்தது. அந்த ஆர்வ நெருப்பில் தம்மையும் ஆகுதியாக்கிக் கொண்டவர் தூரன்.

மாணவர்கள் உருவாக்கிய வனமலர்ச் சங்கமும், அதன் வெளியீடான பித்தனும் மாநிலக் கல்லூரியில் தேசிய அலைகளை எழுப்பிக் கொண்டிருந்தன. பித்தன் இதழை அச்சிடுவதற்காகத் திரு.வி.க.வின் சாது அச்சுக்கூடம் சென்ற போது, சுதேசமித்திரன் இதழ்களில் 1905 முதல் 1921 வரை வெளிவந்து, வெளிச்சம் காணாமல் அன்று கிடந்த பாரதியாரின் எழுத்துக்களையெல்லாம் திரட்டும்படி அத்தமிழ்ச் சான்றோர் தூரனிடம் தெரிவித்தார். அந்தச் சொற்களைச் சிரமேற்கொண்டு சுதேசமித்திரன் ஆசிரியரிடம் சென்ற தூரனுக்கு அன்போடு அவர் அனுமதி நல்கினார்.

பாரதியார் எழுத்துக்களைத் திரட்டி 'பித்தன்' இதழில் வெளியிட முடிவு செய்தார் தூரன். தம் நண்பர்கள் எல்.கே. முத்துசாமி, கே.எஸ். பெரியசாமி ஆகியோர் துணையுடன் கட்டுரைகளைத் தொகுத்த அனுபவத்தைப் 'பாரதி தமிழ்' முன்னுரையில் தூரனே தெரிவித்துள்ளார்.

> **''சுதேச மித்திரன் பழைய பிரதியின் தொகுதிகளுள்ள அறைக்குள்ளே மறைந்து கிடந்த பாரதியாரோடு நான் ஆர்வத்தோடு பல நாட்கள், மாதங்கள் அளவளாவிக் கொண்டிருந்தேன். பதினாறு ஆண்டுகளில் வெளியான தினசரிப் பத்திரிகை, வாரம் மும்முறைப் பத்திரிகை இவற்றின் தாள்களை ஒவ்வொன்றாகப் பரிசோதித்துப் பாரதியாரின் கட்டுரைகளையெல்லாம் திரட்டிப் பிரதி எடுப்பது எளிதான காரியமா? ஆனால் அது எனக்குக் கடினமான வேலையாகத் தோன்றவில்லை. எதிரிலே பத்துப் பழந்தொகுதிகளை அடுக்கி வைத்து அவற்றையே மேஜையாக்கிக் கொண்டேன்... பழம்பிரதிகள் நிறைந்த அறைக்கு ஒரு தனிப்பட்ட வாசனையுண்டு. அது எங்களுக்கு நறுமணமாக இருந்தது''.**

கல்லூரிப் பருவ காலத்தில் பாரதிப் பைத்தியமான தூரன் திரட்டிய அரிய கட்டுரைகளும் கவிதைகளும் ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுகளுக்குப் பிறகு தான் அச்சு வடிவம் பெற்றன.

பாரதியாரின் வாழ்க்கையையும் கவிதைத் திறனையும் மிக விரிவாக ஆராய்ந்து எழுதவேண்டுமென்று தூரன் திட்டமிட்டிருந்தபடியால் இவற்றைப் பல ஆண்டுகளாக வெளியிடவில்லை. ஏனோ இந்தத் திறனாய்வு ஆசை நிறைவேறவில்லை. தமிழ் இலக்கிய உலகம் ஒரு விழுமிய படைப்பை இழந்துவிட்டது.

ஏறத்தாழ பாரதியார் எழுதிய 134 தலைப்புகள் 'பாரதி தமிழ்' நூலில் உள்ளன. அவற்றில் பாதிக்கு மேற்பட்டவை முதன்முறையாகக் கண்டெடுத்து வெளியிடப்பட்ட அபூர்வ ரத்தினங்கள். பாரதி பிரசுராலயம் 1935–ல் வெளியிட்ட பாரதியார் தொகுதிகள் வருமுன்னரே தூரன் திரட்டிய செய்திகள் வெளியிடப்பட்டிருந்தால் 134 தலைப்புகளுமே அவருடைய

கண்டெடுப்புகளாகக் கருதப்பட்டிருக்கும். இந்த நிலையிலும் ஏராளமான புதிய செய்திகள் தூரனின் நூலால் நமக்குக் கிடைக்கின்றன.

தூரனின் 'பாரதி தமிழ்' ஆய்வாளர்களுக்கு ஒரு அரும் பெரும் களஞ்சியமாகத் திகழ்கிறது. விரிவான பாரதியார் வாழ்க்கை வரலாறு, பாரதி தமிழின் தனிச்சிறப்புக்கள், பாரதியாரின் பத்திரிகைப் பணி ஆகியன குறித்த கட்டுரைகள் அறுபது பக்கங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இந்த நூலின் வாயிலாகத் தான் பாரதியாரின் தேசியம் பூத்த முதல் பாடல் ''வங்கமே வாழிய'', (15.9.1905) என்பது தெளிவாக்கம் பெற்றுள்ளது. அதற்கு முன் பாடியவை தேசியம் சார்ந்த பாடல்கள் அல்ல.

இந்நூலின் தனிச்சிறப்புக்களில் ஒன்று ஒவ்வொரு கட்டுரை அல்லது கவிதைக்கும் தூரன் வரைந்துள்ள சிறுகுறிப்பு ஆகும். வரலாற்றுச் செய்திகளும், பிறவும் அவற்றால் துலங்குகின்றன. மற்றொரு சிறப்பு - கட்டுரை அல்லது கவிதை அல்லது அறிவிப்பு வெளி வந்த ஆங்கிலத் தேதியும், தமிழ்த் தேதியும் குறிக்கப்பட்டிருப்பதாகும்.

காளிதாஸன், சக்திதாஸன் என்ற புனைபெயர்களால் எழுதப்பட்டவை இன்னவை என்ற குறிப்பு இருப்பது இன்னொரு சிறப்பு. பாரதியார் எழுதிய கடைசிக் கட்டுரை என்று கருதப்படுகிற 'ஸ்ரீரவீந்திரர் திக் விஜயம்' 1921 ஆகஸ்ட் 25-ம் நாள் வெளிவந்திருக்கும் செய்தி மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

இரண்டு வாரம் கழித்து செப்டம்பர் 11-ம் நாள் பாரதியார் காலமாகி விடுகிறார்.

குறிஞ்சிப் பாட்டில் வரும் மலர்களைப் பற்றிய வரிகளை முழுமையாகச் சுவடியில் கண்டபோது, 'மலர்கள் உதிரவில்லை' என்று உ.வே.சா. உவகைகொண்டார் என்பார்கள். அதுபோன்று பாரதியாரின் சிந்தனை மலர்கள் முழுமையாகக் கிடைக்காமல் உதிர்ந்துவிடுமோ என்று கவலை கொள்ளும் ஆய்வாளர்கள் மகிழும்படி இந்நூலைத் தொகுத்துத் தந்துள்ளார் தூரன். ரா.அ.பத்மநாபன், சீனி. விசுவநாதன், ரகுநாதன் ஆகியோர் வரிசையில் ஒரு முன்னோடியான பாரதி அன்பராகத் தூரன் திகழ்கிறார்.

ஏற்கெனவே வெளிவந்திருந்த போதிலும், சிறப்பான பதிப்புக் குறிப்புகளோடு தூரன் பதிப்பித்த நூல் சுப்பிரமணிய பாரதியார் மொழி பெயர்த்த தாகூரின் ஐம்பெருங் கட்டுரைகள் 1962–ல் வெளிவந்த இந்நூலுக்கு அருமையான பதிப்புரை ஒன்றைத் தூரன் இணைத்துள்ளார்.

**"ஒரு சிறந்த கலைஞனுடைய பெருமையை மற்றொரு சிறந்த கலைஞனைப்போல் வேறொருவர் அறிந்து கொள்ள இயலாது"**

என்று தம் பதிப்புரையில் கூறும் தூரன் இரவீந்திரரோடு பாரதியார் கொண்டிருந்த ஈடுபாட்டை இப்பதிப்புரையில் மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

தம்முடைய கட்டுரைகளிலே பல இடங்களிலும் பாரதியாரோடு தமக்குள்ள இனிய உறவைத் தூரன் புலப்படுத்தியுள்ளார். உலாவச் செல்லும் பொழுதெல்லாம் தாம் முணுமுணுக்கும் பாடல்களாகப் பாரதியார் பாடல்களையே குறிப்பிட்டுள்ளார்.

வாழ்நாளெல்லாம் பாரதியோடு இரண்டறக் கலந்துபோன தூரன் உடல் நலிவுற்றுப் படுக்கையில் இருந்த காலத்தில் அவருடைய நெருங்கிய அன்பராக விளங்கிய நா. மகாலிங்கம் பாரதி வரிசை நூல்கள் எழுதுவதற்குத் தக்க உதவிகளைச் செய்தார். அந்த உதவியால் பாரதியாரைப் பல்வேறு கோணங்களில் அறிமுகப்படுத்தும் பத்து நூல்களை வெளியிட்டார்.

**பாரதியும் பாட்டும் (1979), பாரதியும் பாப்பாவும் (1979), பாரதியும் பாரத தேசமும் (1979), பாரதியும் பெண்மையும் (1979), பாரதியும் தமிழகமும் (1979), பாரதியாரின் நகைச்சுவையும் நையாண்டியும் (1980), பாரதியும் உலகமும் (1981), பாரதியும் கடவுளும் (1981), பாரதியும் சமூகமும் (1982), பாரதி நூல்கள் ஒரு திறனாய்வு (1982),** என்பன **அந்நூல்கள்.**

**பாரதியாரைக் குறித்து விரிவாக ஒரு திறனாய்வு நூல் எழுதவேண்டுமென்று ஆசைப்பட்ட தூரன் கலைக்களஞ்சியப் பணிகள் காரணமாகவும், உடல் நலிவு காரணமாகவும் முழுமையாக அப்பணியை நிறைவேற்ற முடியவில்லை. அந்த**

விருப்பத்தின் ஒருபாகமாகவே இந்தப் பத்து நூல்களையும் கருதமுடியும்.

இந்த நூல்கள் ஒரு பொதுவான அமைப்பைக் கொண்டவை. ஒவ்வொரு நூலிலும் தூரனின் அறிமுக உரையும், அவரால் குறிப்பிட்ட பொருள் குறித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாரதியாரின் கவிதைகளும், கட்டுரைகளும் இடம் பெற்றன.

'பாரதியும் பாட்டும்' என்ற நூலின் முன்னுரையில் இந்திய நாட்டு இசை பற்றிப் பாரதியார் கொண்டிருந்த பெருமிதத்தை விளக்குகின்றார். குழந்தைகளுக்கும் 'கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு' வேண்டும் என்று பாரதியார் வற்புறுத்தியதைச் சுட்டிக்காட்டுகின்றார். 'கானத்திலே அமுதாக நிறைந்த கவிதையிலே உயர் நாடு' என்று பாரதியார் பாடும் சிறப்பை விளக்குகின்றார். இசைக் கலைஞர் சுப்புராம தீட்சிதரிடம் பாரதியார் அன்பு பூண்டிருந்ததை எடுத்துக்காட்டுகின்றார். 'பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா' என்று குயில்பாட்டின் விரிவாகப் பேசும் இனிமையை வியக்கின்றார்.

கலையில் புதுமை மலர வேண்டும் என்ற தம் அவாவைச் சொல்லி நூலை அறிமுகம் செய்கின்றார்.

தாய்மொழியும் தமிழ்நாடும் பாரதியார் சிந்தனைகளால் புத்துயிர் பெற்ற வரலாற்றைப் 'பாரதியும் தமிழகமும்' நூலில் எடுத்துரைக்கின்றார். தமிழர்களுக்கு மகத்தான சக்தி எற்பட வேண்டும் எனப் பாரதி விழைந்த விழைவுகள் தூரனால் விளக்கப்படுகின்றன.

தமிழ் நாட்டை நேசித்த கவிஞர் 'வாழிய பாரத மணித்திருநாடு' என்று பரந்த களத்துக்கு வருவதைப் 'பாரதியும் பாரத தேசமும்' நூலில் படம் பிடித்துக் காட்டுகின்றார் தூரன். 'ஆரிய' என்ற சொல்லுக்குப் பாரதியார் கொண்ட அரும்பொருளை அறிமுக உரையால் தெளிவு படுத்துகின்றார் - தூரன். விடுதலை பெற்ற நாடு குறித்த பாரதியாரின் கனவுகள் நிறைவேறவில்லையே என்ற ஆதங்கம் தூரனின் முன்னுரையில் புலனாகின்றது.

பாரதியாரின் உலகப் பார்வையின் வீச்சையும், உலக நாடுகளின் புரட்சிகள் குறித்தும், முன்னேற்றம் குறித்தும் அவர்

எண்ணிய எண்ணங்களையும் மிகத் தெளிவாகப் 'பாரதியும் உலகமும்' நூல் வாயிலாக அறிமுகம் செய்கின்றார்.

பாரதி பெண்ணுக்கு விடுதலை தேடித் தந்த கவிஞராகத் திகழ்வதையும், புதுமைப் பெண் பற்றிய அவர் சிந்தனை களையும் கவிதைச் சான்றுகளாலும், கட்டுரைகளாலும் விளக்கும் நூல் 'பாரதியும் பெண்மையும்'.

பாரதியார் பாடல்களிலேயே வைரமணியாகத் திகழும் பாப்பாப் பாட்டையும், குழந்தைகள் பால் பாரதியார் கொண்டுள்ள நேசத்தையும் விளக்குவதற்காகப் 'பாரதியும் பாப்பாவும்' என்ற நூலை வரைத்துள்ளார்.

இந்த வரிசையில் பெரு நூலாகத் திகழ்வது 'பாரதியும் சமூகமும்'. சாதி எதிர்ப்பு, பெண்விடுதலை, தீண்டாமை எதிர்ப்பு, தொழிலாளர் நலன் எனப் பன்முகங்களிலும் பாரதியார் சிந்தனைகள் பாய்வதை இந்நூலில் விளக்குகின்றார். கனகலிங்கம் என்ற தாழ்த்தப்பட்ட சிறுவனுக்குப் பூணூல் அணிவித்ததையும், நிவேதிதா தேவியார் பெண்ணுக்குச் சமநீதி போதித்ததையும் சுட்டிக் காட்டுகின்றார்.

பாரதியாரின் கட்டுரைகளில் பெரிதும் பொதிந்து கிடக்கும் நகைச்சுவை உணர்வைத் தொட்டுக் காட்டும் நூல் 'பாரதியாரின் நகைச்சுவையும் நையாண்டியும்.'

> **"உண்மையான கவிஞரின் உள்ளம் மிக மிக மென்மை யானது. அதாவது ஒரு துன்பத்தைப் பூதக் கண்ணாடி போட்டுப் பெருக்கிக் காட்டும் இயல்புடையது"**

என்று சொல்லும் தூரன் இந்தத் துன்ப உணர்வுக்கு வடிகாலாகவே பாரதியாரின் நகைச்சுவை இருப்பதாகத் தெரிவிக்கின்றார். குயில்பாட்டில் குரங்கு, மாடு வருணனைகளிலும், கண்ணன் பாட்டில் சேவகன் வருணனையிலும், ஞானரதம் முதலான கட்டுரைகளில் பல இடங்களிலும் கொப்புளிக்கும் நகைச்சுவையை எல்லாம் விவரிக்கின்றார்.

'பாரதியும் கடவுளும்' என்ற நூலோ சமய ஒருமைப்பாட்டுக்குப் பாரதியாரின் பங்களிப்பை விரிவாகக் கூறுகின்றது.

'பாரதி நூல்கள் – ஒரு திறனாய்வு' என்னும் நூல் கவிஞரைப் பல கோணங்களில் ஆராய்கின்றது. பாரதியாரின் உரைநடை,

பாரதியார் வசன கவிதை, பாரதியாரின் தேசபக்திப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், கண்ணன் பாட்டு, ஞானரதம், பாஞ்சாலி சபதம் ஆகிய தலைப்புகளில் சுருக்கமான திறனாய்வை முன்வைக்கின்றது.

எளிய, உள்ளத் தொடர்பான உரைநடை என்று உரைநடையைப் போற்றுகின்றார். அரவிந்தர் தொடர்பு, வால்ட் விட்மன் அறிமுகம், ரவீந்திரர் கவிதை ஆகியன எல்லாம் சேர்ந்து வசன கவிதையை அவரிடம் வளர்த்ததாகக் குறிப்பிடுகிறார். புதுக்கவிதைக்குப் பாரதியாரே வழிகாட்டி என்று சுட்டுகிறார்.

தேசபக்திப் பாடல்கள் இல்லாத குறையை நீக்கியவர் பாரதியார் என்பது தூரனின் கருத்து.

அவரது தோத்திரப் பாடல்களில் வாழ்க்கைப் பண்புகள் துலங்குவதாகக் காட்டுகிறார். ஆழ்வார் பாடல்களிலிருந்து உற்சாகம் பெற்றுக் கண்ணன் பாட்டுப் பிறந்த போதிலும் தனித்தன்மை மிக்க 'விலைமதிக்க முடியாத கருவூலம்' என்கிறார்.

பரமாத்மா – ஜீவாத்மா ஐக்கியமே குயில்பாட்டு என்ற பழைய தத்துவத்தைக் குயில்பாட்டில் அடையாளம் காண்கிறார். ஞானரதத்தில் பாரதியார் எடுத்துக் கொண்ட விஷயங்கள் பெரியவை என்ற ராஜாஜியின் கருத்தை முன் வைக்கின்றார்.

> **''தமிழுக்குள் கிடக்கும் எல்லையற்ற சக்தியையும் லாகவத்தையும் பாரதியார் எழுத்துக்களில் தமிழ் மக்கள் பார்த்து அறிந்து கொள்ள வேண்டும். புயன் கொண்ட கற்பனா சக்தியும், கொழுந்து விட்டெரியும் நாட்டன்பும், விசாலமான தரும ஞானமும், நோவாத ஹாஸ்ய ரசமும் தமிழ்த் தாயின் செல்லக் குழந்தை, வரப்பிரசாதர், பாரதியார் எழுதிய இந்நூலில் ஜ்வலிப்பதைக் காணலாம்.''**

என்ற ராஜாஜியின் ஞானரதத் திறனாய்வு மிகப் பொருத்தமான எடுத்துக் காட்டப்பெறுகிறது.

**'எளிய பதங்களைக் கொண்டு வலிமை வாய்ந்த உணர்ச்சிகளைத்' தூண்டக்கூடிய பாடல்கள் எழுதலாம் என்பதற்குப் பாஞ்சாலி சபதம் எடுத்துக்காட்டெனத் தூரன்**

குறிக்கின்றார். கம்பனுக்கு விருத்தம் போல் பாரதிக்குச் சிந்து என்கிறார் தூரன். பாஞ்சாலி சபதத்தை அமர காவியம் என்று தூரன் பாராட்டி மகிழ்கிறார்.

சுருக்கமாக அமைந்த இத் திறனாய்வு நூல் தூரனின் விமர்சனக் குறளாக விளங்குகிறது. உடல் நலிவு இந்த பாரதிப் பித்தரின் முழுத் திறனாய்வு ஆற்றலுக்குத் தடையாகிவிட்டதே என்ற ஆதங்கம் எழுகிறது.

எனினும் பாரதி தமிழ் தந்த விசாலச் சிறகுகளின் அசைவுகளையும் அலைகளையும் அதிர்வுகளையும் தூரனின் கவிதைகளில் என்றென்றும் கண்டு உள்ளம் சிலிர்க்க முடியும்.

# 10. தூரன் என்றொரு மனிதர்

*"பன்னும் நூல்கள் தேடுகின்ற*
*பரனைக் காணும் ஆசையில்லை*
*மன்னும் இந்த உலகினிலே*
*மனிதன் தன்னைத் தேடுகின்றேன்"*

பட்டப்பகலில விளக்குடன் மனிதனைத் தேடிய கிரேக்க ஞானியைக் குறித்துக் கவிஞர் சோமு இவ்வாறு பாடுகின்றார். மனிதரில் மனிதர்களைக் காண்பது அரிது என்பதையே இது காட்டுகிறது.

ம.ப. பெரியசாமித் தூரன் உன்னதமான லட்சியங்களோடு வாழ்ந்த அருமையான மனிதர்.

கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு தமக்கு விருப்பமான ஆசிரியத் தொழிலில் ஈடுபட விரும்புகிறார் தூரன். அதுவும் உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்ட ஒரு நிறுவனத்தில் வேலை செய்ய ஆசைப்படுகின்றார். அன்பு நண்பர்களின் உதவியால் தி.சு.அவினாசிலிங்கம் அய்யாவின் இராமகிருஷ்ண வித்யாலாயத்தில் சேருகின்றார். மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளம் தர முன்வருகிறார் அய்யா.

**"எனக்கு மாதம் 25 ரூபாய் வேண்டாம்.15 ரூபாயே போதும் என்று கூறிவிட்டு சுமார் பத்தாண்டுக் காலம் எவ்வித சம்பள உயர்வும் இன்றிப் பணியாற்றத் தொடங்கினேன்'**

என்று நினைவுக் குறிப்புகளில் எழுதுகின்றார் தூரன். அதுமட்டுமா அன்று தலைமை ஆசிரியருக்கு 120 ரூபாய் சம்பளமாம். பின்னால் தலைமை ஆசிரியர் ஆன போது தானே விரும்பி 60 ரூபாய் போதுமென்று சொல்லிவிட்டார் தூரன். ஆண்டுகள் உருண்டோத் திருமணம் செய்து கொண்ட பின்னரும் 75 ரூபாய் வாங்கிக் கொண்டு பணியாற்றினார் தூரன்.

**"நாடு ஆயிரம் ஆயிரம் தியாகிகளை எதிர்பாத்திருந்தது. சம்பள வருவாயில் தியாகம் செய்வது பெரிதல்ல"**

என்ற நினைவுகள் (கையெழுத்துப்படி) குறிப்பில் தெரிவிப்பதைப் படித்தால், கல்வி உலகில் இப்படியும் ஒரு அதிசய மனிதரா என்று எண்ணும்படி காட்சி தருகின்றார் தூரன்.

ஆசிரியப் பணிக் காலத்தில் தம் சம்பளமே குறைவாக இருந்த போது ஏழை மாணவருக்கு விடுதிக் கட்டணம் கட்ட உதவுவார். ஒரு சமயம் தூரன் கால்பந்து விளையாட்டிலும் உடற்பயிற்சியிலும் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார். அப்போது நண்பர் ஒருவர், 'என்ன அண்ணாச்சி, தேகப் பயிற்சி என்பது கால்பந்து, ஆக்கி போன்ற மேல்நாட்டு விளையாட்டுகளில் தானா இருக்கிறது? மாணவர் விடுதிக்கு விறகு உடைத்துப் போட்டால் தேகப் பயிற்சி இல்லையா?' என்று விளையாட்டாகப் பேசியதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டார் தூரன். அன்று முதல் விறகு உடைத்துப் போடுகிற வேலையைச் செய்யலானார். உயர் வகுப்புப் பையன்களும் அதைப் பார்த்து உதவிக்கு வந்தார்கள். அந்தக் குருகுலப் பள்ளி 'விறகு உடைக்கும் தலைமை ஆசிரியரை'ப் பார்த்து வியந்தது.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதில் தீவிரமான நம்பிக்கை கொண்டவர் தூரன். கால் வலிப்பு நோய் அதிகரித்து, காலும் கையும் செயலற்றுப் படுக்கையில் இருந்தபோது இதற்குக் காரணம் இளமைக்காலத்தில் தாம் இரண்டு பறவைகளைத் துப்பாக்கியால் சுட்டதுதான் என்று நம்பினார். மாணவப் பருவத்தில் தம் சிற்றன்னையை இழந்த போது தூரன் பெருந்துயரத்துக்கு ஆளானார். அந்தத் துயரத்தை மாற்றுவதற்காக ஒரு துப்பாக்கி வாங்கிக் கொடுத்தார்கள். அதை எடுத்துக் கொண்டு போய் இணையாக இருந்த மைனாக்களில் ஒன்றைச் சுட்டுக் கொன்றுவிட்டார். அப்போதே நெஞ்சம் பதறிப் போனது.

கோபியில் ஆசிரியப் பணியாற்றும்போது இன்னொரு துப்பாக்கி கைக்குக் கிடைத்தது. காட்டுக்குள் போய் ஒரு மயிலைச் சுட்டுவிட்டார். தாம் வழிபடும் முருகனின் வாகனத்தைக் காயப்படுத்திவிட்டோமே என்று உருகிப் போனார். பிற்காலத்தில் செயலற்ற உடலுடன் படுக்கையில் கிடக்கும் போது தூரன் நினைத்துக் கொண்டார்:

**''முருகா. நீ கலியுக வரதன். சரியான தண்டனை கொடுத்தாய், இருபத்து நான்கு ஆண்டுகளாகக் கால் வலிப்பு வந்து, தண்டனை கொடுத்தாய். இப்போது கால்**

கை வராமலே செய்துவிட்டாய். கருணா மூர்த்தியாகிய நீ கொடுத்ததும், நான் அனுபவித்ததும் ஆகிய தண்டனை போதும் போதும்''

(நினைவுகள்)

என்று எழுதுகின்றார். கிரௌஞ்ச வதம் நம்முடைய மனதுக்குள் வந்து போகின்றது.

தூரனின் அமைதியையும் எளிமையையும் அரும் பண்புகளையும் குறித்து அவருடன் பழகிய மீ.ப.சோமு தெரிவித்துள்ள செய்திகள் குறிப்பிடத்தக்கவை:

''முடிவு வெளியாகும் வரை பரிசுகள் பற்றி தகவல்களை இரகசியமாக வைத்திருப்பதில் அவருக்கு நிகர் அவரே. என்னுடைய நூல்களுக்குப் பரிசு வந்த போது கூட, நெருங்கிய நண்பனாக இருந்தும் கடைசி நிமிஷம் வரை என்னிடம் அதுபற்றி வாயசைக்கவே இல்லை அவர். அன்பான அவருடைய உள்ளத்தில் அப்படி ஓர் அழுத்தமும் இருந்தது......

எந்தச் சூழலிலும் எந்த உணர்ச்சி மோதல்களிலும் தூரன் அமைதியை இழக்கமாட்டார். பிறர் வெகுண்டு பேசினாலும் தூரன் முகத்தில் கடுகடுப்பு வராது. புன்முறுவல் செய்வார். உடம்பு பலவீனப்பட்டிருந்த காலத்திலும் இந்தப் பொறுமையின் பலம் அவருக்குக் குறையவே இல்லை''*

எந்தப் பணியைச் செய்கிற போதும் மற்றவர் உள்ளம் நொந்துவிடாமல் நடந்து கொள்கிற பண்பு செறிந்த இதயம் தூரனிடம் அமைந்திருந்தது. எட்டையபுரத்தில் பாரதி மணி மண்டபம் கட்டி அங்கே ஒரு பாரதி சங்கம் அமைந்திருந்த கல்கி சில காரணங்களை முன்னிட்டு அச்சங்கத்தைச் சென்னைக்குக் கொண்டு வந்தார். சங்கத்தின் செயலாளராக இருந்து வழிநடத்த வேண்டுமென்ற கல்கியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு இசைவு தெரிவித்தார் தூரன். பாரதி பணியில் தன்னையும் அர்ப்பணித்துக் கொள்ளும் வாய்ப்பு என்று கருதினார். கலைக் களஞ்சியத்தின் முதன்மை ஆசிரியப் பணியில் இருந்த நேரம்

★ மீ.ப.சோமு, மறைந்த களஞ்சியம், கலைமகள், பிப்ரவரி 1987

அது. இந்தச் செய்தியை அறிந்த தமிழ் வளர்ச்சிக் கழக நிறுவகர் தி.சு. அவினாசிலிங்கம் அய்யா சரியாகவோ, தவறாகவோ இதை விரும்பவில்லை. ஒரு பெரும் பணிக்கு இன்னொரு பொறுப்பு இடையூறாக இருக்கலாம் என்று அவர் கருதியிருக்கலாம். அய்யா மனதை அறிந்த அக்கணமே தூரன் பாரதி சங்கச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகினார். அருமை நண்பர் கல்கியின் மனம் நோகாதபடி இந்தக் காரியத்தை நிறைவேற்றினார் என்பதில் தான் தூரனின் அரும்பண்பு மறைந்து கிடப்பதைக் காண்கிறோம்.

அதிசயங்களில் தூரனுக்கு நம்பிக்கை உண்டு. முற்றிலும் எதிர்பாராமல் நிகழ்ந்து விடுகிற அதிசயங்கள் தன் வாழ்விலும் ஏற்பட்டது உண்டு எனத் தூரன் பதிவு செய்து வைத்திருக்கின்றார்.

> **"வாழ்க்கையில் நான் ஒரு மகான் இல்லை. நான் குறைகள் பலவுடைய உள்ளத்தைக் கொண்டவன். இருந்தாலும் எனது வாழ்க்கையிலும் இரண்டு அதிசயங்கள் நடந்தது நினைவிலிருக்கிறது. இவை பற்றி நான் பெருமையோ உயர்வோ தேடிக் கொள்ள விரும்பவில்லை என்பதற்காகவே இவ்வளவு விளக்கமாக எழுதத் துணிந்தேன். ஓர் அதிசயம் பழனியில் நிகழ்ந்தது. மற்றொன்று சென்னையில் நிகழ்ந்தது."**

(நினைவுகள்)

இந்த நினைவுக் குறிப்போடு இரண்டு நிகழ்ச்சிகளையும் விவரிக்கின்றார் தூரன்.

தூரனின் தமிழ் இசைப் பாடல்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அச்சிலும் வெளிவந்து விட்டன. இப்பாடல்களுக்குத் தூரனின் இசை ஆசிரியரான சிவராமகிருஷ்ண பாகவதர் இசை அமைத்துக் கொடுத்தார். இந்தப் பாடல்களை எல்லாம் பண்டித மணி கதிரேசன் செட்டியார் உள்ளிட்ட அறிஞர்களும், இசை மேதைகளும் கேட்டுப் பாராட்டினார்கள். முதன் முதலாகக் கீர்த்தனைகள் எழுதி, அதைப் பேரறிஞர்களும் ஏற்றுக் கொண்ட மகிழ்ச்சியில் அந்த நூலைப் பழனி முருகன் பாதத்தில் வைத்து வணங்கத் தூரன் கருதினார்.

பழனித் திருக்கோயிலுக்குப் போனதும் ஒன்றிரண்டு பாடல்களையேனும் பாடவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. குருநாதர் பாடத் தீர்மானித்த போது, உள்ளூரிலேயே வயலின், மிருதங்க வித்வான்கள் இருவர் தாங்கள் கூட வாசிப்பதாக முன்வந்தனர். ஒரு முழுக் கச்சேரியாக அது அமைந்துவிட்டது. இதைக் கேள்விபட்டு அங்கு வந்த கோயில் அதிகாரி அவர்களுக்குப் பரிவட்டம் கட்டிச் சிறப்புச் செய்தார். அத்துடன் சிறப்பு வழிபாட்டுக்கும் ஏற்பாடு செய்தார். வழிபாட்டின் போது கீர்த்தனைகளின் பிரதியை முருகன் திருவடியில் வைக்கும் படி கொடுத்தார்கள். வ்ழிபாடு முடிந்த பிறகு சிவாச்சாரியார் என்ன தேடியும் அந்த நூல் காணாமல் போய்விட்டது. இந்த நிகழ்ச்சி தூரனுக்கு அதிசயமாகத் தோன்றியது.

தன் இசைப் பாடல்களை முருகனே ஏற்றுக் கொண்டு விட்டதாகத் தூரன் கருதினார்.

மற்றொரு அதிசயம் என்று சென்னை நிகழ்ச்சி ஒன்றையும் குறிப்பிடுகின்றார். அன்னை பராசக்தியைக் குறித்து ஒரு பாடல் எழுதினார் தூரன். அன்னையின் அருவ நிலையையும், உருவ நிலையையும் சொல்ல வேண்டுமென்று கருதி 'ஜோதி சொரூபிணி சிம்மவாகினி' என்று பாடலை ஆரம்பித்தார். அது ஜோதி சொரூபிணி ராகப்பாடல், இந்த இரண்டு சொற்களுக்கும் இடையில் இரண்டு மூன்று எழுத்தில் ஒரு சொல் அமைக்க வேண்டும். பல தடவை முயன்றும் சரியான சொல் கிடைக்கவில்லை. ஆகவே 'ஜோதி சொரூபிணி உயர் சிம்ம வாகினி' என்று போட்டு நூலிலும் அச்சாகிவிட்டது. இருந்தாலும் அவர் மனதில் நிறைவு ஏற்படவில்லை. ஒரு நாள் நள்ளிரவில் ஒரு கனவு வந்தது. அந்தக் கனவில் அழகான ஓர் இளம் பெண் பாடிக் கொண்டே வந்தாள்.

'ஜோதி சொரூபிணி ஜெய சிம்ம வாகினி' என்று அவள் திரும்பத் திரும்பப் பாடினாள். ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிய தூரன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டார். அன்னை பராசக்தியே வந்து சொன்னது போன்ற அனுபவம் அவருக்கு உண்டாயிற்று. 'முழுவதுமாக உன் முகம் பார்க்க முடியவில்லையே' என்று உணர்ச்சி பரவசப்பட்டார். தேம்பித் தேம்பி அழுதார் தூரன்.

''மற்ற அற்புதங்கள் பற்றி எனக்குத் தெரியாது. என் வாழ்வில் மறக்க முடியாத அதிசயங்கள் இவை'' என்று தூரன் குறிப்பிட்டிருக்கிறார்.

சித்தர்களிடத்திலும் மகான்களிடத்திலும் மிகுந்த ஈடுபாடு தூரனுக்கு இருந்தது. திருக்கோயிலூர் ஞானானந்த கிரி சுவாமிகள், புரவிபாளையம் கோடிசுவாமிகள் போன்ற மகான்களைச் சந்திக்கிற வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டிருந்தது.

சில உடல் கோளாறுகளுக்காகத் தலையில் ஓர் அறுவை மருத்துவம் செய்ய வேண்டுமென்று மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்தனர். இதனிடையே திருக்கோயிலூர் ஞானானந்த கிரி சுவாமிகளைக் காணக் குடும்பத்துடன் சென்றார். அவர் முன்பு இசைப் பாடல்களை மூத்த மகள் சாரதா மணி பாடினார். தூரனின் உடல் நிலை குறித்து அவரிடம் சொன்னபோது அறுவை இல்லாமல் அப்படியே இருக்கட்டுமே' என்று மட்டும் சொன்னார் சுவாமிகள். மீண்டும் மருத்துவர்கள் பரிசோதனைக்குப் போன போது 'அறுவை சிகிச்சை இப்போது தேவையில்லை' என்று சொல்லிவிட்டார்கள். ஞானானந்த கிரி சுவாமிகளின் அருளாசியினால் இது நேர்ந்ததாகத் தூரன் நம்பினார்.

அரவிந்தரையும், ரமணரையும் தரிசிக்கக் கருதியும் அந்த வாய்ப்புத் தவறிப் போனதால் மிகவும் வருந்தினார். ஆனால் அரவிந்தர் ஆசிரம அன்னையைக் காணும் பேறு அவருக்கு வாய்த்தது.

சுவாமி சித்பவானந்தர் என்னும் மகாயோகியைக் கண்டு பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். அவருடைய கடமை உணர்ச்சியும், கட்டுப்பாடும், குழந்தை உள்ளமும் தூரனை மிகவும் கவர்ந்தன. வடகுமரை அப்பண்ணா சுவாமிகள் மற்றொரு சிறந்த பெரியவர். அவருடய கண்கள் சோதிமயமாக விளங்கும் என்றும், அவருடைய சிரிப்பு ஒரு மாயக் கவர்ச்சி உடையது என்றும் வியப்போடு தூரன் குறிப்பிட்டுள்ளார். அவர் கொடுத்த நவமணி மாலையை மிகுந்த பக்தியோடு தூரன் வைத்திருந்தார்.

கோவை மாவட்டம் புரவிபாளையத்தில் அண்மைக் காலம் வரை வாழ்ந்த சித்தர் கோடி சுவாமிகள். விவேகானந்தர்,

இராமகிருஷ்ணரை அறிந்த ஒரு வங்காளி என்றும், இருநூறு வயது அவருக்கு இருக்கும் என்றும் தூரன் குறிப்பிட்டுள்ளார். தனுஷ்கோடியில் பல்லாண்டுகள் நடந்து திரிந்த அவரைப் புரவிபாளையம் ஜமீன் குடும்பத்தார் அழைத்து வந்து அரண்மனையில் தங்க வைத்ததாகவும் கூறுகின்றார்கள். கோடி சுவாமிகளின் விசித்திரச் செயல்கள் பல சமயங்களில் புரிந்து கொள்ள முடியாதவை. எனினும் அவரிடம் தூரனுக்கு அளவற்ற ஈடுபாடு இருந்தது.

> **''இவர் மகிமையைப் பற்றிப் பலர் பலவிதமாகப் பேசுவார்கள். நான் மானசீக குருவாக ஏற்றுக் கொண்டிருப் பவர்களில் அவரும் ஒருவராவார்''**

என்கிறார் தூரன்.

தெய்வக் குழந்தையாகப் பலரும் கருதும் திருவண்ணாமலை யோகி ராம் சுரத்குமார் இன்றும் வாழ்கிற ஞானி. பல காலம் ஒரு புன்னை மரத்தடியில் வாழ்ந்து கொண்டு இரவில் கடைத் திண்ணைகளில் தூங்கும் இயல்புள்ளவர் ராம்சுரத் குமார். அவர் கையில் ஒரு விசிறியும் பருகும் குவளையாக ஒரு கொட்டாங்கச்சியும் இருக்கும். அவரைக் குறித்து ஒரு பிரெஞ்சு அறிஞர். 'The God Child of Thiruvannamalai' என்று ஒரு நூல் எழுதியுள்ளார். இணையற்ற பெருமை உடையவராக அவரை நேசித்த தூரன் அவரோடு தங்கியிருந்ததும் உண்டு. யோகி ராம் சுரத்குமார் 24.9.1981 – ல் இந்தியில் கையொப்பமிட்டு ஆங்கிலத்தில் தூரனுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். தூரனுக்கு எழுபத்து நான்காம் வயது நிறைவதையொட்டி யோகி எழுதிய வாழ்த்துக் கடிதத்தைக் காணும் வாய்ப்பு இந்நூலாசிரியருக்குக் கிடைத்தது.

> **"My father always remembers you and bless you!!! The Indian Nation will be remembering you and thanking you for the great service you have done for ages, and ages!!! I am proud of having a friend like you!... My mother Earth is proud that she has given birth to a great son like you!!!**

தற்செயலாகத் தூரனின் பழந்தாள் நறுக்குகளுக்கிடையே ஆச்சரியக் குறிகள் நிரம்பிய இந்தக் கடிதத்தைக் கண்டபோது மிகுந்த வியப்பு உண்டாயிற்று.

மகாகவி பாரதியார் தம் இறுதிநாட்களில் பல சித்தர்களோடு நெருக்கம் கொண்டிருந்ததைப் போன்று தூரனும் துறவியர்களோடு நேசம் கொண்டிருந்தார்.

மென்மையாகவும் அதே சமயம் கேட்பவர் மனம் கொள்ளும்படியாகவும் பேசும் திறமை தூரனுக்கு இருந்தது. திரு.வி.க. இந்தத் திறமையைக் கண்டு வியந்தது உண்டு. ஒரு சமயம் மாணவ வயதில் 'பித்தன்' இதழைப் பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டது. ஆசிரியர் என்ற முறையில் தூரனும், அச்சிடுபவர் என்ற முறையில் திரு.வி.க. வும் மாநிலத் தலைமை மாஜிட்ரேட் (Presidency Magistrate) அலுவலகம் சென்றனர். சீருடை அணிந்து பட்டாக்கத்தியை ஏந்தியபடி காவலர்கள் குதிரை மீது அமர்ந்து காவல் இருந்தனர். மாநில மாஜிஸ்ட்ரேட் வின்ஸ்டன் சர்ச்சில் பாவனையில் சுருட்டுப் பிடித்தபடி அமர்ந்திருந்தார். கம்பீரமாக மாணவர் தூரனைப் பார்த்து

"What do you mean by Pithan?"

(பித்தன் என்றால் பொருள் என்ன?)

என்று கேட்டார். சுதேசப் பித்துக் காரணமாக வைத்துக் கொண்ட பெயர் என்று தெரிந்தால் இதழைப் பதிவு செய்ய முடியாது. எதிர்பாராத இந்தக் கேள்விக்கு தூரன் சட்டென்று பதிலளித்தார்.

"One of the names of Lord Siva"

(சிவபெருமானின் பெயர்களில் ஒன்று)

பதிவு செய்து கொள்ள அனுமதி கிடைத்தபின் சந்திக்கும் போதெல்லாம் இந்தப் பதிலைப் பாராட்டினார் திரு.வி.க.

ஈரமான இதயம் படைத்தவர் தூரன். பள்ளியில் பணிபுரியும் போது சாதிப் பெயர் சொல்லாமல் குழந்தைகள் வளருகின்ற மரபை உருவாக்கியவர். சின்ன வயதில் தன் கொழுந்தி ஒருவர் கணவரை இழந்தது கண்டு நொந்து போன அவர் உள்ளம் எழுபது தாண்டிய முதுமையிலும் அதற்காகக் கலங்கித் தவித்தது. அந்தப் பெண்ணின் திருமணம் நிகழவிருந்த மணவறையில் தாழ்த்தப்பட்டவன் ஒருவன் தண்டிக்கப்பட்டதை நினைவு கூர்ந்து அத்தகைய கொடுமைதான் இத்தகைய துன்பத்தை மணமகளுக்கு இழைத்து விட்டதோ என்று வருந்தியது தூரனின் திருவுள்ளம்.

படுத்த படுக்கையாக இருந்த போது ஒருநாள் நண்பர் டி.கே. கோவிந்தராவிடம் 'காண்பதென்றோ நாம்? காந்தியைப் போலொரு . சாந்த மகாத்மாவை' என்ற தம் பாடலைப் பாடும்படிக் கேட்டுக் கொண்டார். பாடலைக் கேட்கக் கேட்கத் தாரை தாரையாகக் கண்ணீர் வடித்து மயக்கமாகி விடுகிற நிலை வந்துவிட்டது தூரனுக்கு. அப்படி ஒரு மலரினும் மெல்லிய உள்ளம் தூரனுக்கு அமைந்திருந்தது.

நட்புக்காக எப்போதும் உருகுகிற நெஞ்சம் பெற்றிருந்தார் தூரன். கே.எஸ். சின்னசாமி, கே.எஸ். பெரியசாமி, டாக்டர்.எல்.கே. முத்துசாமி, ரங்கசமுத்திரம் குமாரசாமி, பாரத ரத்தின சி.சுப்பிரமணியம், கவிஞர் ச.து.சு. யோகியார், மு.அருணாசலம் ஆகியோரிடமெல்லாம் பேரன்பு பாராட்டியவர் தூரன். கவிஞர் ச.து.சு. யோகியாருடன் காவிரிக் கரையில் கம்பனையும் பாரதியையும் பேசி மகிழ்ந்த பேரின்பத்தைக் குறித்துப் பல இடங்களில் தூரன் நினைவு கூர்ந்திருக்கிறார். தனக்கு உற்றுழி உதவிய நா.மகாலிங்கம், செளந்திரா கைலாசம் ஆகியோரைப் பலபடப் பாராட்டி மகிழ்ந்திருக்கிறார். நண்பர்களுக்குத் தம் நூல்களைச் சமர்ப்பணமும் செய்துள்ளார்.

இசையில் முழுவதுமாகத் தோய்ந்துவிடும் கலைஞராகத் தூரன் இருந்தார். தமது பெண்மக்களுக்கெல்லாம் இசையை கற்பித்து மகிழ்ந்தார். தமிழ்நாட்டில் தமிழிசை ஓங்க வேண்டும் என்ற இயக்கத்திலே முழுமையாக – ராஜாஜி, டி.கே.சி. , கல்கி, ராஜா சர் அண்ணாமலை செட்டியார் வழியில் – தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். ஆனால் இதற்கு ஒரு நாளும் மொழி வெறி காரணமல்ல என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

> **''தமிழ்நாட்டிலே இசை ஓங்கவேண்டும். அது தமிழிலேயே இருக்க வேண்டும் என்று நான் கூறும்போது அக்கருத்தை யாரும் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. தியாகையர் கிருதிகளையும், தீட்சிதரின் கம்பீரமான சமஸ்கிருத இசைப் பாடல்களையும், சாமா சாஸ்திரிகளின் அற்புதமான சாகித்யங்களையும், ஒதுக்கிவிட்டுத் தமிழ் மக்கள் நிறைந்துள்ள சபைகளில் தமிழிலேயே இசைப் பாடல்கள் பாடப் பெற வேண்டும் என்று வற்புறுத்தியதற்கு வேறு காரணம் உண்டு. தெலுங்கு மொழியின்பாலும்,**

வடமொழியின்பாலும் ஏற்பட்டுள்ள வெறுப்பே காரணம் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. அம்மொழிகளில் இயற்றப் பட்டுள்ள கீர்த்தனைகளின் பெருமையை நான் நன்குணர்வேன். அவற்றை நான் போற்றுகிறேன்.''

*(நினைவுகள் – கையெழுத்துப் பிரதி)*

இவ்வாறு தூரன் தம் மொழி உணர்வைத் தெளிவு படுத்தியுள்ளார். ஓதுவார்கள் காத்து வைத்துள்ள இசை மரபுகளைப் பேணிக் காக்க வேண்டிய பொறுப்பை நன்றாக உணர்ந்திருந்தார் தூரன்.

மெல்லிய நகைச்சுவை உணர்வு தூரனுக்கு வாய்த்த மிகப்பெரிய வரமாக இருந்தது. எடுத்துக்காட்டாக தாம் பள்ளி ஆசிரியராக இருந்த போது நடந்த ஒரு நிகழ்ச்சியை மிகச் சுவையாக அவர் சொல்வதைக் கேட்போம்:

''வித்யாலயம் உயர்ந்த குறிக்கோளைக் கொண்டு தொடங்கப்பட்ட ஒரு கல்வி நிலையம்... பத்துத் தேய்த்தல், பெருக்குதல், சமையல் செய்தல் முதலான எல்லாப் பணிகளுக்கும் ஆள் என்பதே இல்லை; மாணவர்கள் தாமாகவே செய்து கொள்ள வேண்டும்... காலையில் பழைய சாதம், மோர் இதற்காக.... சுமார் 80 பேருக்கென்ற தனியாக குக்கர் ஒன்று உருவாக்கி இருந்தோம். அதிலே இரவில் போதுமான அரிசியைப் போட்டு, தண்ணீரை ஊற்றி அடுப்பேற்றி வைத்து விட்டால் காலையில் எழுந்தவுடன் வெதுவெதுப்பான சாதம் கிடைத்துவிடும். பரிமாறும் போது சிவபுராணம் பாடுவது வழக்கம். சிவபுராணம் பாடி பிரம்மார்ப்பணம் சொல்லி, .பிறகு தான் அருந்துவது வழக்கம். சில வேளைகளில் அடுப்பு அவிந்து எதிர்பார்த்தபடி எரியாமல் அணைந்து போகும்... அன்று வட்டிலைத் தயாராக வைத்துக் கொண்டு மாணிக்கவாசகருடைய சிவபுராணம் பாடிக் கொண்டிருப்போம். குக்கரைத் திறந்து பார்த்தால் அரிசி அப்படியே இருக்கும். பிறகு மாணிக்கவாசகருக்கு யோகம்தான். சாதம் தயாராகும் வரை சிவபுராணம் பாடிக் கொண்டே இருப்போம்...''

(நினைவுகள் – கையெழுத்துப் பிரதி)

கல்கியிடத்தில் தூரனுக்கு நெருக்கமான நட்பு இருந்தது. ஒரு சமயம் அவரைத் தன் ஊருக்கும் காவிரிக் கரைக்கும் அழைத்துப் போயிருந்தார் தூரன். ஊர் திரும்பும் போது கல்கி சொன்னார்! ''டி.கே.சி. காலமான பிறகு குற்றாலம் போக பிடிக்கவில்லை. உங்களுடைய குலவிளக்கு அம்மன் கோயிலுக்கு அடிக்கடி வந்து இந்த இயற்கை சூழலிலே தங்கவேண்டும்.'' ஆனால் அந்த ஆசை நிறைவேறாமலே விரைவில் கல்கி காலமாகி விட்டார்.

தம் வாழ்நாளில் மனைவி, குழந்தைகளிடத்தில் தூரன் கடுஞ்சொல் கூறியதே இல்லை. பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாது குழந்தைகளுக்கு விரும்பியவற்றை வாங்கித் தந்ததை இன்று நினைத்தாலும் பெருமையாக இருக்கிறது என்று இளைய மகள் கண்ணீர் மல்க நினைவு கூர்ந்தார். பணத்துக்குத் தம் குருநாதர் பாரதியார் போலவே பெரிய மதிப்பைத் தூரன் அளிக்கவில்லை. கோபி வைரவிழாப் பள்ளி வேலையிலிருந்து விலகி இராமகிருஷ்ண வித்யாலயப் பணிக்குச் செல்லும் போது தம் கையிலிருந்து காசுகளை வீதியிலே விட்டெறிந்து விட்டுப் போனதாக அவர் நினைவுக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

மகத்தான பணிகள் பலவற்றைப் புகழ்ப் பணியாகச் செய்து முடித்திருந்த போதிலும் சில பணிகளை முடிக்கவில்லையே என்ற வருத்தம் அவருக்கு இருந்தது. நண்பர் நா. மகாலிங்கம் பெரியபுராணம் போல அறுபத்து மூன்று பல்சமயச் சான்றோர் பற்றிப் புதிய பெரியபுராணம் பாடுமாறு வேண்டியபோது, தமக்கு அதற்கேற்ற வயதில்லாமல் போயிற்றே என்று வருந்தினார்.

மகாகவி பாரதியாருடைய வாழ்க்கை வரலாற்றை ஆதாரங்களோடு எழுதி, அவர் கவிதைகளுக்கு விரிவான திறனாய்வு நூல் ஒன்று படைக்கவேண்டுமென்று ஆசைப்பட்டார். இதனையும் முழுமையாகச் செய்ய முடியாது போயிற்று.

காலமெல்லாம் கலைக்களஞ்சியம், இலக்கியப் படைப்பு என்று உழைத்துக் கொண்டிருந்த காரணத்தால் வாழ்க்கைத் துணையான மனைவிக்கு உரிய கடமைகளை முழுமையாகச் செய்யவில்லையோ என்ற வருத்தமும் அவருக்கு இறுதி நாட்களில் இருந்தது.

ஆயினும் யோகி ராம் சுரத் குமார் ஒரு சமயம் குறிப்பிட்டது போல, 'ஒவ்வொரு மனிதனும் சில பணிகளுக்காகத் தேர்வு

செய்யப்பட்டிருக்கிறான். அந்தக் கடமைகளை மனமார ஆற்றுவதே கடமை' என்ற கருத்தில் அவர் நம்பிக்கை பூண்டிருந்தார்.

காவிரிக்கரை, பாரதி தமிழ், இசையமுது, கலைக்களஞ்சியம், கவிதை, நாட்டுப்புறப் பாடல், முருக வழிபாடு என்னும் பேரின்பங்களில் மூழ்கித் திளைத்த பெரியசாமித் தூரன்–

மென்மை தவழும் கவிதைகளில், நெஞ்சை நெகிழ வைக்கும் இசைப் பாடல்களில், பாரதி படைப்புகளைக் கண்டெடுத்த பகீரதத் தவத்தில், சிறுவர்களின் சிங்காரக் கதைகளில், கலைக்களஞ்சியம் என்னும் கம்பீரத்தில் என்றென்றும் நிலைத்து வாழ்வார்.

# பின்னிணைப்பு – 1

## உதவிய நூல்கள் / ஆய்வேடுகள் / இதழ்கள்

1. ம.ப.பெரியசாமித் தூரன் எழுதிய அனைத்து நூல்கள்

2. மா. இராமசந்திரன், பெ. தூரனின் இலக்கியப் பணி, எம்ஃபில் ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம், 1987.

3. V.Ray Appan, Periyaswamy Thooran - A Study M,Phil Dissertation, University of Madras, 1989.

4. வெ. சத்தியமூர்த்தி, பெ.தூரன் கவிதைத் திறன், எம்ஃபில் ஆய்வேடு, அழகப்பா பல்கலைக்கழகம், 1990.

5. அமரகவி பத்மபூஷண் ம.ப.பெரியசாமித் தூரன் நினைவு மலர். சக்தி சர்க்கரை ஆலை பதிப்புத் துறை, 1987.

6. ப.கொழந்தசாமி, ம.ப.பெரியசாமித் தூரனின் தமிழ்ப் பணி, (கட்டுரை), தமிழாய்வு 14, தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், 1984 – 1990.

7. பெ. தூரன், நினைவுகள் (கையெழுத்துப்படி)

8. பெ.தூரன், நாட்குறிப்பின் சில பகுதிகள் (கையெழுத்துப்படி)

9. கல்கி, 11.9.1978

10. கலைமகள், பிப்ரவரி 1987

11. கோகுலம், ஆகஸ்ட், 1986

## உதவி புரிந்த உளளங்கள்

ம.ப.பெரியசாமித் தூரனின் அனைத்து நூல்களையும் நாட்குறிப்பின் ஒரு பகுதியையும் உதவிய தூரன் புதல்வர் எம்.பி.சுதந்தரகுமார்.

தூரனின் நினைவுகள் குறிப்பையும் பல அரிய நூல்களையும் உதவிய அவர் புதல்வி **விஜயவல்லி மாரிமுத்து**.

ஊக்கம் தந்துதவிய மூத்த புதல்வி சாரதாமணியின் கணவர் வழக்கறிஞர் **சி.சின்னுசாமி**, மகள் **வசந்தா ராமசாமி**

ஆய்வேடுகள் அளித்து உதவிய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் **இ.சுந்தரமூர்த்தி**

ஆகியோருக்கு நன்றி.

# பின்னிணைப்பு – 2

## பெ.தூரன் – தகவல் குறிப்பு

| | | |
|---|---|---|
| பிறப்பு | – | ஈரோட்டுக்கு அருகில் உள்ள மஞ்சக் காட்டு வலசு, 26.9.1908 |
| பெற்றோர் | – | பழனிவேலப்ப கவுண்டர்<br>பாவாத்தாள் |
| கல்வி | – | 1. மொடக்குறிச்சியில் தொடக்கப் பள்ளிக்கல்வி<br>2. ஈரோடு மேல்நிலைக் கல்வி – மகாஜன சபா உயர்நிலைப்பள்ளி<br>3. சென்னை மாநிலக்கல்லூரியில் பி.ஏ (கணிதம்)<br>4. சென்னையில் எல்.டி. பட்டக்கல்வி |
| பணி | – | 1. பட்டப்படிப்பு முடிந்ததும் கோபி வைரவிழா உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப்பணி<br>2. 1933 முதல் இராமகிருஷ்ண வித்யாலயத்தில் போத்தனூரிலும், பின்னர் பெரியநாயக்கன் பாளையத்திலும் ஆசிரியர் – தலைமை யாசிரியர் பணி – 1948 வரை. |
| இசைப்பயிற்சி | – | தொடக்கத்தில் என்.சிவராமகிருஷ்ண அய்யரிடமும் பின்னர் சென்னையில் டி.கே. கோவிந்தராவிடமும் பயிற்சி பெற்றார். நூற்றுக்கணக்கான கீர்த்தனைகள் படைத்தார். |
| திருமணம் | – | 1939 மே முதல் நாள் காளியம்மாளை மணந்தார் உடன்பணி புரிந்த ஆசிரியர் வழுக்குப்பாறை வெங்கடாசலத்தின் சகோதரி இவர். |

| | | |
|---|---|---|
| மக்கள் | – | திருமதி. சாரதாமணி சின்னசாமி<br>திருமதி. வசந்தா ராமசாமி<br>திருமதி. விஜயவல்லி மாரிமுத்து<br>திரு. எம்.பி.சுதந்தரகுமார் |
| சிறப்புப் பணி | – | முதன்மை ஆசிரியர், கலைக் களஞ்சியம் (1948 – 1968)<br>முதன்மை ஆசிரியர், குழந்தைகள் கலைக் களஞ்சியம் (1969 – 1976) |
| நூல்கள் | – | (பார்க்க – பின்னிணைப்பு – 3) |
| நண்பர்கள் | – | பாரத ரத்தினம் சி.சுப்பிரமணியம்<br>டாக்டர்.எல்.கே. முத்துசாமி<br>கே.எஸ்.பெரியசாமி,<br>கே.எஸ். சின்னசாமி<br>என்.டி. சுந்தரவடிவேலு (துணைவேந்தர்)<br>சௌந்தரா கைலாசம்<br>ச.து.சு. யோகியார் |
| இதழ்ப்பணி | – | மாணவ வயதில் 'பித்தன்' இதழாசிரியர் ஆசிரியராக இருந்தபோது 'காலச் சக்கரம்' இதழாசிரியர். |
| ஈடுபாடு | – | கவிதை, சிறுகதை, நாடகம், சிறுவர் இலக்கியம், அறிவியல், இசை மொழிபெயர்ப்பு, பாரதி தமிழ், கலைக்களஞ்சிய உருவாக்கம், எல்லையற்ற தெய்வ பக்தி. |
| பொறுப்புகள் | – | 1. செயலாளர், தமிழ் வளர்ச்சிக் கழகம்<br>2. செயலாளர், குழந்தை எழுத்தாளர் சங்கம்<br>3. தலைவர், தமிழ் எழுத்தாளர் சங்கம்<br>4. ஒருங்கிணைப்பாளர், பண்ணாராய்ச்சிக் குழு |
| விருதுகள்/பரிசுகள் | | 1. 'பாரதி தமிழ்' நூற்பணியைப் பாராட்டித் தமிழ் எழுத்தாளர் சங்கம் தந்த தங்கப் பதக்கம். |

2. கருவில் வளரும் குழந்தை நூலுக்கு மைய அரசுப் பரிசு

3. சிறுவர் பாடல் நூலுக்குச் சென்னைக் கல்வித் துறை பரிசு.

4. சிறுவர் கதை நூலுக்குக் குழந்தை எழுத்தாளர் சங்கப் பரிசு.

5. 'பாரதி தமிழ்' பணியைப் பாராட்டிப் பாரதியார் சங்கம் கேடயம்.

6. பாரதக் குடியரசுத் தலைவர் அளித்த 'பத்மபூஷன்' விருது.

7. சிறுவர் இலக்கியச் சங்கப் பட்டயம்

8. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இசைப் பாடல்களுக்கு முதற் பரிசு.

9. சென்னை நக்கீரர் கழகம் – 'பெருந்தமிழ்ச் செல்வர்' விருது.

10. சென்னை இயல் இசை நாடக மன்றம் – கலைமாமணி விருது.

11. தருமபுர ஆதீனம் 'செந்தமிழ்க் கலைச்செல்வம்' விருது.

12. கோவை நன்னெறிக் கழகம் – 'தமிழ் அறிஞர்' விருது.

13. தமிழிசைச் சங்கம் – 'இசைப் பேரறிஞர்' விருது.

# பின்னிணைப்பு – 3

## பெ. தூரன் நூல்கள்

### கவிதை

இளந்தமிழா (முதற்பதிப்பு, 1949 வானதிப் பதிப்பகம்/ 6ம்பதிப்பு, 1980)

பட்டிப் பறவைகள் (பாரி நிலையம், 1956)

மின்னல் பூ (பாரி நிலையம், 1957)

நிலாப் பிஞ்சு (பாரி நிலையம், 1959)

தூரன் கவிதைகள் (பாரி நிலையம், 1962)

### சிறுகதை

பிள்ளைவரம் (பாரி நிலையம், 1945)

உரிமைப் பெண் (அமுத நிலையம், 1952)

காளிங்கராயன் கொடை (அமுத நிலையம், 1956)

தங்கச் சங்கிலி (இன்ப நிலையம், 2 – ம் பதிப்பு 1956)

மாவிளக்கு (இன்ப நிலையம் , 1958)

### கட்டுரை

பூவின் சிரிப்பு (அமுத நிலையம், 1951)

காற்றில் வந்த கவிதை (இன்ப நிலையம், 1958)

காட்டுவழி தனிலே (அமுத நிலையம், 1952)

தேன் சிட்டு (பாரி நிலையம், 2 – ம் பதிப்பு,63)

### நாடகம்

அழகு மயக்கம் (அமுத நிலையம், 1951)

சூழ்ச்சி (அமுத நிலையம், 1955)

பொன்னியின் தியாகம் (இன்ப நிலையம், 1955)

ஆதி அத்தி (பாரி நிலையம், 1956)

காதலும் கடமையும் (பாரி நிலையம், 1957)

மனக்குகை (பாரி நிலையம், 2 – ம் பதிப்பு 60)

இளந்துறவி (பாரி நிலையம், 1961)

## இசைப்பாடல்

தமிழ் இசைப் பாடல்கள் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) (ஆண்டுக் குறிப்பு இல்லை)

தமிழ் இசைப் பாடல்கள் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) (ஆண்டுக் குறிப்பு இல்லை)

இசைமணி மாலை (அல்லையன்ஸ் கம்பெனி) (பதிப்பு குறிப்பு இல்லை)

கீர்த்தனை மஞ்சரி (தமிழ் இசைச் சங்கம், 1951)

இசைமணி மஞ்சரி (தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், 1970)

முருகன் அருள்மணி மாலை (தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம், 1974)

கீர்த்தனை அமுதம் (தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம், 1974)

நவமணி இசைமாலை (தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம், 1980)

## சிறுவர் இலக்கியம்

ஆனையும் பூனையும் (பழனியப்பா பிரதர்ஸ், 1957)

ஓலைக்கிளி (பழனியப்பா பிரதர்ஸ், 1961)

மாயக் கள்ளன் (பழனியப்பா பிரதர்ஸ், 1961)

தம்பியின் திறமை (பழனியப்பா பிரதர்ஸ், 1963)

சூரப்புலி (பழனியப்பா பிரதர்ஸ், 1966)

ஜிம்மி (கலைமகள், 1966)

நாட்டிய ராணி (பழனியப்பா பிரதர்ஸ், 1970)

கொல்லிமலைக் குள்ளன் (பழனியப்பா பிரதர்ஸ், 1973)

கடக்கிட்டி முடக்கிட்டி (பழனியப்பா பிரதர்ஸ், 1976)

மஞ்சள் முட்டை (பழனியப்பா பிரதர்ஸ், 1977)

சங்ககிரிக் கோட்டை மர்மம் (மாக்மில்லன், 1978)

நிலாப்பாட்டி (பழனியப்பா பிரதர்ஸ், 1979)

தரங்கம்பாடித் தங்கப் புதையல் (வானதி, 1981)

பறக்கும் மனிதன் (பழனியப்பா பிரதர்ஸ், 4ம் பதிப்பு 1981)

நல்ல நல்ல பாட்டு (பாரி நிலையம், 2 ம் பதிப்பு, 69)

மழலை அமுதம் (குருகுலம் வேதாரண்யம் 1981)

## பாரதி இலக்கியம்

பாரதி தமிழ் (அமுத நிலையம், 1953)

பாரதியும் தமிழகமும் (வானதி பதிப்பகம், 1979)

பாரதியும் பாரத தேசமும் (வானதி பதிப்பகம், 1979)

பாரதியும் பாட்டும் (வானதி பதிப்பகம், 1979)

பாரதியும் பாப்பாவும் (வானதி பதிப்பகம், 1979)

பாரதியும் பெண்மையும் (வானதி பதிப்பகம், 1979)

பாரதியும் நகைச்சுவையும் நையாண்டியும் (வானதி பதிப்பகம், 1980)

பாரதியும் உலகமும் (வானதி பதிப்பகம், 1981)

பாரதியும் கடவுளும் (வானதி பதிப்பகம், 1981)

பாரதியும் சமூகமும் (வானதி பதிப்பகம், 1981)

பாரதி நூல்கள் ஒரு திறனாய்வு (வானதி பதிப்பகம், 1982)

## அறிவியல்

பாரம்பரியம் (அமுத நிலையம், 2 – ம் பதிப்பு, 1956)

அடிமனம் (அமுத நிலையம், 1957)

பெற்றோர் கொடுத்த பெருங்கொடை (புக்ஸ் இந்தியா, 1954)

குமரப் பருவம் (பாரி நிலையம், 2– ம் பதிப்பு 1962)

மனமும் அதன் விளக்கமும் ( பாரி நிலையம், 1968)

கருவில் வளரும் குழந்தை (கன்யாகுருகுலம் வேதாரண்யம் 4 –ம் பதிப்பு தேதி இல்லை)

குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும் (அமுத நிலையம், 53)

## மொழி பெயர்ப்பு

இரவீந்தர் குழந்தை இலக்கியம் (கலைமகள், 1963)

கானகத்தின் குரல் (உமாதேவன் கம்பெனி, 1958)

கடல் கடந்த நட்பு (கலைஞன், 1963)

பறவைகளைப் பார் (நேஷனல் புக் டிரஸ்ட், 70)

## பதிப்பித்தவை

தாகூரின் ஐந்து கட்டுரைகள் (1962)

கவி காளமேகத்தின் சித்திரமடல்(நூல்கள் கிடைக்கவில்லை)

அவிநாசி நாவலனின் திங்களூர் நொண்டி நாடகம் (,,)

வடிவேல் பிள்ளை மோகினி விலாசம் (,,)

## தேர்வு செய்யபட்ட படைப்புகள்

தூரனின் எழுத்தோவியங்கள் (அமுத நிலையம்-1953)

**ம.ப.பெரியசாமித் தூரன்** (1908 – 1987) கவிஞர், சிறுகதைப் படைப்பாளர், கட்டுரையாளர், நாடக ஆசிரியர் எனப் பன்முகத் திறன் வாய்ந்த படைப்பாளி. அத்துடன் தமிழிசைக்கு வளம் சேர்க்கும் இசைப்பாடல்கள் தந்தவர். சிறுவர் இலக்கியத்துக்கு ஏராளமான படைப்புகள் தந்தவர். அறிவியல் நூல்களையும் அறிமுகம் செய்தவர். அவர் பணிகளுக்கு எல்லாம் மகுடமாகத் திகழ்வது தமிழின் முதல் **கலைக்களஞ்சியத்தை** உருவாக்கி அளித்த அருஞ் செயலாகும். அவரை அறிவது தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு முக்கியமான பகுதியை அறிவதாகும்.

இந்நூலை எழுதியுள்ள **சிற்பி பாலசுப்பிரமணியம்** தமிழகம் அறிந்த சிறந்த கவிஞர். கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர். பாவேந்தர் பாரதிதாசனால் பாராட்டப் பெற்ற பேராசிரியர். பல கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார். லலிதாம்பிகா அந்தர்ஜனத்தின் **அக்கினி சாட்சி, சச்சிதானந்தன் கவிதைகள்,** பெரும்படவம் ஸ்ரீதரனின் **ஒரு சங்கீதம் போல** முதலிய படைப்புகளை மலையாளத்திலிருந்து தமிழுக்குத் தந்த சிறந்த மொழி பெயர்ப்பாளர். இனிமையும் ஆற்றலும் மிகுந்த நடையில் இந்நூலை எழுதியுள்ளார்.

**Ma.Pa.Periasami Thooran (Tamil)**
**ISBN 81-260-0825-3**

**Rs.25**

**இருபத்திரண்டு இந்திய மொழிகளில் நூல்கள் வெளியிடும் சாகித்திய அக்காதெமி, உலகிலேயே மிகப் பெரிய வெளியீட்டகம்.**